www.lkedu.lk

கற்றல் கையேடு

வரலாறு

தரம் 11

- 2015 முதல் நடைமுறைப்படுத்தப்படும் புதிய பாடத்திட்டத்திற்கமைவானது.
- பாடநூல், ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி என்பவற்றிற்கேற்ப தயாரிக்கப்பட்டது.
- அலகுகளின் பாடவேளைகளையும் அதற்குரிய கற்றற்பேறுகளையும் உள்ளடக்கியது.

திரு.நா.செல்வச்சந்திரன்

ஆக்கம் :- நா.செல்வச்சந்திரன்

ஆசிரியர் யா/அராலி இந்துக் கல்லூரி.

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk || www.lkedu.lk

76667-4945

zoom Online வகுப்புக்கள்

பாலர் வகுப்பு முதல் A/L வரை

தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூல வகுப்புக்கள்



ICT

Maths English

Tamil History

Science



தனித்துவமான
புலமைப்பரிசில் பரீட்சை
வகுப்புக்கள் தரம் I தொடக்கம்
5 வரை நடைபெறுகின்றன

Contact

76667-4945

www.lkedu.lk

அலகு – 01
கைத்தொழிற்புரட்சி (பாடவேளை 08)

பாடவேளை 01

01 கைத்தொழிற் புரட்சி என்றால் என்ன?

மனிதன் தனது கைத்திறன்களைக் கொண்டு செய்த பண்ட உற்பத்தியின் வினைத்திறனை அதிகரிப்பதற்காக இயந்திரங்களைக் கண்டுபிடித்து, குறுகிய காலத்தில் கைத்தொழில் மற்றும் தொழினுட்பத்துறையில் ஏற்படுத்திய காத்திரமான மாற்றமே கைத்தொழிற் புரட்சி எனப்படுகின்றது.

02 கைத்தொழிற் புரட்சி ஏற்பட்ட காலப்பகுதி எது? 18ம் நூற்றாண்டின் பின்னரைப்பகுதி

03 கைத்தொழிற் புரட்சி ஆரம்பமான நாடு எது? பிரித்தானியா

04 கைத்தொழிற் புரட்சி ஏற்பட்ட கண்டமும் அதற்கான பிரதான காரணமும் யாது?

ஐரோப்பா

திரு.நா.செல்வச்சந்திரன்

வர்த்தக விருத்தி (குடியேற்ற நாடுகளைக் கைப்பற்றி பரவலான வெளிநாட்டு வர்த்தகத்தில் ஈடுபட்டமை')

05 கைத்தொழிற்புரட்சி இங்கிலாந்தில் ஏற்பட்டமைக்கான காரணங்கள் எவை?

1 சனத்தொகை அதிகரிப்பு

2 கைத்தொழில் துறைக்குத் தேவையான ஊழியர்கள் இலகுவாகக் கிடைத்தமை

3 பிரித்தானியாவில் காணப்பட்ட அரசியல் உறுதி நிலை

4 நிலமானிய முறையின் வீழ்ச்சி

5 விருத்தியடைந்த வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களின் தோற்றம்

6 மூலப்பொருட்களை இலகுவாகப் பெறமுடிந்தமை

7 குடியேற்ற நாடுகள் அதிகரித்தமையும் வியாபாரம் வளர்ச்சியடைந்தமையும்

www.lkedu.lk

சனத்தொகை அதிகரிப்பு

ஏனைய ஐரோப்பிய நாடுகளை விட பிரித்தானியாவில் கைத்தொழில் துறையில் முதலீடு செய்யக்கூடிய செல்வந்தர்கள் பிரித்தானியாவில் உருவாகியிருந்த அதேநேரம் சனத்தொகையும் அதிகரித்தமையால் பண்டங்களுக்கான கேள்வியும் அதிகரித்தது. அதற்கேற்ப பொருட்களை உற்பத்தி செய்ய வேண்டிய சவாலான ஒரு நிலையும் அங்கு உருவானமை.

கைத்தொழில் துறைக்குத் தேவையான ஊழியர்கள் இலகுவாகக் கிடைத்தமை

பிரித்தானியாவில் பெரிய நில உடமையாளர்களால் விவசாயிகளின் சிறிய நிலங்கள் ஒன்று சேர்க்கப்பட்டு பெரிய விவசாயப் பண்ணைகள் உருவாக்கப்பட்டன. இது வேலியடைப்பு இயக்கம் எனப்பட்டது. இதனால் காணிகளை இழந்த விவசாயிகள் வேலைதேடி நகரங்களுக்குச் சென்றனர். சிலுவை யுத்தம் முடிவடைந்த பின்னர் நிலமானிய அடிமைகள் தமது பண்ணைகளுக்குச் செல்லாமல் நகரங்களில் குடியமர்ந்தனர். இதனால் ஊழியர்கள் இலகுவாகக் கிடைத்தமை.

திரு.நி.செல்வகுமாரன்

பிரித்தானியாவில் காணப்பட்ட அரசியல் உறுதி நிலை

பிரித்தானியாவில் நிலவிய அரசியல் உறுதிப்பாடும் கைத்தொழிற்புரட்சிக்கு உதவியாக அமைந்தது. பொருளாதார வளர்ச்சிக்குக் காரணமாக அமைந்த வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான சுதந்திரம், உதவி மற்றும் வரிச்சலுகை என்பன பாராளுமன்றம் மூலம் கிடைக்கப்பெற்றது.

www.lkedu.lk

பாடவேளை 02

கைத்தொழிற்புரட்சி ஏற்பட்ட துறைகள்

01 கைத்தொழிற் புரட்சி ஏற்பட்ட துறைகள் எவை?

1 நெசவுக் கைத்தொழில் 2 இரம்புருக்கு 3 நிலக்கரிக் கைத்தொழில்

நெசவுக் கைத்தொழில்

02 நெசவுக்கைத்தொழில் இயந்திரமயமாகியமைக்கான காரணங்கள்

1 பிரித்தானியத் துணிகளுக்குக் குடியேற்ற நாடுகளில் காணப்பட்ட உயர்ந்த கேள்வி

2 நூல் நூற்பதை வேகப்படுத்த வேண்டிய தேவை

03 நெசவுக்கைத்தொழிலில் இடம்பெற்ற கண்டுபிடிப்புக்களை அட்டவணைப்படுத்துக.

திரு.நா.செல்வச்சந்திரன்

ஆண்டு	கண்டுபிடிப்பாளர்	கண்டுபிடிப்பு
1733	ஜோன்கே	பறக்கும் நூனாழி (பறக்கும் தறி ஓடம்)
1764	ஜேம்ஸ் ஹாகிரிவ்ஸ்	நூல் நூற்கும் ஜெனி
1769	ரிச்சட் ஆக்ரைட்	வலுவினால் இயங்கும் நூல் நூற்கும் இயந்திரம் அளவில் பெரியது வீடுகளில் பயன்படுத்த முடியாது வேகமான நீரோட்டம் தேவைப்பட்டது. நீரோட்ட வசதியுள்ள இடங்களில் மட்டும் பயன்படுத்தலாம்.
1776	சாமுவேல் குறோம்டன்	நூல் நூற்கும் மியூல் இயந்திரம் மென்மையான சக்தி வாய்ந்த நூலை உற்பத்தி செய்ய முடிந்தமை
1785	எட்மன் காட்ரைட்	நீராவியால் இயங்கும் மியூல் இயந்திரம்
1846	எலியஸ்கோவே	தையல் இயந்திரம்

www.lkedu.lk

பின்தொடர்வேலை :- நெசவுக்கைத்தொழிலில் இடம்பெற்ற கண்டுபிடிப்புக்களால் ஏற்பட்ட விளைவுகள் எவை?

இரும்புருக்குக் கைத்தொழில்

04 கைத்தொழில் புரட்சிக்கு முன்னர் இரும்பைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் எவை?

1 போர் ஆயுதங்கள் 2 விவசாய உபகரணங்கள்

3 வீட்டுத் தளபாடங்கள்

05 இருப்புருக்குத் தொழில் கைத்தொழில் மயமாகியமைக்கான காரணங்கள்

1 பாரிய இயந்திரங்களை தயாரிப்பதற்காகப் பாரியளவில் இரும்பும் உருக்கும் தேவைப்பட்டமை

2 விறகை எரிபொருளாகக் கொண்டு பாரியளவில் இரும்பை உருக்க முடியாமை

06 இரும்புருக்குக் கைத்தொழிலில் இடம்பெற்ற கண்டுபிடிப்புக்களை அட்டவணைப்படுத்துக

திரு.நா.செல்வச்சந்திரன்

ஆண்டு	கண்டுபிடிப்பாளர்	கண்டுபிடிப்பு
1730	ஆபிரகாம்டார்பி	நிலக்கரி மூலம் இரும்பத்தாதை உருக்கும் முறை. வார்ப்பு இரும்பு உற்பத்தி செய்ய முடிந்தது.
1784	ஹென்றிகோட்	ரோலர் இயந்திரம் மூலம் பதப்படுத்தப்பட்ட இரும்பு
1856	ஹென்றிபேஷ்மர்	இரும்பிலுள்ள கழிவுகளை அகற்றும் முறை
1878	வில்லியம்சீமன்ஸ்	இரும்பை உருக்க மின்சார சூளை உயர் தரத்திலான உருக்கை உற்பத்தி செய்ய முடிந்தமை. இலாபகரமானதாகவும் வேகமாகவும் உருக்கு உற்பத்தி செய்யப்பட்டது.

www.lkedu.lk

பின்தொடர்வேலை :- இரும்புருக்குக் கைத்தொழிலில் இடம்பெற்ற கண்டுபிடிப்புக்களால் ஏற்பட்ட விளைவுகள் எவை?

பாடவேளை 03

நிலக்கரிக் கைத்தொழில்

01 பிரித்தானியா நிலக்கரிப் படிவுகள் காணப்படும் இடங்கள் எவை?

தென்வேல்ஸ், யோக்சயர், லங்காசயர்

02 நிலக்கரி அகழ்வின் போது எதிர்நோக்கிய பிரச்சினைகள் எவை?

1 நிலக்கரிச் சுரங்கத்தினுள் ஒன்றுசேரும் நீரை வெளியேற்றுதல் கடினமாக அமைந்தமை.

2 நிலக்கரிச்சுரங்கங்களின் அடிப்பகுதியில் நச்சு வாயுக்களின் அளவும் வெப்பநிலையம் அதிகரித்தல்

3 சுரங்கத்தினுள் வெளிச்சத்தை ஏற்படுத்த முடியாமை

திரு.நா.தேவச்சந்திரன்

03 நிலக்கரித்தொழில் கைத்தொழில் மயமாகியமைக்கான காரணங்கள் எவை?

1 இரும்பை உருக்குதல், இயந்திரங்களை இயக்குதல், வீட்டுப் பாவனைக்கும் இலாபகரமான எரிபொருளாக நிலக்கரி விளங்கியமை.

2 கைத்தொழிற் புரட்சியின் பின்னர் நிலக்கரிக்கான கேள்வி அதிகரித்தமை

3 நிலக்கரித்தொழிலில் காணப்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டியிருந்தமை

www.lkedu.lk

04 நிலக்கரித்தொழிலில் இடம்பெற்ற கண்டுபிடிப்புக்களை அட்டவணைப்படுத்துக.

ஆண்டு	கண்டுபிடிப்பாளர்	கண்டுபிடிப்பு
1735	நியூகொமன்	சுரங்கத்தினுள் சேரும் நீரை வெளியேற்றவும், குழாய்கள் மூலம் குளிரான வளியை சுரங்கத்தினுள் செலுத்தி குளிரூட்டும் முறை. வினைத்திறன் குறைவு. ஏனைய கைத்தொழிலுக்கு பயன்படுத்த முடியாது.
1736	ஜேம்ஸ்வாட்	கொதிநீராவி இயந்திரம் நியூகொமனின் இயந்திரத்தை விருத்தி செய்தார். எல்லாக் கைத்தொழிலுக்கும் பயன்படுத்தக் கூடியதாக இருந்தமை.
1812	ஹம்பிறிடேவி	பாதுகாப்பு விளக்கு சுரங்கங்கள் வெளிச்சத்தைப் பெற்றுக்கொண்டன.
1839		இரும்புக் கேபிள் கம்பிகள் கண்டுபிடிக்கப்பட்டமை சுரங்கத்திலிருந்து நிலக்கரி இலகுவாகக் கொண்டுவர முடிந்தது.

05 நிலக்கரி கைத்தொழிலோடு தொடர்புடைய ஏனைய கைத்தொழில்கள்

1 பாதைகள் அமைப்பதற்கு நிலக்கரித்தார் பயன்படுத்தப்பட்டமை

2 புடைவைச் சாயவகைகள் உற்பத்தி செய்யப்பட்டமை

3 அழகுசாதனப் பொருட்கள், எண்ணெய், பசளை வகைகள் பெறப்பட்டமை

பின்தொடர்வேலை :- நிலக்கரிக் கைத்தொழிலில் இடம்பெற்ற கண்டுபிடிப்புக்களால் ஏற்பட்ட விளைவுகள் எவை?

www.lkedu.lk

கைத்தொழிற் புரட்சியின் பரம்பல்

06 கைத்தொழிற்புரட்சியின் பரம்பலின் இரு பகுதிகளும் எவை?

1 வேறு கைத்தொழில் துறைகளிலான பரம்பல்

2 வேறு நாடுகளில் கைத்தொழில் புரட்சியின் பரம்பல்

வேறு கைத்தொழில் துறைகளிலான பரம்பல்

07 கைத்தொழில் புரட்சி பரவிய ஏனைய துறைகள் எவை?

1 போக்குவரத்துத் துறையின் வளர்ச்சி

2 தொடர்பாடல் துறையின் வளர்ச்சி

3 விவசாயத் துறையில் ஏற்பட்ட வளர்ச்சி

போக்குவரத்துத் துறையின் வளர்ச்சி

தருமரா செல்வச்சந்திரன்

08 போக்குவரத்துத் துறை வளர்ச்சியடைந்தமைக்கான காரணங்கள் எவை?

1 கைத்தொழில் துறையில் ஏற்பட்ட விருத்தியினால் தொழிற்சாலைக்குத் தேவையான மூலப்பொருட்களைக் கொண்டு செல்லவும் முடிவுப்பொருட்களை சந்தைகளுக்குக் கொண்டு செல்லவும் வீதிகளை மேம்படுத்த வேண்டி ஏற்பட்டமை.

2 இதற்காக புதிய இயந்திர உபகரணங்களும் பாதைத் தொகுதிகளும் தேவைப்பட்டமை

3 அதற்கமைய பிரித்தானியாவில் பாதைகளும், போக்குவரத்துக் கால்வாய்களும் புகையிரதப் பாதைகளும் அமைக்கப்பட்டது.

www.lkedu.lk

09 போக்குவரத்துத்துறையில் ஏற்பட்ட கண்டுபிடிப்புக்கள் எவை?

ஆண்டு	கண்டு பிடிப்பாளர்	கண்டுபிடிப்பு
1814	ஜோர்ஜ் ஸ்டீவன்சன்	நீராவியால் இயங்கும் புகையிரதம் நிலக்கரி, மூலப்பொருடகளைக் கொண்டு செல்ல முடிந்தமை. முடிவுப் பொருட்களைச் சந்தைப்படுத்த முடிந்தமை. குறைந்தளவு நேரத்தில் அதிகளவான பொருட்களைக் ஒரே தடவையில் கொண்டு செல்ல முடிந்தமை.
1807	ரொபட்புல்டன்	புகைப்படகு
1811	ஹென்றிபெல்	புகைக்கப்பல்
1885	டெம்ளர்	மோட்டார் வண்டி
1903	றைட்சகோதரர்	ஆகாய் விமானம்
	ஜோன்மக்கடம்	விலுவான அத்திபாரமிட்டு பெரிய கற்களையும் மண்ணையும் பரப்பி அதன் மேல் சிறிய கருங்கற்களைப் பரப்பி அவற்றைத்தட்டி மட்டப்படுத்தி பெருந்தெருக்களை அமைக்கும் முறை

தமிழ் மொழிமூலம் தீர்வுகள்

பின்தொடர்வேலை :- போக்குவரத்துத்துறையில் இடம்பெற்ற கண்டுபிடிப்புக்களால் ஏற்பட்ட விளைவுகள் எவை?

www.lkedu.lk

பாடவேளை 4

தொடர்பாடல் துறையின் வளர்ச்சி

01 தொடர்பாடல் துறையில் ஏற்பட்ட கண்டுபிடிப்புக்கள் எவை?

1 1840இல் குறைந்த செலவில் கடிதங்களைப் பரிமாறிக்கொள்ளும் பெனீ தபால் சேவை ஏற்பட்டது. அதாவது இங்கிலாந்தின் எந்தவொரு பகுதிக்கும் ஒரு பெனீ அல்லது ஒரு பென்ஸ் செலவில் கடிதம் அனுப்ப முடிந்தமை.

2 1876இல் கேபிள் கம்பியூடாக கருத்தைப் பரிமாறிக்கொள்ளும் தொலைபேசியினை அலெக்சாண்டர் கிரஹம்பெல் கண்டுபிடித்தார்.

3 இரண்டு இடங்களுக்கிடையிலான விரைவான தொடர்பாடல் வசதிக்காக 1844இல் சாமுவேல் மோர்ஷ் என்பவரால் தந்தி முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

திரு.ந.செல்வச்சந்திரன்

4 1895 வானலைகளைப் பயன்படுத்தி செய்திகளைப் பரிமாற்ற உதவும் வானொலியினை மார்க்கோனி கண்டுபிடித்தார்.

5 ஜொன்லொகி பெயார்ட்டினால் தொலைக்காட்சி கண்டுபிடிக்கப்பட்டது.

பின்தொடர்வேலை :- தொடர்பாடல் துறையில் இடம்பெற்ற கண்டுபிடிப்புக்களால் ஏற்பட்ட விளைவுகள் எவை?

www.lkedu.lk

விவசாயத் துறையில் ஏற்பட்ட வளர்ச்சி

02 விவசாயத்துறையில் ஏற்பட்ட மாற்றங்கள் எவை / காரணங்கள் எவை?

1 பாரிய விவசாயப் பண்ணைகள் உருவாக்கப்பட்டமை.

கைத்தொழிற் புரட்சியின் காரணமாக அதிகளவான மக்கள் நகர்ப்புறம் நோக்கிச்சென்றமையாலும், கிராமப்புற சிறு விவசாயிகள் தமது நிலங்களைக் கைவிட்டமையினாலும் சிறு நிலங்களை ஒன்றிணைத்து பாரிய பண்ணைகள் உருவாக்கப்பட்டது. இவை நில அடைப்பு இயக்கம் எனப்பட்டது.

2 சுழற்சிமுறை, நிலமாற்று முறைப் பயிர்ச்செய்கை

பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்காக நிலமாற்று முறையின் அறிமுகத்தைத் தொடர்ந்து நோய்ப்பரம்பல் குறைந்தும், வினைத்திறன் அதிகரித்தும் காணப்பட்டது. ஜென்ரோட்டல் என்பவரால் ஏர் பூட்டப்பட்ட குதிரைகள் மூலம் வரிசையாக விதைக்கும் முறை ஆரம்பமானது. இதன் விதைக்கும் விதைகளின் அளவைக்குறைத்து விளைச்சல் அதிகரிக்கவும் முடிந்தது.

3 விலங்குவளர்ப்பில் புதிய தொழில்நுட்பமுறை

இதற்கு உதாரணமாக ரொபட்பேக்வெல் என்பவரால் மேற்கொள்ளப்பட்ட செம்மறியாடுகள் இனப்பெருக்கம் தொடர்பான கண்டுபிடிப்பைக் குறிப்பிடலாம்.

4 புதிய விவசாய முறைகளும் நவீன உபகரணங்களின் பயன்படும்

காடுகளை அழிப்பதற்கும் நிலத்தைப் பண்படுத்துவதற்கும், விதைகளை உற்பத்தி செய்வதற்கும் நவீன கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டன. விளைச்சலை அதிகரிக்க உரம் தயாரிப்பிலும் கவனம் செலுத்தப்பட்டது. 1800இல் குவானோ உரம் தென்னாபிரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்டு அமெரிக்காவிலும் பயன்பட்டது. இரசாயன உரங்கள், கிருமி நாசினிகள் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டது.

பின்தொடர்வேலை :- விவசாயத்துறையில் இடம்பெற்ற கண்டுபிடிப்புக்களால் ஏற்பட்ட விளைவுகள் எவை?

www.lkedu.lk

பாடவேளை 5

ஏனைய நாடுகளில் கைத்தொழிற் புரட்சியின் பரவல்

01 கைத்தொழிற் புரட்சி பரவிய ஐரோப்பிய நாடுகள் எவை?

பிரான்ஸ், ஜேர்மனி, பெல்ஜியம், ஹங்கேரி, ஆஸ்திரியா

02 ஐரோப்பாவிற்கு வெளியே கைத்தொழில் புரட்சி ஏற்பட்ட நாடு

அமெரிக்கா

03 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், 20ம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் கைத்தொழில் துறையில் அதிகளவு வளர்ச்சி கண்ட ஆசிய நாடு

ஜப்பான்(கைத்தொழிற் புரட்சி பரவிய ஆசிய நாடு)

04 20ம் நூற்றாண்டில் கைத்தொழில் புரட்சியின் செல்வாக்குப் பரவிய ஆசிய நாடுகள்

இந்தியா, சீனா, இலங்கை

05 வேறு நாடுகளில் கைத்தொழிற்புரட்சி பரவியமைக்கான காரணங்கள் எவை?

1 உலகம் முழுவதும் சனத்தொகை துரித வளர்ச்சியை அடைந்தமை

2 பொருள்களுக்கான கேள்வி அதிகரித்தமை.

3 ஐரோப்பாவில் போக்குவரத்துத் துறையில் ஏற்பட்ட வளர்ச்சி

4 பிரான்சிலும் ஜேர்மனியிலும் நிலக்கரி கண்டுபிடிக்கப்பட்டமை.

திரு.நா.தேவச்சந்திரன்

06 30000 மைல்கள் நீளமான பாதைகளை அமைத்த நாடு எது?

ஆஸ்திரியா

07 மூலப்பொருட்களும் சந்தை வசதிகளும் காணப்பட்ட பிரதேசங்களில் கைத்தொழில்கள் ஆரம்பமாகின என்பதற்கு உதாரணங்கள்

பெல்ஜியத்தின் வொலேனியா, ஜேர்மனியின் சைலிசியா – இரும்பு உற்பத்தி

சுவிற்சர்லாந்து, ஜேர்மனியின் தென் பகுதி - பருத்திப் புடவை உற்பத்தி

08 கைத்தொழில் புரட்சி பரவிய நாடுகளை உலகப் புறஉருவப்படத்தில் குறித்துக் காட்டுக.

இங்கிலாந்து, ஜேர்மனி, பிரான்சு, சுவிட்சர்லாந்து, பெல்ஜியம், ஆஸ்திரியா, ஹங்கேரி, ரஷியா, அமெரிக்கா, ஜப்பான்

www.lkedu.lk

பாடவேளை 6

கைத்தொழிற் புரட்சியினால் ஏற்பட்ட விளைவுகள் / மாற்றங்கள்

01 கைத்தொழில் புரட்சியால் ஏற்பட்ட விளைவுகள்

1 அரசியல் துறையில் ஏற்பட்ட விளைவு

1 உச்ச இலாபத்தைப் பெறும் நோக்குடன் பணத்தை முதலீடு செய்யும் பணக்கார வகுப்பினரும், உழைப்பை விற்று வாழ்க்கை நடத்தும் ஏழை வகுப்பினரும் உருவாகினர்.

2 தொழிலாளிகளுக்கு குறைந்த கூலியை வழங்கி அவர்களது உழைப்பைச் சுரண்டியமை காரணமாக அவர்களது வாழ்க்கைத்தரம் மிகவும் கீழ் மட்டத்தில் இருந்தது. இதனால் முதலாளி, தொழிலாளி முரண்பாடுகள் ஏற்பட்டு, தொழிற்சங்கங்கள், வேலைநிறுத்தங்கள் ஏற்பட்டன. இதன் காரணமாக பொதுவுடமைவாதம், தாராண்மைவாதம் ஆகிய அரசியல் கொள்கைகள் தோன்றின.

3 பொருளாதார நடவடிக்கைகளில் அரசின் தலையீடாக் கொள்கையை அடம்சிமித் என்பவர் முன்வைத்தார்.

திருமதி. செல்வச்சந்திரன்

4 குறைந்த விலைக்கு மூலப்பொருட்களைப் பெறவும் கூடிய விலைக்கு முடிவுப்பொருட்களை சந்தைப்படுத்தவும் ஐரோப்பிய நாடுகள் தமது குடியேற்ற நாடுகளில் முழுமையான அரசியல் ஆதிக்கப்போட்டியில் ஈடுபட்டன.

5 குடியேற்றங்களை விஸ்தரிக்கும் போட்டி காரணமாக முதலாம் உலக மகாயுத்தம் ஏற்படக் காரணமாகியது.

2 பொருளாதாரத்துறையில் ஏற்பட்ட விளைவு

1 கைத்தொழில் உற்பத்தி அதிகரிப்பு, வர்த்தக நடவடிக்கை பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகித்தல் என்பன ஏற்பட்டன.

2 சிறு விவசாயிகள் தமது தொழிலை மேற்கொள்ள முடியாது கைத்தொழிற்சாலைகளில் தொழிலாளர்களாகச் சென்றமையால் தன்னிறைவுப் பொருளாதாரம் மறைந்து சம்பளத்திற்கு வேலை செய்யும் வகுப்பு தோன்றியது.

www.lkedu.lk

3 விவசாயப் பொருளாதாரம் வைிடப்பட்டு ஏற்றுமதி, இறக்குமதி அடிப்படையிலான வர்த்தகப் பொருளாதாரம் தோன்றியது.

4 உலகெங்கும் முதலாளித்துவ பொருளாதாரம் வேகமாகப் பரவியது.

5 முயற்சியாளர்கள் ஒன்றிணைந்து தனித்தனி கூட்டு வர்த்தகக் கம்பனிகளை அமைத்தனர். இவை தமது நாடுகளின் அனுசரணையுடன் ஆசிய, ஆபிரிக்கா, இலத்தீன் அமெரிக்க நாடுகளில் தமது வர்த்தகத்தை மேற்கொண்டன.

6 வங்கிகள் தோற்றம் பெற்றன.

பாடவேளை 7

01 சமுகத்துறையில் ஏற்படுத்திய மாற்றம்

1 நன்மைகள்

1 ஏராளமான வேலை வாய்ப்புக்கள் கிடைத்தன.

2 மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்தமை 3 நகரங்கள் தோன்றியமை

4 தொழிலாளர் நரனோம்பல் முறை விருத்தியடைந்தமை

5 கொள்வனவுச் சக்தி அதிகரித்தது.

திரு.நா.தெய்வச்சாரான்

2 தீமைகள்

1 நகரங்களில் சனநெருக்கடி காரணமாக அடிப்படை வசதிகள் மிகக்குறைந்த

வேகத்தில் வளர்ச்சயடைந்தமை.

2 செல்வந்தர், ஏழை என்ற வகுப்பு ரீதியான சமுக அமைப்பு தோன்றியது.

3 செல்வந்தர் ஆடம்பரமான வாழ்க்கை நடத்த உழைப்பவர்களின் வாழ்க்கை கவலைக்கிடமாக மாறியது.

4 தொழிற்சாலைகளுக்கு அருகிலேயே வாழ்ந்தமையால் சேரிப்புறங்களில் வாழ்ந்த அவர்களின் சுகாதார வசதிகள் சரியாக கிட்டவில்லை.

5 ஒரே அறையில் ஒரு குடம்பம் வாழ்ந்தமையால் மதுகாவனையின் பயன்பாடு, தவறான செயல்களில் ஈடுபடல் போன்ற கலாசார சீரழிவுகளும் ஏற்பட்டன.

6 சூழல் மாசடைதல் ஏற்பட்டது.

7 பெண்கள், சிறுவர்கள் வசதி, பாதுகாப்பற்ற தொழிற்சாலைகளில் வேலை செய்தனர்.

www.lkedu.lk

02 செல்வந்த வகுப்பினரின் இரு பிரிவுகளும் எவை?

1 நில உடமைப் பிரபுக்கள்

2 மத்தியதர வர்தக்கத்தினரான வர்த்தகர்கள், தொழிற்சாலை உரிமையாளர்கள், வங்கியாளர்கள், பொறியிலாளர்கள், சட்டத்தரணிகள், ஒப்பந்தக்காரர்கள்

03 தொழிலாளர் அமைப்பினரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள்

1 தொழிலாளரின் சம்பளத்தை அதிகரித்தல்

2 வேலை நேரத்தைக் குறைத்தல்

3 அடிப்படைச் சுகாதார வசதிகளைப் பெறுதல்

04 கைத்தொழிற் புரட்சியினால் ஏற்பட்ட நன்மை தீமைகளைத் தொகுத்துத் தருக.

பாடவேளை 8

இலங்கையில் கைத்தொழிற் புரட்சியின் செல்வாக்கு

01 கைத்தொழில் புரட்சியின் தாக்கம் இலங்கையில் ஏற்படக் காரணம் யாது?

இலங்கை பிரித்தானிய குடியேற்ற நாடாக இருந்தமை

திரு.நா.செல்வச்சந்திரன்

02 பெருந்தோட்டப் பயிர்கள் எவை?

தேயிலை, தென்னை, இறப்பர்

03 இலங்கையில் கைத்தொழில் புரட்சியின் பங்களிப்புக்கள்

1 போக்குவரத்துத்துறை

1 1885இல் பெருந்தெருக்களை அமைக்கும் முறை தோன்றியது.

2 பாதைகளும் புகையிரதப் பாதைகளும் அமைக்கப்பட்டமை

3 பொருட்களை கொண்டு செல்வதற்காக பெருந்தெருக்களும், புகையிரத வீதிகளும் அமைக்கப்பட்டது.

4 ஆறுகளுக்கு குறுக்காக மரப்பாலம் அமைப்பதற்குப் பதிலாக இரும்புப்பாலம் அமைக்கப்பட்டது.

5 கொழும்புத் துறைமுகம் அபிவிருத்தி செய்யப்பட்டது

6 ஆளுநர் எட்வேட்பாண்ஸ் காலத்தில் கொழும்பு – கண்டி பிரதான வீதி அமைக்கப்பட்டது.

7 ஆளுநார் ஹென்றிவோட் புகையிரத வீதிகளை அமைக்கும்

www.lkedu.lk

நடவடிக்கையில் ஈடுபட்டடார்.

8 பின்வரும் புகையிரதப்பாதைகள் அமைக்கப்பட்ட ஆண்டுகள்

1863 – கண்டி – கொழும்பு

1871 – பேராதனை – நாவலப்பிட்டி

1899 – பேராதனை – பண்டாரவளை

2 தொடர்பாடல் துறை

1 1815இல் கொழும்பு, காலி, திருகோணமலை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் அரசாங்க தபால் சேவை ஆரம்பிக்கப்பட்டது.

2 ஆசியாவில் குதிரை வண்டிகளைப் பயன்படுத்தி தபால் சேவை இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டது.

3 1857இல் தபால் முத்திரை வெளியிடப்பட்டது.

4 1858இல் தந்தி மூலம் செய்தி பரிமாறும் முறை ஆரம்பிக்கப்பட்டது.

3 பெருந்தோட்டத்துறை

1 1804இல் பிரெட்ரிக்நோத்தினால் தேர்ப்பி விதைகளைப் பிரித்தெடுக்கும் தொழிற்சாலை அமைக்கப்பட்டது.

2 தேயிலைக் கொழுந்தை உலர்த்துதல் தொடக்கம் ஏற்றுமதிக்காகத் தரப்படுத்தல்

வரை இயந்திர சாதனங்களால் மேற்கொள்ளப்பட்டமை.

3 இறப்பரை ஏற்றுமதிக்கு தயார்படுத்துவதற்காக இயந்திர சாதனங்கள் பயன்படுத்தப்பட்டன.

02 இலங்கையில் கைத்தொழிற்புரட்சியின் செல்வாக்கால் ஏற்பட்ட விளைவுகள் எவை?

1 பெருந்தோட்டங்களில் கூலிக்கு வேலை செய்யும் வகுப்பு தோன்றியது.

2 பெருந்தோட்ட உரிமையாளரும் தொழிற்சாலை உரிமையாளரும் பணக்கார வகுப்பினராக மாறினர்.

3 முதலாளித்துவ பொருளாதார வளர்ச்சியுடன் ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகம் முன்னிலை பெற்றது.

4 வங்கிகள் தோற்றம் பெற்றன. 6 அஞ்சல் சேவை ஆரம்பிக்கப்பட்டமை

03 இலங்கையில் வளர்ச்சியடைந்த நகரங்கள் எவை?

கொழும்பு, காலி, கண்டி, கம்பளை, பதுளை, மாத்தளை, இரத்தினபுரி

www.lkedu.lk

அலகு – 02

இலங்கையில் பிரித்தானிய அதிகாரம் தாபிக்கப்படல்

பாடவேளை (12)

பாடவேளை 01

பிரித்தானியரின் ஆசிய வருகை

01 பிரித்தானியர் கீழைத்தேய நாடுகளுக்கு வருகை தருவதற்காக உருவாக்கிய

அமைப்பு :- ஆங்கில கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனி

ஆண்டு :- 1600

அனுமதி வழங்கியவர் :- 1ம் எலிசபெத்

02 முதலாவது கப்பல் குழு வர்த்தக நடவடிக்கைகைய ஆரம்பித்த இடம் எது?

சுமாத்திரா தீவு

03 இந்தியாவிற்கு வருகை தந்த கப்பல் குழுவின் தலைவர் யார்? அவர் யாருடன் வர்த்தகம் தொடர்பான பேச்சுவார்த்தைகளை நடாத்தினர்

திரு. செல்வானந்தரன்

வில்லியம் ஹொகின்ஸ்

மொகலாய மன்னன் ஜஹாங்கீர்

04 1623ம் ஆண்டு ஒல்லாந்தரால் தாக்கப்பட்ட ஆங்கிலேயர் தங்கியிருந்த கோட்டை அமைந்திருந்த இடம் எது?

அம்பொய்னா(இந்தோனேசியா)

05 பிரித்தானியர் ஆசியா மீது கவனம் செலத்தியமைக்கான காரணங்கள் எவை?

1 ஆசியாவில் போர்த்துக்கேயரும், ஒல்லாந்தரும் பெற்ற வர்த்தக இலாபத்தை தமதாக்கிக் கொள்ளல்

2 ஆசியாவில் குடியேற்ற நாடுகளைப் பெறுதல்

3 தமது புகழைப்பரப்புதல்

www.lkedu.lk

06 பிரித்தானியர் இந்தியாவில் வர்த்தக மத்திய நிலையங்களை அமைத்த இடங்கள் எவை?

சென்னை, பம்பாய், கல்கத்தா, சூரத், மசூலிப்பட்டினம்

07 இந்தியாவில் பிரான்சியர் வர்த்தக மத்திய நிலையங்களை அமைத்த இடங்கள் எவை?

பாண்டிச்சேரி, காரைக்கால், சந்திநகர்

08 பிரித்தானியர் இந்தியாவில் அரசியல் அதிகாரத்தைப் பெற முற்பட்டமைக்கான காரணம்

மொகலாயப் பேரரசின் வீழ்ச்சி

பிரித்தானியர் இலங்கை மீது கவனம் செலுத்துதல்

09 பிரித்தானியரது கவனம் இலங்கை மீது திரும்பியமைக்கான காரணங்கள் எவை?

1 **அமைவிட முக்கியத்துவம்** :-

இந்து சமுத்திரக் கப்பல் பாதையின் மத்தியில் இலங்கை அமைந்திருநத்தமை. இந்தியாவில் ஆட்சியை அமைத்துக்கொள்வதில் பிரான்சியருடனான போட்டியலிருந்து இந்து சமுத்திரக் கடலாதிக்கத்தைத் தமதாக்கிக் கொள்வதற்கு திருகோணமலைத் துறைமுகம் அவசியமாக இருந்தமை. இந்தியாவின் மேற்குக்கரை, கிழக்குக்கரைகளில் கடற்படை, வியாபார நடவடிக்கைகளை இலங்கையிலிருந்த இலகுவாக நிர்வகிக்கக் கூடியதாக இருந்தமை.

2 **வர்த்தக முக்கியத்துவம்** :-

ஐரோப்பாவுக்கு கொண்டு செல்லப்பட்ட கறுவாவில் இலங்கைக் கறுவாவுக்கு இருந்த மதிப்பு. போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் கறுவா வியாபாரம் மூலம் பெற்ற லாபத்தை ஆங்கிலேயர் தமது வசமாக்கிக் கொள்ளல். மிளகு, ஏலம், கராம்பு, முத்து, மாணிக்கம், யானைத்தந்தம் போன்ற வர்த்தகப் பொருட்கள் இலங்கையில் கிடைக்கப்பெற்றமை.

www.lkedu.lk

3 **திருகோணமலைத் துறைமுகத்தின் முக்கியத்துவம்**

1 இயற்கைத் துறைமுகமாகக் காணப்பட்டமை. ஒரே நேரத்தில் ஏராளமான கப்பல்களை நிறுத்தி வைக்க முடிகின்றமை.

2 பருவக்காற்று காலங்களில் பாதுகாப்பாக கப்பல்களை நிறுத்தி வைக்க முடிகின்றமை.

3 இந்தியாவின் மேற்கு, கிழக்கு கரையோர கப்பற்துறை, வர்த்தகத்துறை நடவடிக்கையை நிர்வகிக்க பயனுடைய நிலையமாக இருந்தமை.

4 திருகோணமலைத்துறைமுகம் வங்காள விரிகுடாவை நோக்கிய அமைந்திருந்தமை.

5 வங்களா விரிகுடாப்பகுதியில் பிரான்சியருடன் மோதல் ஏற்படும் வேளைகளில் பழுதடைந்த கப்பல்களை திருத்தி அமைப்பதற்கு துறைமுகம் ஒன்று தேவைப்பட்டமை

பாடவேளை 02

தூதுப் பயணங்கள்

திரு.நா.செல்வச்சந்திரன்

01 இலங்கைக்கு ஆங்கிலேயர் வருவதற்கான பின்னணியை ஏற்படுத்திய மன்னன் யார்?

கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன்

02 இலங்கைக்கு வருகைதந்து கண்டி அரசர்களைத் சந்தித்த ஆங்கிலேயத் தூதர்களையும் ஆண்டுகளையும், சந்தித்த கண்டி அரசர்களையும் அட்டவணைப்படுத்துக.

www.lkedu.lk

ஆண்டு	ஆங்கிலேய தூதன்	கண்டி மன்னன்	பயணத்தின் நோக்கம்	விளைவு
1762	ஜோன்பைபஸ்	கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன்	இலங்கையுடன் வர்த்தகத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளல்	ஒல்லாந்தரை வெளியேற்றுவதற்கு உதவி செய்யாத ஆங்கிலேயருடன் வர்த்தகத்தை மெற்கொள்ள கண்டி மன்னர்கள் விரும்பாமை.
1782	ஹியுபொயிட்	இராஜாதி இராஜசிங்கன்	வர்த்தக தொடர்புளை ஏற்படுத்திக்கொள்ளல்	ஒல்லாந்தரை வெளியேற்றுவதற்கு உதவி செய்யாத ஆங்கிலேயருடன் வர்த்தகத்தை மெற்கொள்ள கண்டி மன்னர்கள் விரும்பாமை.
1795	றொபட் அனட்றூஸ்	இராஜாதி இராஜசிங்கன்	ஒல்லாந்தரின் கோட்டைகளைக் கைப்பற்றிக் கொள்வதற்கு கண்டி மன்னரின் உதவிகளைப் பெற்றுக்கொள்ளல்	ஒல்லாந்தரின் கோட்டைகளை தமதாக்கி கொள்வதில் ஏற்படும் பலாபலன்களை மன்னருடன் பகிர அங்கிலேயர் விரும்பவில்லை கண்டி மன்னனின் நிபந்தனைகளை ஏற்று நீண்டகால நடபுறவு ஒப்பந்தம் ஒன்றை செய்துகொள்ள ஆங்கிலேயர் முன்வரவில்லை.

திரு.நா. தில்லைநாதன்

www.lkedu.lk

கியூ கடிதம்

03 பிரான்சியப் புரட்சி இடம்பெற்ற ஆண்டு எது?

1789

04 1794இல் ஒல்லாந்தை பிரான்ஸ் ஆக்கிரமித்தபோது இங்கிலாந்துக்கு தப்பியோடிய இளவரசன் யார்?

ஸ்டாட்ஹோல்டர் (5ம் ஒறேஞ் வில்லியம்)

05 கியூ கடிதம் என்றால் என்ன?

இங்கிலாந்தின் கியூ மாளிகையில் வைத்து 5ம் ஒறேஞ்வில்லியத்தினால் ஒல்லாந்தரிடம் இருக்கும் இலங்கை பிரான்சியர் வசமாவதைத் தடுத்துக்கொள்வதற்காக தற்காலிகமாக அதனை ஆங்கிலேயரிடம் ஒப்படைக்கவும் எனக் குறிப்பிட்ட கடிதமாகும்.

06 கியூக் கடிதத்தை ஏற்க மறுத்த ஒல்லாந்து ஆளுநர் யார்?

பன்எங்கள்பேர்க்

திரு.நா.செல்வக்குமரன்

பாடவேளை 03

பிரித்தானியர் இலங்கையின் கரையோரத்தைக் கைப்பற்றுதல்

01 பிரித்தானியரால் திருகோணமலைத் துறைமுகம் கைப்பற்றப்பட்ட ஆண்டு எது?

1795

02 திருகோணமலைக் கோட்டையைத் தொடர்ந்து பிரித்தானியரால் கைப்பற்றப்பட்ட கோட்டைகள் எவை?

மட்டக்களப்பு, முல்லைத்தீவு, பருத்தித்துறை, யாழ்ப்பாணம், மன்னார்

03 ஒல்லாந்தருக்கும் ஆங்கிலேயருக்குமிடையில் உடன்படிக்கை இடம்பெற்ற ஆண்டு

1796 பெப்பிரவரி 16

www.lkedu.lk

04 இலங்கையைப் பிரித்தானியரின் குடியேற்ற நாடாக்குவதில் முனைப்பாகத் தெரியும் மூன்று சந்தர்ப்பங்களும் எவை?

1 1796இல் இலங்கையின் கரையோரப் பிரதேசம் முழுவதையும் ஆங்கில கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியினரால் கைப்பற்றப்பட்டது.

2 1802இல் முடிக்குரிய குடியேற்ற நடாக்கப்பட்டமை

3 1815ம் ஆண்டு கண்டி இராச்சியம் கைப்பற்றப்பட்டமை

சென்னை ஆட்சி

05 ஆங்கில கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியினரின் ஆட்சி இடம்பெற்ற ஆண்டுகள்

1796 – 1798.

06 இது சென்னை ஆட்சி என அழைக்கப்பட்டது.

ஆங்கில வர்த்தகக் கம்பனியினர் கரையோரத்தில் சென்னையிலிருந்து அழைத்து வந்து நிர்வாகத்தை மேற்கொண்டமையால்

திரு.நா.செல்வேந்திரன்

07 சென்னை ஆட்சிமுறையின் நிர்வாக நடவடிக்கைகள்

1 கரையோரப்பிரதேசத்தை நிர்வகிக்க வதிவிடப்பிரதிநிதி ஒருவர் நியமிக்கப்பட்டார்.

2 வரி அறவிடுவதற்காக உதவிப் பரிசோதகர்கள்(கலெக்டர்) நியமிக்கப்பட்டனர்.

3 கலெக்டர்களின் நிர்வாக மையம் கச்சேரி எனப்பட்டது

4 கலெக்டர்களுக்கு உதவியாக நியமிக்கப்பட்டவர்கள் அவுமில்தார்கள் எனப்பட்டனர்

www.lkedu.lk

1797 கிளர்ச்சி

08 ஆங்கில கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனிக்கு எதிராக கரையேரப்பகுதியில் கிளர்ச்சி இடம்பெற்ற ஆண்டு எது?

1797

09 நிர்வாக அதிகாரிகளுக்கும் பொதுமக்களுக்கும் இடையில் இடைவெளி அதிகரித்தமைக்கான காரணங்கள் எவை?

1 முதலியார் எனப்பட்ட சுதேச உத்தியோகத்தர்கள் கவனிப்பாரற்று விடப்பட்டமை. அப்பதவிகளுக்குத் தேவையானோர் சென்னையிலிருந்து வரவழைக்கப்பட்டமை.

2 அவர்களுக்கு இந்த நாட்டின் மொழி, கலாசாரம், சம்பிரதாயங்கள் போன்றவற்றில் அனுபவமின்மை. சிவில் நிர்வாக நடவடிக்கைகளில் ஈடுபடும் போது மக்களுடன் முரண்பாடுகள் ஏற்பட்டமை.

10 ஆங்கில வர்த்தகக் கம்பனியின் ஆட்சியின் வெளிப்படையான இயல்புகள் எவை?

கரையோரப்பிரதேசங்களைக் கைப்பற்ற பெருந்தோகையான பணம் செலவிடப்பட்டதால் குறுகிய காலத்தில் அதிக இலாபத்தைப் பெற்றுக்கொள்வது

திரு.நா.செல்வக்குமாரன்

11 1797 கிளர்ச்சிக்கான காரணங்கள்

1 வரி அறவிடுவதற்கு அவுமில்தார்கள் நியமிக்கப்பட்டமை (இந்நாட்டின் கலாசாரம்,

மொழி, சம்பிரதாயங்கள் என்பனவற்றை அவர்கள் அறிந்திருக்காமை)

2 அவுமில்தார்கள் மக்களை கஷ்ரப்படுத்தி வரி அறவிட்டமை

3 பணப்புழக்கம் இல்லாத காலத்தில் பணமாக வரி அறவிடப்பட்டமையால் மக்களுக்கு ஏற்பட்ட அசௌகரியம்.

4 புதிய வரிகள் அறவிடப்பட்டமை (தென்னை வரி(10 தென்னை மரங்களுக்கு மேல் உள்ள காணிகளில் ஒரு தென்னைமரத்திற்கு ஒரு வெள்ளிக்காசு), கள்வரி, மீன்வரி, சாராயவரி, உப்புவரி)

www.lkedu.lk

12 இக்கிளர்ச்சிக்கான காரணங்களைக் கண்டறிய நியமிக்கப்பட்டவர் யார்?

கேணல்டி.மியூறன்

13 மியூறன் குழுவின் சிபாரிசுகள் எவை?

1 வரிஏல விற்பனைமுறையை நீக்குதல்

2 வரி அறவிடுவதற்குச் சென்னை அதிகாரிகளுக்குப் பதிலாக உள்நாட்டவரை நியமித்தல்

3 புதிய வரிகள் நீக்கப்பட்டமை

4 ஒல்லாந்தரின் நீதிமன்ற முறையை மீண்டும் நடைமுறைப்படுத்துதல்

5 வரிவசூலிப்பதற்கும் நீதிவழங்குவதற்கும் வெவ்வேறான உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படல்

இரட்டை ஆட்சி

14 முதலாவது பிரித்தானிய ஆளுநராக நியமிக்கப்பட்டவர் யார்?

பிரெட்ரிக்நோத்

திரு.நா.செல்வச்சந்திரன்

15 இரட்டை ஆட்சி என்றால் என்ன?

இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் அரசியல் நடவடிக்கைகளை பிரித்தானிய அரசாங்கமும் பொருளாதார நடவடிக்கைகளை வர்த்தகக் கம்பனியும் இணைந்து மேற்கொள்ளப்பட்ட ஆட்சி முறையாகும்.

16 இரட்டை ஆட்சிமுறை ஏற்பட்டமைக்கான காரணங்கள் ைவ?

1 சென்னை நிர்வாகத்தின் பலவீனங்களைப் பிரித்தானிய முடி புரிந்து கொண்டமை.

2 1797இல் கரையோர மக்களின் கிளர்ச்சி

3 பிரான்சில் நெப்போலியன் இந்த சமுத்திரத்தை அண்டிய பிரதேசங்களில் ஆதிக்கம் பெறுவதை தடுக்க பிரித்தானிய முடி எண்ணியமை.

www.lkedu.lk

17 இரட்டை ஆட்சிமுறை தோல்வியடைந்தமைக்குரிய காரணங்கள்

1 கம்பனியின் அலுவர்கள் முடியுமானளவில் இலாபத்தினை ஈட்டிக் கொள்வதற்காக கபடமான முறைகளைக் கையாண்டமை.

2 இந்நாட்டு மக்கள் பற்றிய விளக்கமற்றிருந்த அரசாங்க அலுவர்கள் திறமையற்றவர்களாக இருந்தமை.

3 பிரித்தானிய முடியினுடைய ஆளுநரின் அலுவலர்களுக்கும் கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியின் அலுவலர்களுக்கும் இடையே நல்லுறவு காணப்படாமை.

18 இலங்கை குடியேற்ற நாடாக்கப்பட்ட ஆண்டு எது? 1802

பாடவேளை 04

01 பிரெட்ரிக் நோத் கொண்டு வந்த சீர்திருத்தங்கள்

1 இராஜகாரிய முறையை நீக்கியமை.

2 பல அரச திணைக்களங்களை உருவாக்கினார் - தபால் திணைக்களம், நில அளவைத் திணைக்களம், பொதுவேலைகள் திணைக்களம்

3 சுகாதார வசதிகளை ஏற்படுத்தினார் - வைத்தியசாலை அமைத்தல், அம்மைத் தடுப்பு மருந்து வழங்கல்

4 நீதி பரிபாலத்தினை விருத்தி செய்தல் - சட்டத்துறையில் திருத்தங்களை மேற்கொண்டார், இலங்கையின் சட்டத்தொகுப்பை வெளியிட்டார், கிரிமினல் நீதிமன்றம், உயர் நீதிமன்றம் என்பவற்றை நிறுவினார்.

02 1798இல் இராஜாதி இராஜசிங்கன் இறந்த போது கண்டி ஆட்சி உரிமையில் இடம்பெற்ற சம்பவங்கள் எவை?

1 கண்டி சிம்மாசனத்துக்குரிய இரு இளவரசர்கள் காணப்பட்டமை

2 ஒருவர் கண்ணுசாமி, மற்றையவர் முத்துசாமி என்பவர்கள் ஆவார்.

3 கண்டியின் பிரதம பிரதானியான பிலிமத்தலாவை தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி கண்ணுசாமி ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் என்ற பெயரோடு ஆட்சிக்கு வந்தான்

4 முத்துசாமி பாதுகாப்புக்கோரி ஆங்கிலேயரிடம் தஞ்சமடைந்தான்

www.lkedu.lk

03 1800இல் கண்டிக்குச் சென்ற தூதுக்குழுவின் தலைவன் யார்? அதன் நோக்கம் யாது?

மெக்டோவல்

இத்தூதுக்குழுவில் 1164 இராணுவத்தினரும், 8 பீரங்கிகளும் அதில் இடம்பெற்றிருந்தன. தமது படைபலத்தைக்காட்டி தமக்குச் சார்பான ஒப்பந்தம் ஒன்றிற்கு ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனை இணங்கச் செய்வதே இதன் நோக்கமாக இருந்தது.

04 பிரித்தானியர் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்ற மேற்கொண்ட முயற்சிகள் எவை?

1 1803இல் பிரெட்ரிக்நோத்தினது ஆக்கிரமிப்பு

2 1815இல் றொபட் பிறவுண்றிக்கின் ஆக்கிரமிப்பு

1803இல் கண்டி மீதான ஆக்கிரமிப்பு

05 நோத் கண்டி மீது படையெடுத்தமைக்கான காரணங்கள்

1 கரையோரமாகவும் கண்டி இராச்சிய எல்லையிலுமாக இரு படையணிகளை சேவையில் அமர்த்த வேண்டியிருந்தமை.

2 கண்டி இராச்சியத்துக்குள் பிரவேசிக்கும் கடவைகளில் வரி செலுத்த வேண்டியிருந்தமை.

3 கரையோர மக்களும் கண்டி மன்னனைத் தமது தலைவனாகக் கருதியமை.

4 பிலிமத்தலாவை மகா அதிகாரம் கண்டி அரசனாவதற்கு ஆங்கிலேயரின் உதவியை நாடியமை.

5 கரையோரப்பகுதிகளில் ஏற்படும் கிளர்ச்சிகளுக்கு கண்டி மன்னன் ஆதரவளித்தமை.

6 கண்டி மன்னன் பிரான்சியரின் உதவியை நாடுக்கூடும் என்ற அச்சம்.

7 நிர்வாகத் தலைமையமான கொழும்புக்கும் கடற்படைத் தலைமையகமான திருகோணமலைக்குமிடையே தரைப்பாதை அமைக்க கண்டி மன்னன் இணங்காமை.

திரு.நாகேஸ்வரசர்மா

www.lkedu.lk

06 பிரெட்ரிக்நோத் கண்டி மீது படையெடுத்த ஆண்டு எது?

1803

07 1803இல் இடம்பெற்ற கண்டி மீதான ஆக்கிரமிப்புக்கு தலைமை தாங்கியவர் யார்?

மெக்டோவல்

08 1803 படையெடுப்பிற்கு தலைமை தாங்கியவர்கள்

கொழும்பு - மக்டோவல் - கலகெதர கணவாய்

திருகோணமலை- பாபட் - மாத்தளைக் கணவாய்

09 ஆங்கிலப் படைகள் கண்டிக்குள் நுழைந்த போது கண்டி மன்னன் பின்வாங்கிய இடம்

அங்குராங்கெத்த

10 பிரித்தானியரால் கண்டியின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டவன் யார்?

முத்துசாமி

11 நோத்தின் கண்டி மீதான படையெடுப்பு தோல்வியடைந்தமைக்கான காரணங்கள்

1 கண்டி இயற்கை அரண்களைக் கொண்டிருந்தமை

2 மலையகத்திற்குள் நுழையும் பாதைகள் ஒற்றையடிப்பாதைகளாக இருந்தமை

3 கண்டி மன்னனின் யுத்த தந்திரம் அதாவது கெரில்லா தாக்குதல் காரணமாக ஆங்கிலேயருக்கு அதிக இழப்புக்கள் ஏற்பட்டமை

4 மலைநாட்டுச் சிங்களவரின் ஒற்றுமையும் அரச விசுவாசமும்

5 மழைக்காலம் ஆரம்பமானதால் ஆங்கிலேயப்படைகளிடையே நோய்கள் ஏற்பட்டமை

6 கரையோரப்பகுதிகளுடனான தொடர்புகள் துண்டிக்கப்பட்டதால் உணவு, குடிபானங்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டமை

7 கொழும்புடனான தகவல்தொடர்புகள் பாதிக்கப்பட்டமை

www.lkedu.lk

பாடவேளை 05

01 நோத்திற்குப் பிறகு பதவி ஏற்ற ஆளுநர் யார்?

தோமஸ் மெயிட்லண்ட்

02 தோமஸ் மெயிட்லண்ட் கொண்டுவந்த சீர்திருத்தங்கள் எவை?

1 இராஜகாரிய முறையை மீண்டும் கொண்டு வந்தார்.

2 ஜூரிசபை மூலம் வழக்குகளை விசாரிக்கும் முறையை அறிமுகம் செய்தமை

3 திசாவைகள், முதலியார்கள், விதானைமார்களின் அதிகாரங்கள் குறைக்கபட்டமை பதவி உயர்வுக்கு சிவில் உத்தியோகத்தர்கள் தமிழ் அல்லது சிங்களத்தில் தேர்ச்சி பெற வேண்டும்.

03 கண்டியைக் கைப்பற்றுவதற்கான பின்னணியை ஏற்படுத்த தோமஸ் மெயிட்லண்டினால் நியமிக்கப்பட்டவன் யார்?

ஜோன்டொயிலி

04 கண்டியைக் கைப்பற்றுவதற்கான தந்திரமான கொள்கையை மேற்கொண்ட பிரித்தானிய ஆளுநர் யார்? தோமஸ் மெயிட்லண்ட்

05 ஜோன்டொயிலிக்கு சிங்கள மொழியைக் கற்றுக்கொடுத்தவர் யார்?

கரதொட்ட தர்மராமதேரர்

06 ஜோன்டொயிலி எப்பெண் கவிஞருக்கு இணையாகப் கவிபாடும் திறமை பெற்றிருந்ததாகக் கூறப்படுகின்றது? கஜமன்நோனா

07 கண்டியைக் கைப்பற்றுவதற்கு ஜோன்டொயிலி எடுத்த நடவடிக்கைகள் எவை?

1 தேசிய கலாசாரத்தை இழிவுபடுத்தாமல் அவற்றைக் கற்றுக்கொண்டார்.

2 கண்டிப் பிரதானிகளுடன் இரகசியத் தொடர்புகளை ஏற்படுத்தி அவர்களை ஆங்கிலேயருக்கு சார்பானவர்களாய் மாற்றியமை

3 வியாபாரிகள், அறிஞர்கள், சமய குருமார் போன்று 65டம் பூண்ட ஒற்றர்களை கண்டிக்கு அனுப்பி இராச்சியத்தின் உள்நாட்டு விடயங்கள் தொடர்பான தகவல்களைச் சேகரித்தார்.

www.lkedu.lk

08 தோமஸ் மெயிட்லண்டின் பின்னர் ஆளுநராக நியமிக்கபட்டவர் றொபட் பிறவுண்றிக் பிரித்தானியர் கண்டியைக் கைப்பற்றிக்கொள்ள முடிந்தமைக்கான காரணங்கள் எவை?

1 ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனுக்கும் பிரதம பிரதானி பிலிமத்தலாவைக்குமிடையிலான கருத்து வெறுபாடுகள்.

2 பிரதானிகளிடையே காணப்பட்ட பேதங்கள்

3 மன்னனுக்கும் பிக்குகளுக்குமிடையிலான நல்லுறவு பாதிக்கப்பட்டமை

4 மன்னன் மீது மக்கள் கொண்ட வெறுப்பு

5 ஜோன்டொயிலியின் செயற்பாடுகள்

றொபட் பிறவுண்றிக்கின் கண்டி மீதான ஆக்கிரமிப்பு

09 கண்டி இராச்சியம் ஆங்கிலேயர் வசமாவதற்குக் காரணமான ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனின் செயற்பாடுகள் எவை?

1 அனுபவம் குறைந்த வாலிபனாக இருந்தமையால் நாயக்க உறவினர்களின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு நடந்தமை

திரு.நா. செல்வராஜ்தீரன்

2 தன்னை மன்னனாக்கிய பிலிமத்தலாவையுடன் முரண்பாடு ஏற்பட்டு தன்னைக் கொல்ல மேற்கொள்ளப்பட்ட சதி அம்பலமானதால் பிலிமத்தாலவையைக் கொலை செய்தமை

3 கண்டியின் இறுதிப் பிரதானிகளாக நியமிக்கப்பட்ட இருவருடனும் முரண்பாடுகள் ஏற்பட்டமை

4 கண்டிப் பிரதானிகளுக்கிடையேயும் பேதங்கள் காணப்பட்டமை. ஆதனால் பெரும்பாலன பிரதானிகள் அரசனுக்கு எதிராகச் செயற்படும் நிலை ஏற்பட்டமை

5 அரசனால் பிக்குகள் பலர் கொலை செய்யப்பட்டமையால் அரசனுக்கும் பிக்குகளுக்குமிடையிலான நல்லுறவு பாதிக்கப்பட்டது.

www.lkedu.lk

10 அரசனுக்கும் பொதுமக்களுக்குமிடையிலான உறவு சீர்குலைந்தமைக்கான காரணங்கள் எவை?

1 போகம்பரைவாவியை விஸ்தரித்தல், தலதாமாளிகைக்கு பத்திரிப்பு அமைத்தல் போன்ற பணிகளில் ஈடுப்ட்டிருந்த சப்ரகமுவ, ஏழுகோறளை, நான்குகோரளை மக்கள் இரவு வேளையில் கண்டி நகருக்குள் தங்குவதற்கு தடை விதிக்கப்பட்டமை

2 எஹலபொலவின் மனைவியையும் பிள்ளைகளையும் கொடூரமாகக் கொலை செய்தமை

11 றொபட்பிறவுண்றிக் கண்டி மீது படையெடுத்த ஆண்டு எது? 1815

12 இப்படையெடுப்பு இடம்பெற்றமைக்கான உடனடிக் காரணம் யாது?

கரையோரத்திலிருந்து கண்டி இராச்சியசத்தை நோக்கிச் சென்ற வணிகக் குழுவொன்றுக்கு மன்னர் கடும் தண்டனை விதித்தமையால்

திரு.நாகராஜல்வச்சந்திரன்

13 இப்படையெடுப்பின்போது ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் மறைந்திருந்த இடம் எது?

மெதமகநுவர

14 ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் சிறைவைக்கப்பட்ட இடம் எது?

இந்தியாவின் வேலூர்

பாடவேளை 06

கண்டி உடன்படிக்கை

15 கண்டி உடன்படிக்கை இடம்பெறக் காரணம் யாது?

ஆங்கிலேயர் கண்டியைக் கைப்பற்ற முடிந்தமைக்கு கண்டிப் பிரதானிகள் வழங்கிய ஒத்துழைப்பே காரணமாகும். ஆகையால் அவர்களுடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்வதன் மூலம் கண்டி இராச்சிய வெற்றியை முழுமைப்படுத்துவதற்கு

www.lkedu.lk

16 கண்டி உடன்படிக்கை இடம்பெற்ற ஆண்டு எது?

1815 – மார்ச் 2ம் திகதி அரசசபை(மகுல்மடுவ) மண்டபத்தில் வைத்து யையெழுத்திடப்பட்டது. கண்டி இராச்சியம் பிரித்தானியருக்கு அடிமைப்பட்டமையை உறுதிப்படுத்தும் ஆவணம் ஆகம்.

17 கண்டி உடன்படிக்கை இடம்பெறுவதற்கு முன்னர் ஏற்றப்பட்ட பிரித்தானியக்கொடியை இறக்கிவிட்டு மீண்டும் சிங்கக்கொடியை ஏற்றியவர் யார்?

வாரியபொல ஸ்ரீ சுமங்கலதேதர்

18 கண்டி உடன்படிக்கையில் கையெழுத்திட்ட மலையகத் தலைவர்கள் யாவர்

எஹலப்பொல, மொல்லிகொட, கலகொட, கலஹம

19 கண்டி உடன்படிக்கையை வரைந்தவர் யார்?

ஜோன்டொயிலி

20 பிரித்தானிய முடியின் சார்பாக கையெழுத்திட்டவர் யார்?

றொபட் பிறவுண்றிக்

திரு.நா.செல்வகுமாரன்

21 கண்டி உடன்படிக்கையில் எத்தனை வாசகங்கள் உள்ளன

12

22 கண்டி உடன்படிக்கையின் முக்கிய வாசகங்கள் எவை?

1 1 – 3 வாசகங்கள் - இராஜசிங்க மன்னனுக்கும் அவரனது உறவினர்களுக்கும் கண்டி சிம்மாசனத்தின் மீதிருந்த நகல உரிமைகளையும் நீக்கியது.

2 4வது வாசகம் - கண்டி இராச்சியம் ஆங்கிலேயரின் ஆட்சிக்குட்பட்டதென்றும், பிரதானிகளின் உரிமைகளும் சலுகைகளும் பாதுகாக்கப்படும் வண்ணம் ஆட்சி நடைபெறும் எனவும் கூறப்பட்டது. புத்தசாசனமும் கிறிஸ்தவமும் பாதுகாக்கப்படும்.

3 ஏனைய வாசகங்கள் - கண்டி இராச்சிய நீதிமுறைகள்

23 கண்டியில் வதிவிடப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டவர் யார்? ஜோன்டொயிலி

www.lkedu.lk

பாடவேளை 07

1818 சுதந்திரப் போராட்டம்

01 முதலாவது சுதந்திரப் போராட்டம் என்பது யாது?

1817 செப்டெம்பர் மாதத்திலிருந்து 1818ம் ஒக்டோபர் மாதம் வரை கண்டியில் நிலவிய ஆங்கிலேயர் ஆட்சிக்கு எதிராக மக்கள் ஆயுதபாணிகளாகக் கிளர்ந்தெழுந்தமையாகும்.

02 முதலாவது சுதந்திரப் போராட்டத்திற்கான காரணங்கள்

1 சுதத்திரத்தை இழந்தமையும் அரசன் இல்லாமையும் பற்றிய மனவேதனை

2 சமய, கலாசார பாதுகாப்புத் தெர்ர்பாக பிரச்சினைகள்

3 மலைநாட்டுப் பிரதானிகளுக்கு ஏற்பட்ட தாக்கம்

4 மடிகே முகாந்திரம் பதவிக்கு ஹஜ்ஜி மரிக்கார் நியமிக்கப்பட்டமை (உடனடிக் காரணம்)

1 சுதந்திரத்தை இழந்தமையும் அரசன் இல்லாமையும் பற்றிய மனவேதனை

நாடு அடிமைப்பட்டதன் பின்னர் பிரித்தானிய அரசரே கண்டிக்கும் அரசர் எனப் பிரகடனப்படுத்தப்பட்டாலும் மக்கள் ஒருபோதும் அவரைக் கண்டதில்லை. மக்களுக்கு தேவைப்பட்டது ஆயிரம் மைல்களுக்குப்பால் கண்காணாத இடத்தில் உள்ள ஒரு மன்னரையல்ல. தமது தலைநகரில் தமது இன்ப துன்பங்களை முன்வைத்து உதவி பெறத்தக்க மன்னரையேயாகும். இவ்வாறு இல்லாமையினால் தாங்கள் அனாதரவானவர்கள் என்ற உணர்வு மக்களுக்கு ஏற்பட்டது. மலையகத்தில் வாழ்ந்த பிக்கு ஒருவர் அரசர் இல்லாமை பற்றி ‘‘ஐயோ எறும்புகளே! ...’’ என்ற பாடலைப் பாடியுள்ளார்.

LEARN EASY
KNOWLEDGE IS POWER

அழையுங்கள் :
76667-4945

zoom

எப்பாத்திலிருந்தும்
இணையலாம்





தரம் 1
தொடக்கம்

தரம் 5
வரை

- பாடத் தெரிவுகள் செய்ய முடியாது.
- சகல பாடங்களுக்குமான மாதக்கட்டணம்
- அனைத்து பாடங்களுக்குமான recording வழங்கப்படும்.

நுண்ணறிவு
வினாத்தாள்
(பகுதி 1, பகுதி 2)

Spoken English

தமிழ்
கணிதம்
சுற்றாடல்
ஆங்கிலம்
சிங்களம்

www.lkedu.lk

2 சமய, கலாசார பாதுகாப்புத் தெர்ர்பாக பிரச்சினைகள்

கண்டி உடன்படிக்கையின் 5வது வாசகத்தில் பௌத்தத்திற்கு உரிய இடம் வழங்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டாலும் அம்மதத்தைச் சாரதவர்களால் உரிய இடம் வழங்கப்படும் எனக் கருதவில்லை.

வெளிநாட்டவரின் ஆட்சியில் தமது கலாசாரமும், சம்பிரதாயங்களும் அழிந்துபோகும் என்ற பயம் மக்கள் மத்தியில் ஏற்பட்டது. பழைய சம்பிரதாயங்களைப் பாதுகாத்தல் அரசனின் கடமையாகும். பழைய ஆட்சியில் தமது பதவிக்குத் தகுந்த ஆடை, ஆபரணங்களை அணிந்தமை வெற்றின் கௌரவத்தைப் பாதுகாப்பதற்காகும். ஆனால் ஆங்கிலேயர் அவ்வாறானவர்கள் அல்ல. எனவே ஆங்கிலேயருக்கும் கண்டியருக்குமிடையே இடைவெவெளி ஏற்பட்டது.

3 மலைநாட்டுப் பிரதானிகளுக்கு ஏற்பட்ட தாக்கம்

கண்டியில் பாரம்பரிய பதவிகளை தொடரந்து பேணிவந்தாலும். பிரதானிகளின் அதிகாரமும் சமூக நிலைமையும் பாதுகாப்பற்றதாக இருந்தது.

திரு.நா.செல்வக்குமரன்

பிரித்தானியப் பிடையினர் தமக்கு மரியாதை தருவதில்லை என டொயிலியிடம் முறைப்பாடு செய்தனர்.

4 பிரதானிகளின் சம்பிரதாய வருமான வழிகளும் தடைப்பட்டமை

கண்டி இராச்சியத்தின் போக்குவரத்துக் கடமைகளுக்குப் பொறுப்பாக இருந்த மடிகே முகாந்திரம் பதவிக்கு இதுவரை சிங்களவரே நியமிக்கப்பட்டபோதும் ஆங்கிலேயர் ஹஜ்ஜி மரிக்கார் என்பவரை அப்பதவிக்கு நியமித்தமை.

இதனால் பிரதானிகளிடையே சஞ்சலம் ஏற்பட்டது.

03 முதலாவது சுதந்திரப் போராட்டம் ஆரம்பமான இடம் எது?

ஊவா வெல்லஸ

www.lkedu.lk

பாடவேளை 08

முதலாவது சுதந்திரப் போராட்டத்தின் தன்மை

01 கண்டி இராச்சியத்தின் உரிமையாளன் எனக்கூறி ஊவா வெல்லஸ பிரதேசத்தில் நடமாடியவர் யார்?

துரைசாமி

02 துரைசாமிக்கு உதவி வழங்கிய பிரதேசத்தலைவர் யார்?

கொகுகும்பரே ரட்டேரால

03 துரைசாமியின் நடமாட்டத்தை அறிந்து நடவடிக்கையெடுத்த பதுளையின் அரச அதிபர்

டக்ளஸ் வில்சன்

04 துரைசாமியை கைதுசெய்ய டக்ளஸ் வில்சனால் அனுப்பப்பட்டவர் யார்?

ஹஜ்ஜி மரிக்கார்

05 வெல்லஸ பிரதேசத்தில் இடம்பெற்ற கலவரத்தை அடக்குவதற்காக படைகளுடன் அனுப்பப்பட்டு பின்னர் போராளிகளுடன் இணைந்து கொண்டவர் யார்?

கெப்பட்டிப்பொல திசாவை

திரு.நா.செல்வராஜா

06 1வது சுதந்திரப் போராட்டத்தில் பங்குபற்றாத பிரதானிகள் யாவர்

மொல்லிகொட, எக்னெலிகொட

07 இப்போராட்டத்தை அடக்குவதற்காகப் பிறப்பிக்கப்பட்ட சட்டம் எது?

மார்ஸல்லோ (இராணுவச் சட்டம்)

08 1வது சுதந்திரப் போராட்டத்தை அடக்க ஆங்கிலேயர் பின்பற்றிய வழிமுறைகள் எவை?

1 இராணுவச்சட்டத்தை விதித்தமை

2 கரையோரப்பகுதியிலிருந்த இராணுவம் கண்டிக்கு அனுப்பப்பட்டமை

3 நிலத்தைப் பாழடையச்செய்யும் கொள்கையைக் கடைப்பிடித்தமை

4 கிராமங்களுக்குத் தீயிடல், மக்களின் சொத்துக்களை அழித்தல், இயன்றளவு மக்களை கைதுசெய்து இராணுச்சட்டத்திற்கு உள்ளாக்குதல்

5 மொல்லிகொட நிலமே அதிகாரத்தின் நிர்வாகப் பிரதேசமான நான்குகோறளை ஊடாக கொழும்புடன் தொடர்புகளை ஏற்படுத்தியமை

www.lkedu.lk

09 பிரித்தானியரால் கைதுசெய்யப்பட்ட போராட்டத்தலைவர்கள் யாவர்

கலகெதர மொகட்டலா, கதிர்காம பசநாயக்க நிலமே, பூட்டாவே ரட்டேரால, எஹலபொல

10 1வது சுதந்திரப் போராட்டத்தில் குற்றவாளிகளாகக் கருதப்பட்டு மரணதண்டனை விதிக்கப்பட்டவர்கள் யாவர்

கெப்பட்டிப்பொல திசாவை, மடுகல்லதிசாவை, எல்லெபொல

பாடவேளை 09

முதலாவது சுதந்திரப் போராட்டம் தோல்வியடைதல்

01 1818ம் ஆண்டு சுதந்திரப் போராட்டம் தோல்வியடைந்தமைக்கான காரணங்கள்

1 ஆங்கிலேயர் கையாண்ட கடுமையான அடக்குமுறைக்கொள்கை

2 நீண்டகாலப் போராட்டத்திற்கு தேவைப்பட்ட ஆயுதங்களோ வளங்களோ கண்டியரிடம் காணப்படாமை

3 போராட்டம் முறையாக மேற்கொள்ளப்படாமை

4 அரசனாகத் தோன்றிய நபர் அரசுரிமையற்ற போலியானவன் என்று தெரியவந்தமை

5 புனிததந்ததாது ஆங்கிலேயர் வசமானமை

6 உயர்குடி வர்க்கத்தினருக்கு இடையிலான தனிப்பட்ட குரோதங்கள்

02 1வது சுதந்திரப் போராட்டத்தின் விளைவுகள்

1 எல்லெபொல, கெப்பட்டிப்பொ, மடுகல்ல போன்ற தலைவர்கள் தமது உயிரைத் தியாகம் செய்தமை

2 பல பிரதானிகளின் சொத்துக்கள் அரசுடமையாக்கப்பட்டன.

3 போராட்டத்தை ஆதரித்த தலைவர்கள் பலர் நாடு கடத்தப்பட்டனர்

4 ஆங்கிலேயருக்கு ஆதரவாக இருந்த மொல்லிகொட, என்னெலிகொட போன்ற பிரதானிகளுக்கு பல்வேறு சலுகைகள் வழங்கப்பட்டமை

www.lkedu.lk

03 ஆங்கிலேயர் கண்டி இராச்சியத்தில் தமது அதிகாரத்தை உறுதிப்படுத்த கண்டிப் பிரகடனத்தை வெளியிட்ட ஆண்டு எது?

1818 நவம்பர் 21

04 கண்டிப்பிரகடனத்தில் காணப்பட்ட அம்சங்களின் எண்ணிக்கை எத்தனை

56

05 1818இல் வெளியிடப்பட்ட கொள்கைப் பிரகடனத்தின் முக்கிய அம்சங்கள்

1 கண்டியப் பிரதானிகள் ஆங்கிலேயரிடம் சம்பளம் பெறும் ஊழியர்களாக்கப்பட்டனர்.

2 கண்டியப் பிரதானிகளுக்கு பொதுமக்கள் வெகுமதிகள் வழங்குவது தடைசெய்யப்பட்டது.

3 ஆங்கில நீதிமன்ற முறையும் மலையகப் பகுதிகளில் ஆரம்பிக்கப்பட்டன.

4 கிராமத்தலைவர் பதவிக்கு ஆட்களை அமர்த்துவதற்குப் பிரதானிகளுக்கிருந்த அதிகாரம் நீக்கப்பட்டது.

திரு.நா.செல்வச்சந்திரன்

பாடவேளை 10

இரண்டாவது சுதந்திரப் போராட்டம்

01 2வது சுதந்திரப் போராட்டம் இடம்பெற்ற ஆண்டு எது?

1848

02 2வது சுதந்திரப்போராட்டத்திற்கான காரணங்கள் எவை?

1 கோல்புறுக் சீர்திருத்தங்களின் செல்வாக்கு

2 அரசின் புதிய வரிக்கொள்கை

03 2வது சுதந்திரப் போராட்டத்துக்குக் காரணமான கோல்புறுக் சிபாரிசுகள் எவை?

1 அரசின் நிலக்கொள்கை

2 கிராமசபைகள் செயலற்றுப்போனமை

3 புதிய நீதிமன்ற முறைகள்

4 அரசுக்கும் பொதுமக்களுக்கும் இடையிலான தொடர்பு விலகிச்சென்றமை

www.lkedu.lk

1 அரசின் நிலக்கொள்கை

கோல்புறுக் சீர்திருத்தத்தில் நிலங்கைள விற்கும் கொள்கை செயற்படுத்தப்பட்டது.

1840இல் ஸ்டுவட்மெக்கன்ஸி ஆளுநரால் கொண்டு வரப்பட்ட திரிசுநிலச்சட்டம் மூலம் 30 வருடங்கள் தொடர்ச்சியாக அனுபவித்தமைக்கான ஏற்றுக்கொள்ளக்கூடிய சான்றுகளை சமர்ப்பிக்காத பயிர்ச்செய்கைக்கு உட்படாத நிலம் அரசுடமையாக்கப்பட்டது. கண்டி மக்கள் பரம்பரை பரம்பரையாக அனுபவித்து வந்த பெரும்பாலனா நிலங்களுக்கு சட்டபூர்வ ஆவணங்கள் இல்லை. இதனால் அவர்களது சேனை நிலங்கள் அரசுடமையாகின. இந்நிலங்கள் வெளிநாட்டவர்களுக்கு மிகக் குறைந்த விலையில் விற்கப்பட்டன. இதனால் அரசின் மீதான பொதுமக்களின் நம்பிக்கையற்றுப்போனது.

2 கிராமசபைகள் செயலற்றுப்போனமை

கோல்புறுக் சீர்திருத்தத்தில் கட்டாய அரசசேவை முறை நீக்கப்பட்டது. இது கிராமசபையின் செயற்பாடுகளில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. அப்பிரதேச குளங்கள், அணைக்கட்டுக்கள், கால்வாய்களை அமைத்தலும் பராமரித்தலும் கிராமசபைகளாலேயே மேற்கொள்ளப்பட்டு வந்தது. இக்கிராமசபைக்கு உழைப்பைப் பெற்றுக்கொள்ளும் வழி கட்டாய அரசவேை முறையாகும். இம்முறை நீக்கப்பட்டதால் உழைப்பைப் பெற்றுக்கொள்வது இயலாமல் போனது. மேலும் இக்கிராமசபைகள் சிறிய பிரச்சினைகளுக்கும் தீர்வினைப் பெற்றுக்கொடுத்தன. கோல்புறுக் சீர்திருத்தம் மூலம் இதன் அதிகாரங்கள் நீதிமன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டன. இதனால் கிராமமக்கள் துன்பத்திற்கு உள்ளாகியமை

www.lkedu.lk

3 புதிய நீதிமன்ற முறைகள்

கோபல்புறுக் சீர்திருத்ததத்தின்படி சிறிய பிரச்சினைகளுக்கும் நீதிமன்றத்தை நாடவேண்டி ஏற்பட்டது. ஆங்கிலமொழி அறிவோ, சட்டதிட்டங்கள் பற்றிய அறிவோ மக்களிடம் காணப்படவில்லை. இந்தீதிமன்றங்களுக்குச் செல்லும் போது வழக்கறிஞர்களுக்கான கொடுப்பனவுகளும், முத்திரைக்கட்டணங்களுக்கும் பணம் செலவிட வேண்டி ஏற்பட்டமை. மேலும் பல நாட்கள் செலவிட வேண்டியும் ஏற்பட்டது. இதனால் கிராமமக்கள் துன்பப்பட்டதொடு அவர்களது விவசாய நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டது.

04 அரசுக்கும் மக்களுக்கும் இடையிலான தொடர்பு விலகிச்சென்றமைக்கான காரணங்கள்

1 சிவில் சேவையாளர்களின் எண்ணிக்கையை குறைத்தமை

2 அவர்கள் பெருந்தோட்ட செய்கையில் ஈடுபட அனுமதியளித்தமை

3 பிரதேசங்களின் நிர்வாகசேவை செயற்றிறன் அற்றுப்போனமை

4 அதிகாரிகள் மக்களின் தேவைகள் தொடர்பாக போதிய கவனம் செலுத்தவில்லை

திரு.நா.செல்வக்குமரன்

05 அரசின் புதிய வரிக்கொள்கைகள் எவ்வாறு போராட்டத்திற்குக் காரணமாகியது

ஆளுநர் ரொறிங்டனால் புதிய வரிகள் விதிக்கப்பட்டமை உடனடிக் காரணமாக அமைந்தது. கோப்பிப் பயிர்ச்செய்கை மூலம் கிடைத்த வருமானம் வீழ்ச்சியடைந்தமை முத்திரைவரி, வண்டிவரி, படகுவரி, கடைவரி, துப்பாக்கிவரி, உடல்வரி எனப்பல வரிகள் விதிக்கப்பட்டன. துப்பாக்கிவரி, நாய்வரி, ஆள்வரி என்பன கடுமையான எதிர்ப்புப்பு உள்ளானது. நீலப் புத்தகத்திற்கான தகவல்களைப் பெற குடிமக்கள் தொடர்பான புள்ளி விபரங்களை சேகரித்தபோது இன்னுமொரு புதிய வரிக்கான முயற்சி என பொதுமக்கள் சந்தேகப்பட்டமை ஆளவர் என்பது வயது வந்த ஆண்கள் வருடத்தில் 6 நாட்கள் பாதைகள் வெட்டும் வேலை செய்ய வேண்டும் அவ்வாறு செய்யாவிட்டால் 3 சிலின் செலுத்த வேண்டும்.

www.lkedu.lk

பாடவேளை 11

இரண்டாவது சுதந்திரப் போராட்டத்தின் தன்மை

01 2வது சுதந்திரப்போராட்டம் பரவிய இடங்கள் எவை?

மாத்தளை, தம்புள்ளை, குருநாகல், வாரியபொல

02 தமது துப்பாக்கிகளை அரச அதிபருக்கு முன்னாடி போட்டுடைத்து போரடிய இடம் பதுளை

03 2வது சுதந்திரப் போராட்டத் தலைவர்கள் யாவர்

கொங்காலெகொடபண்டா,

வீரபுரன் அப்பு,

குடாபொலதேரர்,

அங்குராங்கெத்த டிங்கிரால

04 தம்புள்ளையில் முடிசூடிக்கொண்டவர் யார்

கொங்காலெகொடபண்டா

திரு.சு.செல்வச்சந்திரன்

05 2வது சுதந்திரப் போராட்டத்தின் மத்திய நிலையம் எது?

மாத்தளை

06 இப்போராட்டதில் பங்குபற்றியமைக்காக மரணதண்டனை விதிக்கப்பட்டவர் யார்?

வீரபுரன் அப்பு

07 இப்போராட்டதில் பங்குபற்றியோருக்கு வழங்கப்பட்ட தண்டனைகள் எவை?

1 வீரபுரன் அப்பு - மரணதண்டனை

2 குடாபொலதேரர்(கடஹபொலதேரர்) – துப்பாகியால் சுடப்பட்டுக் கொல்லப்பட்டார்

3 கொங்காலேகொடபண்டா - கசையடியுடன் நாடு கடத்தப்படல்

www.lkedu.lk

08 2வது சுதந்திரப் போராட்டம் தோல்வியடைந்தமைக்கான காரணங்கள்

1 போராட்டம் நன்கு முழுமையாக ஒழுங்குபடுத்தப்படாமை

2 இதில் பங்குபற்றிய பெருந்தொகையானோர் பொதுமக்களாவர் இவர்களுக்கு போதிய பயிற்சியோ ஆயுதங்களோ காணப்படாமை

3 மலைநாடு முழுவதும் சிறந்த பாதை வசதிகள் காணப்பட்டமை

4 ஆங்கிலேயரின் படை, ஆயுதம். கையாளும் முறைகளுக்கு எதிராக மக்களால் போராட முடியாமல் போனமை

5 மலைநாட்டின் சில பிரதேசங்களில் மட்டும் ஏற்பட்டமையால் இலகுவாக அடக்கிவிடக்கூடியதாக இருந்தமை

09 2வது சுதந்திரப் போராட்டத்தின் விளைவுகள் எவை?

1 டொரிங்டன், குடியேற்ற செயலாளர் எமர்சன் டெனன்ற் என்போர் இங்கிலாந்திற்கு மீள அழைக்கப்பட்டமை

திரு.நா.செல்வச்சந்திரன்

2 பொதுமக்களின் எதிர்ப்புக்கு உள்ளாகிய சில வரிகள் நீக்கப்பட்டமை – கடைவரி, நாய்வரி

3 சில வரிகள் மறுசீரமைக்கப்பட்டமை – முத்திரைவரி, துப்பாக்கிவரி, வண்டிவரி

4 விவசாயத்தையும் நீர்ப்பாசனத்தையம் விருத்தி செய்வதற்கு அரசின் அனுசரணை வழங்கப்பட்டமை

5 குற்றவாளிகள் என நிருபிக்கப்பட்டோருக்கு தண்டனை வழங்கப்பட்டமையும், சொத்துக்களை அரசுடமையாக்க நடவடிக்கை எடுத்தமையும்

6 பிரதேச மற்றும் மாகாண நிர்வாக நடவடிக்கைகளை மேம்படுத்துமாறு 1852ஆம் ஆண்டின் பின்னர் ஆட்சியாளர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டமை

www.lkedu.lk

பாடவேளை 12

சுதேச எதிர்ப்புக்களின் தன்மையையும் விளைவுகளையும் அட்டவணைப்படுத்திக் காட்டுவார்.

பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க

ஆண்டு	போராட்டக் காரணிகள்	போராட்டத் தலைவர்கள்	தோல்விக்கான காரணங்கள்	போராட்டத்தின் விளைவுகள்
1818				
1848				

திரு.நா.செல்வச்சந்திரன்

www.lkedu.lk

அலகு – 03

இலங்கையில் சமய, பண்பாட்டு மறுமலர்ச்சி

பாடவேளை (7)

பாடவேளை 01

தேசிய இணக்கத்தின் பின்னணி

01 2வது சுதந்திரப் போராட்டத்தின் பின்னர் சுதந்திரப் பெற மேற்கொண்ட நடவடிக்கைகளை காலப்பகுதியின் அடிப்படையில் இரண்டு வகைகளும் எவை?

1 சமயம் மற்றும் தேசிய மறுமலர்ச்சிக் காலம் - 1850 – 1915 வரை

2 அரசியல் போராட்டம் நிலவிய காலம் - 1915 – 1948 வரை

02 போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆட்சிக்காலங்களில் அவர்களின் சமய, கலாசார நடவடிக்கைகள் இலங்கை முழுவதும் பரவாமைக்கான காரணம் யாது?

கண்டியில் சுதேச அரசு காணப்பட்டமை

திரு.நி.செல்வச்சந்திரன்

03 மிஷனரி இயக்கம் என்றால் என்ன?

கிறிஸ்தவ சமயத்தைப் பரப்புவதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை மிஷனரி இயக்கம் என அழைக்கப்பட்டது.

04 பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் செயற்பட்ட மிஷனரிகளையும் இலங்கைக்கு வந்த ஆண்டுகளும்

மிஷனரிகள்	வருகை தந்த ஆண்டு	செயற்பட்ட பிரதேசம்
இலண்டன் மிஷனரி	1804	கரையோரப் பகுதிகள்
பப்டிஸ்ற் மிஷனரி	1812	கொழும்பு
வெஸ்லியன் மிஷனரி	1814 - 1815	வடக்கு, கிழக்கு பகுதிகள்
அமெரிக்கன் மிஷனரி	1816	யாழ்ப்பாணம் உட்பட வடபகுதி
சேர்ச் மிஷனரி	1818	கொழும்பு, காலி, கற்பிட்டி, மன்னார்

www.lkedu.lk

05 மிஷனரிகள் தமது சமயத்தைப் பரப்புவதற்கு கையாண்ட முறைகள்

1 எழுத்து வழியாக

2 உரையாற்றுதல் வழியாக

3 கல்வி வழியாக

1 எழுத்து வழியாக

மிஷனரிகளிடம் அச்சகங்களை அமைப்பதற்கும், நூல்கள், சஞ்சிகைகளை வெளியிடுவதற்கும் தேவையான பணமும் ஒழுங்கும் காணப்பட்டன.

அவர்களுக்கு இருந்த பிரச்சினை மொழியாகும்.

இதனால் மிஷனரி மதகுருமாள் சிங்களத்தையும், தமிழையும் கற்றனர்.

பின்னர் பைபிளை சிங்களத்திலும் தமிழிலும் மொழிபெயர்த்தனர்.

பத்திரிகைகள், சஞ்சிகைகள், நூல்கள் என்பவற்றை அச்சிட்டு வெளியிட்டனர். அவ்வாறான செய்தித்தாள்கள் வருமாறு

திரு.நா.செல்வச்சந்திரன்

ஆண்டு	வெளியீட்டின் பெயர்	வெளியிட்ட தாபனம்
1832	மாசிக்க தேக்க	சேர்ச் மிஷனரி
1840	லங்கா நிதாணய	சமய பூஸ்திகா சங்கம்
1842	உரகல	பப்டிஸ்ற் மிஷனரி

2 உரையாற்றுதல் வழியாக

மிஷனரி குருமார் பன்சலைகளுக்கு அண்மையிலும், பொது மக்கள் நடமாடும் இடங்களிலும் சொற்பொழிவுகளை நடத்தினர்.

3 கல்வி வழியாக

சமயத்தைப் பரப்புவதற்கு பயன்மிக்கதாக அமைந்த வழி கல்வியாகும். எனவே பல பாடசாலைகளை அமைத்தனர். அவர்களின் செயற்பாட்டிற்கு அரச ஆதரவும் கிடைத்தது. பிரித்தானியர் காலத்தில் அரசாங்கப்பதவிகளைப் பெற்றுக்கொள்ள ஆங்கிலமொழியறிவு தேவைப்பட்டது. இதனால் சிங்கள தமிழ் பிள்ளைகள் ஆங்கிலக் கல்வியைப் பெறுவதற்கு மிஷனரிப் பாடசாலைகளுக்கு செல்ல வேண்டி ஏற்பட்டது.

www.lkedu.lk

பாடவேளை 02

பௌத்த சமய மறுமலர்ச்சிக்கான காரணங்கள்

01 பௌத்த சமய மறுமலர்ச்சி ஏற்பட்டமைக்கான காரணங்கள்

1 மிஷனரிகளால் சிலை வணக்கம் கண்டிக்கப்பட்டமை

2 பௌத்த பழக்க வழக்கங்கள் விமர்சனத்திற்கு உள்ளாக்கப்பட்டமை

3 சுயமொழிக்கல்விக்கு அரச அரனுசரணை கிடைக்காமை

4 தேசிய மொழிகளிலான கல்வியை எழுச்சி அடையச் செய்வதற்கான தெவை

02 பௌத்த கல்வி நடவடிக்கையில் முக்கியமாக அமைந்த முதல் சம்பவம்

1 வலானே சித்தார்த்த தேரர் இரத்மலானை பரமதம்ம சைத்திய பிரிவெனாவை ஆரம்பித்தமை

2 1873இல் மாளிகாகந்த வித்தியோதய பிரிவெனாவைத் ஹிக்கடுவ ஸ்ரீ சுமங்கல தேரர் தோற்றுவித்தார்.

3 1875இல் பேலயகொட வித்தியலங்கார பிரிவெனாவை இரத்மலானை தர்மலோக தேரர் தோற்றுவித்தார்.

03 பௌத்த சமய மறுமலர்ச்சிக்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்

1 எழுத்து வழியாக சமயம் பரப்பும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படல்

2 உரையாற்றுதல் வழியாக சமயம் பரப்புதல் ஆரம்பிக்கப்படல்

3 கல்வி வழியாக சமயம் பரப்பும் நடவடிக்கை ஆரம்பிக்கப்படல்

தகவல் தொழில்நுட்ப நிறுவனம்

1 எழுத்து வழியாக சமயம் பரப்பும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படல்

1 அச்சகம் ஒன்றை அமைப்பதற்கான முயற்சியில் புலத்கம தம்மாலங்கார ஸ்ரீ சுமண திஸ்ஸ தேரர் ஈடுபட்டார்.

2 இதற்காக இலங்கையில் உள்ள செல்வந்தர்களிடம் பெற்ற நிதி போதாமையால் சீய நாட்டு அரசரின் உதவியைப் பெற முயன்றார்.

3 இதன் பயனாக 1862இல் காலியில் லங்கோபகார அச்சகம் அமைக்கப்பட்டது.

4 இதன் பின்னர் பல அச்சகங்கள் அமைக்கப்பட்டன. அவையாவன லங்கா பிநவ விஷ்ரத அச்சகம், கவடகதிக அச்சகம், சுதர்ஷண அச்சகம், சரசவி சந்தரெஸ அச்சகம் போன்றன சிலவாகும்.

5 இதனால் பத்திரிகைகள், சஞ்சிகைகள் வெளியிடப்பட்டன. அவற்றுள் லக்மினிபஹன, லங்காலோகய, சரசவி சந்தரெஸ, சிங்கள ஜாதிய, சிங்கள பௌத்தயா போன்றன குறிப்பிடத்தக்கன.

www.lkedu.lk

பாடவேளை 03

2 உரையாற்றுதல் வழியாக சமயம் பரப்புதல் ஆரம்பிக்கப்படல்

சமயத்தைப் பரப்புவதற்கு பௌத்தர்களும் சொற்பொழிவு முறையைக் கையாண்டனர். இதனை பகிரங்க விவாதங்கள் இடம்பெற்றதன் மூலம் அறியலாம். இவ்விவாதங்களில் பங்கேற்றவர்களுள் கொட்டாஞ்சேனை தீபதுத்தாராமயவில் வசித்த மீகெட்டுவத்த குணானந்த தேரர் முக்கியம் பெற்றவராக விளங்கினார். இவருடன் ஹிக்கடுவ ஸ்ரீ சுமங்கள தேரர், வஸ்கடுவே சுபுதி தேரர், பொத்துவில இந்திரஜோதி தேரர், இரத்மலானை தர்மலோக தேரர் போன்றோர் பற்குபற்றினர். இதன் அடிப்படையில் பின்வரும் ஆண்டுகளில் ஐம்பெரும் விவாதங்கள் இடம்பெற்றன.

1865 - பத்தேகம

1865 - வராகொட

1866 - உதம்மிட்ட

1871 - கம்பளை

1873 - பாணந்துறை

திரு.நா.செல்வச்சந்திரன்

இவ்விவாதங்களுள் பாணந்துறை விவாதம் முக்கியமானது. இதற்கு மீகெட்டுவத்த குணானந்ததேரர் தலைமை தாங்கினார்.

இவ்விவாதம் அடங்கிய நூலை வாசித்ததன் மூலம் அமெரிக்கரான ஹென்றிஸ்டீல் ஒல்கொட் அவர்கள் இலங்கை வந்தார்.

www.lkedu.lk

3 கல்வி வழியாக சமயம் பரப்பும் நடவடிக்கை ஆரம்பிக்கப்படல்

எழுத்து, பேச்சுத் துறைகளில் பௌத்தர்கள் முன்னணிக்கு வந்தாலும் பௌத்த பாடசாலைகளை அமைக்க இயலாத நிலையே காணப்பட்டது. பாடசாலைகளை அமைப்பதற்கும் அவற்றைக் கொண்டு நடாத்துவதற்கும் தேவையான அமைப்பு ரீதியான பலம் இல்லாது காணப்பட்டது. இக்கதவினைத் திறந்து வைத்தவர் ஹென்றி ஸ்டில் ஒல்கொட் ஆவார். பௌத்த பாடசாலைகள் அமைப்பதற்கான நிதியைப் பெறுவதற்காக ஒல்கொட்டும் பௌத்த பிக்குகளும் நாடெங்கிலும் சென்றனர். ஹென்றி ஸரில்ஒல்கோட்டோடு ஹிக்கடுவ ஸ்ரீ சுமங்கலதேரர், மிகெட்டுவத்த குணானந்ததேரர், அநகாரிக தர்மபால, போன்றோர் பணியாற்றினர். இதன் பயனாக கொழும்பு ஆனாந்தக்கல்லூரி, மாத்தளை விஜய கல்லூரி, காலி மகிந்த கல்லூரி, கண்டி தர்மராஜ கல்லூரி, மாத்தளை விஜய கல்லூரி என்பன அமைக்கப்பட்டன.

திரு.நா.செல்வச்சந்திரன்

பாடவேளை 04

பௌத்த மறுமலர்ச்சிக்குப் பங்காற்றியோர்

01 ஹென்றி ஸ்டில் ஒல்கொட்டின் வழிகாட்டலின்படி உருவாக்கப்பட்ட

அமைப்பு	பௌத்த பிரம்மஞான சங்கம் (1880)
அமைப்பின் நோக்கம்	பௌத்த மாணவர்களுக்கான பௌத்த பாடசாலைகளை ஆரம்பிப்பது. துறவிகளையும் இல்லறத்தாரையும் ஒன்றுபடுத்துதல்.

கிளைகள் அமைக்கப்பட்ட இடங்கள் கொழும்பு, காலி, கண்டி, இரத்தினபுரி

02 வெசாக் பௌர்ணமி தினத்தை விடுமுறை தினமாகப் பெற்றுத் தந்தவர் ஹென்றி ஸ்டில் ஒல்கொட்

03 பௌத்த கொடியை உருவாக்க முன்னின்று உழைத்தவர் ஹென்றி ஸ்டில் ஒல்கொட்

www.lkedu.lk

04 தேசிய கலாசாரத்தின் மகிமையை எடுத்துக்காட்டத் தோன்றிய முக்கியமானவர்கள்

அநகாரிக தர்மபாலா, வலிசிங்க ஹரிச்சந்திர, பியதாஸ சிறிசென,

ஜோன் த சில்வா

பாடவேளை 05

தேசப்பற்றை வளர்க்கும் இயக்கம்

01 தேசப்பற்றை வளர்க்கும் இயக்கத்தின் நோக்கம் யாது

தேசிய கலாசாரத்தை மதிக்க மக்களைத் தூண்டுவதன் மூலம் தேசத்தின் மீது பற்றுக்கொண்ட மக்களை உருவாக்குவது

02 தேசப்பற்றை வளர்க்கும் இயக்கத்துக்கு பங்களிப்புச் செய்தவர்களும் அவர்களது பங்களிப்புக்களையும் குறிப்பிடுக.

1 அநகாரிக தர்மபால

1 இந்நாட்டின் பழமையான கலாசாரத்தின் முக்கியத்துவத்தையும், பௌத்த சக வாழ்வின் மேன்மையையும் விளக்கினார்.

2 பகிரங்க சொற்பொழிவுகளை நிகழ்த்தினார்.

3 சிங்கள பௌத்தயா, மஹாபோதி போன்ற சஞ்சிகைகளில் கட்டுரைகளையும் எழுதினார்.

4 இந்தியாவில் உள்ள புத்தகாயா போன்ற புனித இடங்களைப் பாதுகாப்பதற்கு முன்வந்தார்.

2 பியதாச சிறிசென

1 தமது நாவல்கள் மூலமும், சிங்கள ஜாதிய என்னும் பத்திரிகை மூலமும் இலங்கையர்கள் ஆராயாமல் மேற்கத்திய நாகரிகத்தை தழுவுவதை விமர்சித்தார்.

2 பௌத்த பிக்குகளும், கல்விமான்களும் பௌத்த கலாசாரத்தின் மேன்மையை முன்வைத்து பொதுமக்களை வழிப்பூட்டும் நடவடிக்கையை மேற்கொண்டார்.

www.lkedu.lk

3 வலிசிங்க ஹரிச்சந்திர

1 அனுராதபுரத்தில் உள்ள புனித இடங்களைப் பாதுகாக்கும் இயக்கத்தை ஆரம்பித்தார்.

2 புராதன கலாசாரம் தொடர்பான ஆய்வினை மேற்கொண்டவர்கள் ஜோர்ஜ் டர்னர், ரிஸ் டேவிஸ், எச்.சீ.பில பெல், ஹென்றி பாக்கர்

03 மது ஒழிப்பு இயக்கம் ஏற்பட்டமைக்கான காரணம் யாது?

பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் மதுப்பாவனை அதிகரித்தமையால் சமூகத்தில் பல்வேறு பிரச்சினைகள் தோன்றின. மதுபாவனையிலிருந்து விழிப்புணர்வை ஏற்படுத்தி மக்களைப் பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்ட அமைப்பாகும்.

04 மது ஒழிப்பு இயக்கத்துக்காக பாடுபட்ட தலைவர்கள் யாவர்?

1 அநகாரிக தர்மபால – பத்திரகை மூலமும், சொற்பொழிவு மூலமும் இதனை மேற்கொண்டார்.

2 பியதாச சிறிசென – தமது புனைகதைகளில் பல்வேறு பாத்திரங்களை உருவாக்கி மதுபானம் அருந்துவதன் தீயவிளைவுகளைக் கூறினார்.

3 ஜோன் த சில்வா – நாடகங்கள் மூலம் எடுத்துக்காட்டினார். பராபவ என்ற சிங்கள நாடகத்தின் மூலம் இதனை வெளிப்படுத்தினார்.

திருமதி. செல்வச்சந்திரன்

www.lkedu.lk

பாடவேளை 06

இந்து சமய மறுமலர்ச்சி

01 இந்து மத கலாசார மறுமலர்ச்சிக்கு தலைமை தாங்கிச் செயற்பட்டவர்
ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

02 ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் ஆற்றிய பணிகள்

1 தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகய மொழிகளில் தாம் பெற்றிருந்த உயர்மட்ட அறிவைத் தமது சேவைகளுக்காகப் பயன்படுத்தியமை.

2 இந்து சமயப் பிள்ளைகளுக்காக தமது வீட்டில் வகுப்புக்கள் நடத்தியமை

3 சைவபரிபாலனசபை, இந்துக்கல்விச்சபை ஆகியவற்றை அமைத்தமை

4 1872இல் யாழ்ப்பாணத்தில் இந்து ஆங்கிலப் பாடசாலையை அமைத்தமை

5 இந்துப் பிள்ளைகளுக்காக நூல்களை எழுதியமை, தமிழ் மொழியலி எழுதப்பட்ட உரைநடைகள், செய்யுள்கள், பாடல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தமை

6 அச்சம் ஒன்றை அமைத்ததொடு உதயபானு என்னும் பத்திரிகையையும் வெளியிட்டார்.

7 பெரியபுராணம், கந்த புராணம், திருக்கைலாய புராணம் என்பவற்றை எழுதினார்.

8 1849இல் வண்ணார்பண்ணையில் சைவப்பிரகாச வித்தியாசாலையை ஆரம்பித்தார்

03 நாவலரின் மறைவின் பின்னர் இந்து காலாசார மறுமலர்ச்சிக்காகப் பாடுபட்டவர்கள் யாவர்?

1 சேர்.பொன்.இராமநாதன் - 1915இல் இடம்பெற்ற சிங்கள முஸ்லிம் கலவரத்தின் போது பிரித்தானியரின் அடக்கு முறைக்கு எதிராகக் குரல் கொடுத்தார். யாழ்ப்பாணத்தில் இராமநாதன் கல்லூரி, பரமேஸ்வராக் கல்லூரி என்பவற்றை அமைத்தார்.

2 சேர்.பொன்.அருணாச்சலம் - சிங்களத் தலைவர்களோடு ஒன்று சேர்ந்து அரசியல் அதிகாரத்தை பெற்றுக்கொள்வதற்காக 1919இல் இலங்கை தேசிய சங்கத்தை உருவாக்கி அதற்குத் தலைமை தாங்கினார்.

திரு.தா.செல்வேந்திரன்

www.lkedu.lk

பாடவேளை 07

01 இஸ்லாமிய கலாசார மறுமலர்ச்சிக்காகப் பாடுபட்டவர் யார்?

எம்.சீஎம்.சித்திலெப்பை

02 1883இல் எகிப்திலிருந்து நாடு கடத்தப்பட்டு இங்கு வந்து இஸ்லாமிய மறுமலர்ச்சிக்குப் பாடுபட்டவர் யார்?

ஓராபி பாஷா

03 சித்திலெப்பை ஆற்றிய பணிகள் எவை?

1 அரபு மொழியை மட்டுமன்றி ஆங்கில மொழியையும் கற்குமாறு முஸ்லிம்களைத்

தூண்டியமை

2 கொழும்பு முஸ்லிம் கல்விச் சங்கத்தை நிறுவியமை

3 கொழும்பு சாஹிராக் கல்லூரியை அமைத்தமை

4 முஸ்லிம் மகளிர் பாடசாலைகளை நிறுவியமை

5 முஸ்லிம்சேநன் என்னும் பத்திரிகையை வெளியிட்டார்.

6 முஸ்லிம் கல்விச்சபையை ஆரம்பித்தார்

7 மதராஸ என்னும் சமயப்பாடசாலைகளைப் புனரமைப்புச் செய்தார்

04 டி.பி.ஜாயா ஆற்றிய பணிகள் எவை?

சித்திலெப்பையின் மறைவின் பின்னர் இஸ்லாமிய மறுமலர்ச்சியை முன்னெடுத்தார்.

அரசியலில் ஈடுபட்டு இலங்கையின் முதலாவது அமைச்சரவையிலும் ஈடுபட்டவர்

www.lkedu.lk

அலகு – 04

பிரித்தானியரின் ஆட்சியில் இலங்கையின் அரசியல் மாற்றங்கள்

பாடவேளைகள் (10)

பாடவேளை - 01

கோப்புறுக் சீர்திருத்த அறிமுகத்தின் பின்னணி

01 இலங்கை முழுவதும் பிரித்தானியரால் கைப்பற்றப்பட்ட ஆண்டு எது?

1815(கண்டி கைப்பற்றப்பட்டமை)

02 இலங்கை முழுவதையும் பிரித்தானியர் ஆட்சி செய்த காலப்பகுதி எவ்வளவு?

133 ஆண்டுகள்(1948 – 1815)

03 கோல்புறுக் ஆணைக்குழு நியமிக்கப்பட்டமைக்கான காரணம் யாது?

இலங்கையிலிருந்து கிடைத்த வருமானத்திலும் பார்க்க நிர்வாகச் செலவுகள் அதிகமாக இருந்தமையால்

தியோ.செல்வச்சந்திரன்

04 கோல்புறுக் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் யாவர்?

டபிள்யூ.எச்.ஜி.கோல்புறுக்

சார்ள்ஸ் எச்.கமரன்

05 கோல்புறுக் இலங்கைக்கு வருகை தந்த ஆண்டு எது?

1829

06 கோல்புறுக் ஆய்வு செய்து ஆலோசனை வழங்கிய விடயங்கள் எவை?

1 இலங்கையின் நிர்வாகம்

2 வரவும் செலவும் 3 அரச தாபனங்கள்

07 சார்ள்ஸ் கமரன் இலங்கை வந்த ஆண்டு எது?

1830

08 சார்ள்ஸ் கமரன் ஆய்வு செய்தம விடயம் எது? நீதித்துறை

www.lkedu.lk

09 இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட முதலாவது அரசியல் சீர்திருத்தம் எது?

கோல்புறுக் கமரன் சீர்திருத்தம் - 1833

10 கோல்புறுக் யாப்பின் முக்கிய சீர்திருத்தங்கள் எவை?

அரசியல் சிபரிசுகள்

1 சட்டவாக்கக்கழகம், சட்ட நிர்வாகக் கழகம் என்பன அமைக்கப்பட்டது.

2 மலைநாடும், கரையோரப்பிரதேசமும் இணைக்கப்பட்டு ஒரே ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்டது.

3 நாடு ஐந்து மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டமை

4 ஆங்கிலம் போதனா மொழியாக்கப்பட்டமை

பொருளாதார சிபாரிசுகள்

5 கட்டாய இராஜகாரிய முறை நீக்கப்பட்டமை

6 அரசின் வர்த்தக ஏகபோக உரிமை நீக்கப்பட்டது

7 காணி விற்பனைச் சட்டம் கொண்டு வரப்பட்டமை

திரு.நா.தேவ்வச்சந்திரன்

11 கோல்புறுக் யாப்பில் உருவாக்கப்பட்ட மாகாணங்கள் எவை?

வடமாகாணம், கிழக்கு மாகாணம், தென் மாகாணம், மேல் மாகாணம், மத்திய மாகாணம்

12 கோல்புறுக் யாப்பின் சட்டவாக்கக்கழகத்தை வகுத்துக்காட்டுக.

www.lkedu.lk

பாடவேளை (02)

ஐரோப்பியர் மேற்கொண்ட போராட்டங்கள்

01 இலங்கையில் இனங்களுக்கிடையே முரண்பாடுகள் ஏற்படக் காரணமான யாப்பு எது?

கோல்புறுக் கமரன் சீர்திருத்தம் (இனவாரிப் பிரதிநிதித்துவ முறை காரணமாக)

02 1833இல் அமைக்கப்பட்ட நிர்வாகக் கழகத்தின் உறுப்பினர்கள் யாவர்?

குடியேற்றச் செயலாளர், கணக்காளர், பொருளாளர், அளவையாளர், கொழும்பு சுங்க அறவீட்டாளர்

03 கோல்புறுக் யாப்பின் குறைபாடுகள் எவை?

1 இனவாரிப் பிரதிநிதித்துவம் காணப்பட்டமை

2 உத்தியோக சார்புள்ளோரின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்பட்டமை

3 உத்தியோக சார்பற்றோர்கள் ஆளுநர்களால் நியமிக்கப்பட்டமை

4 ஆளுநரிடம் அதிக அதிகாரங்கள் இருந்தமை

திரு.நா.செல்வகுமாரன்

04 கோல்புறுக் யாப்பின் அம்சங்களை மாற்றியமைக்க முதலில் போராடியவர்கள் யார்?

ஐரோப்பிய வணிகர்

05 பெருந்தோட்டத்துறையில் ஈடுபட்டிருந்த ஐரோப்பிய வணிகர்களுக்கு இருந்த தேவைகள் எவை?

தோட்டத்துறைக்கான பெருந்தெருக்கள், புகையிரதப் பாதைகள், உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல்.

06 ஐரோப்பிய வணிகர் போராட்டங்களில் ஈடுபடக் காரணம் யாது?

1 சட்டவாக்கக்கழகத்தில் உத்தியோகச் சார்பற்றோர் சிறுபான்மையினராக இருந்தமை

2 பெருந்தோட்டத்துறைக்குத் தேவையான நிதியைப் பெற்றுக்கொள்வதில் சிரமம்

3 உத்தியோகச் சார்பற்றோர் ஆளுநரால் நியமிக்கப்பட்டமை

www.lkedu.lk

07 ஐரோப்பியர் மேற்கொண்ட போராட்டங்கள் எவை?

1 சட்டவாக்கக் கழகத்தில் கேள்வி கேட்பது

2 ஆலோசகைளைச் சமர்ப்பிப்பது

3 பத்திரிகைகளில் கவனயீர்ப்பு கட்டுரைகளை எழுதுவது

4 போராட்டங்களை மேற்கொள்வதற்கான அமைப்புக்களைத் தோற்றுவிப்பது

08 1865இல் ஐரோப்பிய வணிகர் தோற்றுவித்த அமைப்பு எது? இலங்கையர் சங்கம்

09 இலங்கையர் சங்கத்தின் தலைவர் யார்? ஜோர்ஜ்வோல்

10 இவர்களது போராட்டத்தின் விளைவுகள் எவை?

1 1889இல் உத்தியோக சார்பற்றோரின் தொகை 8 ஆக அதிகரிக்கப்பட்டது

2 முஸ்லிம்களுக்கும், மலைநாட்டு சிங்களவருக்கும் இரு பிரநிதிகள் நியமனம் பெற்றனர்.

3 இலங்கையர்கள் முன்மாதிரிகளைப் பெற்றுக்கொள்ள முடிந்தமை.

திரு.நா.செல்வானந்தரன்

பாடவேளை (03)

குறுமக்கலம் சீர்திருத்தம்

01 கோல்புறுக் சீர்திருத்தத்தின் விளைவாக அமைவது எது?

1 சமுக, பொருளாதார மாற்றம்

2 பழைய பிரபுத்துவம் மறைந்து புதிய மத்தியதர வர்க்கம் தோன்றியமை

02 1908இல் சீர்திருத்தக் கோரிக்கைகளை முன்வைத்தவர் யார்?

ஜேம்ஸ்பீரிஸ்

03 சீர்திருத்தக் கோரிக்கைகளை முன்வைத்த அமைப்புக்கள் எவை?

கரைநாட்டு உற்பத்தியாளர் சங்கம், சிலாபச் சங்கம், யாழ்ப்பாணச்சங்கம்

www.lkedu.lk

04 இவர்களின் கோரிக்கைகள் எவை?

1 சட்டவாக்கக் கழகத்தில் உத்தியோகச் சார்பற்றோரின் அங்கத்துவத்தை அதிகரித்தல்

2 இனவாரிப் பிரதிநிதித்துவ முறையை நீக்குதல்

3 பிரதேசவாரிப்பிரதிநிதித்துவத்திற்கேற்ப வாக்குரிமை மூலம் உறுப்பினர் தெரிவு செய்யப்படல்

4 சட்டவாக்கக் கழகத்தின் அதிகாரங்களை அதிகரித்தல்

05 இக்கோரிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தவர் யார்?

ஹென்றி மக்கலம்

06 1910 மல் முன்வைக்கப்பட்ட சீர்திருத்தம் எது, அதற்கு ஆலோசனை வழங்கியோர் யாவர்?

குறூ – மக்கலம் சீர்திருத்தம்

ஆளுநர் ஹென்றி மக்கலம்

திரு.நா.செல்வச்சந்திரன்

குடியேற்ற நாட்டு காரியதரிசி – குறூ பிரபு

07 இவ் யாப்பு நடைமுறைக்கு வந்த ஆண்டு எது?

1912

08 இவ் யாப்பின் முக்கிய சீர்திருத்தங்கள் எவை?

1 சட்டவாக்கக் கழகத்திற்கு முதன் முறையாக வாக்குரிமை மூலம் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டமை (வரையறுக்கப்பட்ட வாக்குரிமை)

2 இலங்கையருக்கு கல்வி கற்ற பிரதிநிதி ஒருவர் தெரிவு செய்யப்பட்டமை (சேர்.பொன்.இராமநாதன்)

3 உத்தியோகச் சார்புள்ளோர் அதிகமாக இருந்தமை

www.lkedu.lk

09 குறூ மக்கலம் யாப்பின் சட்டமன்ற உறுப்பினர்களை வகுத்துக் காட்டுக.

பாடவேளை (04)

மதுஒழிப்பு இயக்கமும் இலங்கைத் தேசிய சங்கத்தின் தோற்றமும்

கற்றற்பேறு :- மதுவொழிப்பு இயக்கத்தின் எழுச்சியை விபரிப்பார்

01 மதுவரிச்சட்டம் கொண்டு வரப்பட்ட ஆண்டு எது?

1912

02 மது ஒழிப்பு இயக்கம் இடம்பெற்ற ஆண்டு எது?

1912

03 மது ஒழிப்பு இயக்கத்தின் நோக்கம் யாது?

மதுவினால் விளையும் தீமைகளை விளக்கி மக்களை அதிலிருந்து மீட்பது

04 மது ஒழிப்பு இயக்கம் அரசியல் தன்மையுடன் கூடிய இயக்கமாக மாறக் காரணம் யாது?

1910 ஆம் ஆண்டு சீர்திருத்தத்தினால் தமது கோரிக்கைகளைப் பெற முடியாது போன மத்தியதர வர்க்கத்தினரே இவ்வியக்கத்திற்கு தலைமை தாங்கியமையால்.

திரு.நா.செல்வச்சந்திரன்

05 மது ஒழிப்பு இயக்கத்தின் பண்புகள் எவை?

1 அரசாங்கத்தின் மதுவரிக்கொள்கைக்கு எதிராகப் பொது மக்களின் அபிப்பிராயத்தை உருவாக்க முயற்சித்தமை

2 மத்தியதர வர்க்கத்தினரான ஆங்கிலம் கற்றவர்களும், சமய, கலாசார மறுமலர்ச்சி இயக்கத்தினரும் ஒரே கொள்கை அடிப்படையில் செயற்பட்டமை

3 மது ஒழிப்பு இயக்க மேடைகளில் அரசாங்கத்தின் செயற்பாடுகள் விமர்சிக்கப்பட்டமை

06 மது ஒழிப்பு இயக்கத்தினூடாக தேசியத் தலைவர்களாக உருவாகியவர்கள் யாவர்?

எ.ஃப்.ஆர். சேனாநாயக்கா, டீ.எஸ்.சேனாநாயக்கா, சேர்.டீ.பி.ஜெயதிலக

www.lkedu.lk

07 இந்திய விடுதலைப்போராட்டத்திற்கு பாடுபட்டவர்கள் யாவர்?

சுரேந்திரநாத்பானர்ஜி, பாலகங்காதரதிலகர், மகாத்மாகாந்தி, ஜவகர்லால்நேரு

08 மகாத்மாகாந்தி இலங்கை வந்த ஆண்டு எது? 1927

09 இந்திய விடுதலைப்போரின் தாக்கம் எவ்வாறு இலங்கையில் தாக்கத்தை ஏற்படுத்தியது?

பிரித்தானியாவுக்கு முறைப்படி மனுக்களை முன்வைத்தல், குடியேற்ற நாட்டுச் செயலாளருடன் பேச்சு வார்த்தை நடாத்துதல் போன்ற நடவடிக்கைகள்

முக்கியமான அரசியல் சீர்திருத்தங்களை அடைவதற்கு போதியதாய்

இன்மையை இந்நாட்டு தலைவர்கள் விளங்கிக்கொண்டு மிகவும்

ஒழுங்கமைக்கப்பட்ட அரசியல் இயக்கங்கள்

மூலமாகத் தமது போராட்டங்களை முன்னெடுத்துச் செல்வதற்கு முற்பட்டனர்.

10 சிங்கள – முஸ்லிம் கலவரம் இடம்பெற்ற ஆண்டு எது?

1915

திரு.நா.செல்வானந்தரன்

11 நிர்வாக நடவடிக்கையில் கூடுதலான அதிகாரத்தை பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற தேவையை உணர்த்திய சம்பவம் எது?

சிங்கள – முஸ்லிம் கலவரத்தின்போது இராணுவச் சட்டதைப் பயன்படுத்தி மக்களை அடக்கியமை

12 இலங்கை தேசிய சங்கம் அமைக்கப்பட்ட ஆண்டு எது?

1919

13 இலங்கை தேசிய சங்கத்தின் முதலாவது தலைவர் யார்?

சேர்.பொன். அருணாச்சலம்

www.lkedu.lk

பாடவேளை (05)

மனிங், மனிங்டெவன்சயர் சீர்திருத்தம்

01 1920இல் கொண்டு வரப்பட்ட நீர்திருத்தம் எது?

மனிங் சீர்திருத்தம்

02 மனிங் யாப்பின் முக்கிய அம்சங்கள் எவை?

1 சட்டவாக்கக் கழகத்தில் உத்தியோக சார்பற்றோர் பெரும்பான்மை பெற்றமை

2 பிரதேசவாரிப் பிரதிநிதித்துவ முறை அறிமுகமானமை

3 மாகாண ரீதியான தேர்தல் முறை அறிமுகம்

03 மனிங் யாப்பின் சட்டவாக்கக்கழக உறுப்பினர்களை வகுத்துக்காட்டுக.

04 1924இல் கொண்டு வரப்பட்ட சீர்திருத்தம் எது?

மனிங் டெவன்ஷயர் சீர்திருத்தம்

05 மனிங் டெவன்ஷயர் யாப்பின் முக்கிய அம்சங்கள் எவை?

1 சட்டவாக்கக்கழகத்தின் அங்கத்தவர்களுள் பெரும்பான்மையானோர் வரையறுக்கப்பட்ட வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டனர்.

2 சட்டவாக்கக் கழகத்தின் தலைமைப்பதவி ஆளுநரையே சாரும்.

3 மேல்மாகாணத்தில் தமிழருக்கென்று புதிய அங்கத்துவம் ஒன்று வழங்கப்பட்டது

06 மனிங் டெவன்ஷயர் யாப்பின் சட்டவாக்கக்கழக உறுப்பினர்களை வகுத்துக்காட்டுக.

திரு.நா.செல்வகுமாரன்

www.lkedu.lk

பாடவேளை (06)

டொனமூர் ஆணைக்குழு நியமிக்கப்பட்டமை

01 டொனமூர் ஆணைக்குழு இலங்கை வந்த ஆண்டு எது? 1927

02 டொனமூர் அரசியல் யாப்பு நடைமுறைக்கு வந்த ஆண்டு எது?

1931

03 இலங்கையரிடம் குறிப்பிடத்தக்க அரசியல் பொறுப்புக்களை கையளித்த அரசியர் சீர்திருத்தம் எது?

டொனமூர்(சுதந்திரத்திற்கான பயணப் பாதையில் முக்கிய திருப்பு முனையாக அமைந்தது)

04 டொனமூர் அரசியல் யாப்பின் முக்கிய அம்சங்கள் எவை?

1 அரசுக்கழகம் அமைக்கப்பட்டமை

2 நிர்வாகக்குழுமுறை

3 சர்வசன வாக்குரிமை

4 ஆளுநரும் அரச அதிகாரிகளும்

திரு.நா.செல்வச்சந்திரன்

05 அரசுக்கழகத்தின் உறுப்பினர் எண்ணிக்கை யாது? 61

06 அரசுக்கழக அங்கத்தவர்களை வகுத்துக் காட்டுக.

07 1912இல் வாக்குரிமையப் பெற்றுக்கொள்வதற்கு தகைமைகளாக இருந்தவை எவை?

கல்வி, சொத்து

08 சர்வசன வாக்குரிமை என்றால் என்ன?

21 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் ஆண், பெண் வேறுபாடு, மொழி வேறுபாடு, சமய வேறுபாடு, வர்க்க வேறுபாடு இன்றி வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட்டமையே சர்வசன வாக்குரிமையாகும்.

09 பிரித்தானியாவின் குடியேற்ற நாடுகளுக்குள் முதலில் சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்ட நாடு எது? இலங்கை

www.lkedu.lk

பாடவேளை (7)

01 டொனமூர் அரசியல் யாப்பில் உருவாக்கப்பட்ட நிர்வாகக் குழுக்கள் எவை?

1 உள்நாட்டு அலுவல்கள் - டி.பி.ஜெயதிலக

2 காணி விவசாயம் - எ.எஸ்.சேனாநாயக்கா

3 உள்ளூராட்சி - சீ.பட்டுவன்துடாவ

4 சுகாதாரம் - டி.பி.பானபொக்கை

5 தொழில், கைத்தொழில், வர்த்தகம் - பி.சுந்தரம்

6 கல்வி - சீ.டளிப்யூ.டபிள்யூ.கன்னங்கரா

7 போக்குவரத்து, பொதுவேலைகள் - எம்.என்.மாக்கான் மரக்கார்

02 ஆளுநரும் அரச அதிகாரிகளும்

1 அளுநர் அரசுக்கழகத்துடனும் அமைச்சர்களுடனும் ஒத்துழைப்புடன் செயற்படவேண்டியிருந்தமை

2 தேசிய பாதுகாப்பு. நிதி, சட்ட நடவடிக்கைகள் ஆகிய முக்கியமான துறைகள் அரச உத்தியோகத்தர்களின் கீழ் வைக்கப்பட்டிருந்தமை இவ் யாப்பின் குறைபாடாகும்.

திரு.நா.செல்வச்சந்திரன்

பாடவேளை (8)

இலங்கைத் தேசிய இயக்கத்தின் எழுச்சி

01 1931இல் ஆரம்பிக்கப்பட்ட போராட்ட நோக்கம் யாது?

1 ஆளுநரின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்தல்

2 அரச அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த அமைச்சுக்களை இலங்கை அமைச்சர்களிடம் கையளித்தல்

02 இலங்கை சமசமாஜக்கட்சியை ஆரம்பித்தவர்கள் யார்?

என்.எம்.பெரேரா கொல்வின்.ஆர.டி.சில்வா (1935)

www.lkedu.lk

03 இடதுசாரித் தலைவர்கள் சுதந்திரம் கோரி மேற்கொண்ட போராட்டத்துக்கு பிரசார முறையாக பயன்படுத்திய இயக்கம் எது?

சூரியமல் இயக்கம்

04 சூரியமலர் இயக்கம் எதற்கு மாற்றாக அமைக்கப்பட்டது?

பொப்பி மலர் இயக்கம்

05 பொப்பி மலர் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டமைக்கான காரணம் யாது?

முதலாம் உலக மகா யுத்தத்தில் அங்கவீனமுற்ற பிரித்தானிய இராணுவ வீர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் உதவி புரிவதற்காக.

06 சமாதான தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்ட திகதி எது?

நவம்பர் 11(இத்தினத்தில் பொப்பி மலர்களை விற்பனை செய்தல், ஊர்வலம், கொண்டாட்டங்களை ஏற்பாடு செய்து பிரித்தானியப் பேரரசுக்கு இலங்கையரின் ஆதரவைத் தெரிவிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன)

திரு.நா.செல்வராஜன்

07 சூரியகாந்தி மலரை விற்கும் இயக்கம் தொடங்கப்பட்ட ஆண்டு?

1926

08 சூரியகாந்தி மலரை விற்றுப்பெற்ற பணம் எதற்காக பயன்படுத்தப்பட்டது?

இந்நாட்டு ஏழை மக்களின் நலன்களுக்கு

09 இடதுசாரிகள் எவ்வாறு பிரசாரம் செய்தனர்?

பொப்பி மலர் விற்கப்பட்ட பணம் இங்கிலாந்திற்க அனுப்பப்பட்டபடியால் அம்மலரை வாங்குவது பிரித்தானியப் பேரரசுக்கு ஆதரவைத் தெரிவிப்பதாகும் மேலும் சூரியாகந்தி மலரை அணிந்துகொள்வது சுதந்திரப் போராட்டத்திற்கு ஆதரவு நல்குவதாகும் எனவும் கூறினர். பொப்பிமலர் அமையின் சின்னம் எனவும் சூரியகாந்தி மலர் சுதந்திரத்தின் சின்னம் எனவும் கூறினர்.

www.lkedu.lk

பாடவேளை (9)

சோல்பரி சீர்திருத்த அறிமுகம்

01 இரண்டாம் உலக யத்தக காலத்தில் அமைக்கப்பட்ட விசேட பாதுகாப்புச் சபையின் அங்கத்தவராக நியமிக்கப்பட்டவர் யாரர்?

டி.எஸ்.சேனாநாயக்கா

02 1942இலிருந்து நாட்டிற்கு சுதந்திரம் பெற்றுக்கொள்வதை பிரதான நோக்கமாகக் கொண்டு செயற்பட்ட அமைப்பு எது?

இலங்கைத் தேசிய சங்கம்

03 சோல்பரி ஆணைக்குழு நியமிக்கப்பட்ட ஆண்டு எது?

1944

04 பாராளுமன்ற ஆட்சி முறையை பரிந்துரைத்த ஆணைக்குழு எது?

சோல்பரி ஆணைக்குழு

திரு.நா.செல்வச்சந்திரன்

பாடவேளை (10)

பிரித்தானியரால் முன்வைக்கப்பட்ட சீர்திருத்தங்களினை அடிப்படையாகக் கொண்டு அட்டவணையொன்றை தயாரித்துக் காட்டுவார்.

ஆண்டு	சீர்திருத்தம்	அங்கத்தவர் எண்ணிக்கை	முக்கிய சிபாரிசுகள்

www.lkedu.lk

அலகு – 05

பிரித்தானியரின் கீழ் இலங்கையின் சமூக பொருளாதார மாற்றங்கள்

பாடவேளை (10)

பாடவேளை (36 – 11)

ஐரோப்பியர் ஆட்சிக்காலத்தில் இலங்கையின் சமூக பொருளாதார அடிப்படை

01 எந்த மன்னனது காலத்திலிருந்து பௌத்த சமயத்தை அடிப்படையாகக் கொண்ட சமூக, பொருளாதாரக் கட்டமைப்பு தோற்றம் பெற்றது?

தேவநம்பியதீஸன்

02 தேவநம்பியதீஸ மன்னனின் காலத்திலிருந்தான கட்டமைப்பு மாற்றமடையக் காரணமாக அமைந்தவர்கள் யார்? போர்த்துக்கேயர்

03 போர்த்துக்கேயர் காலத்தில் ஏற்பட்ட பொருளாதார மாற்றம் யாது?

வர்த்தகத்தில் கவனம் செலுத்தியமையால் அவர்களின் ஆட்சிப்பகுதியில் விவசாயம் முக்கியத்துவத்தை இழந்தது.

04 ஒல்லாந்தர் காலத்தில் ஏற்பட்ட பொருளாதார மாற்றங்கள் எவை?

1 ஏற்றுமதியை நோக்காகக் கொண்டு கறுவா, மிளகு முதலிய பயிர்ச்செய்கைகளில் ஈடுபட்டனர்.

2 சிறு கைத்தொழில்களை ஆரம்பித்து செய்து முடிக்கப்பட்ட வெலையின் அளவிற்கு கூலி வழங்கியதால் சம்பளத்திற்கு வேலை செய்யும் தொழிலாளர்கள் சிறிதளவு ஆரம்பமாயினர்.

05 போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆட்சிகாலங்களில் இலங்கையின் மரபு வழிவந்த சமூகப் பொருளாதார முறையில் பாரிய மாற்றம் ஏற்படாமைக்கான காரணம் யாது

கண்டியில் சுதேச அரசு காணப்பட்டமையால்

www.lkedu.lk

06 இலங்கை பிரித்தானிய குடியேற்ற நாடாக மாறியபோது காணப்பட்ட சமூகத்தின் இயல்புகள் எவை?

1 உயர்ந்த பிரபுத்துவ வகுப்பொன்று காணப்பட்டது. அவர்களின் எண்ணிக்கை குறைவாகக் காணப்பட்டது. அவர்கள் நாட்டின் நிர்வாக நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

2 நாட்டின் பெருந்தொகையான மக்கள் சாதாரண குடிமக்களாகக் காணப்பட்டதுடன் அவர்கள் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட வாழ்வை மேற்கொண்டனர்.

3 மக்களது வாழ்க்கை கிராமத்தை அடிப்படையாகக் கொண்டமைந்தது. அவர்களுக்குத் தேவையான உணவுப் பொருட்கள் கிராமத்திலேயே உற்பத்தி செய்யப்படும் சுயதேவைப்பூர்த்திப் பொருளதாரமாகக் காணப்பட்டது.

4 பரஸ்பரம் உதவி புரியும் சமாதான சக வாழ்வு காணப்பட்டது. விவசாய வேலைகளின் போது உழைப்புக்குப் பதில் உழைப்பு பரிமாற்றம் செய்யப்பட்டது அது அத்தம் முறை எனப்பட்டது.

5 கிராமசபைகளால் மக்களின் சிறிய பிரச்சினைகள் விசாரித்து தீர்க்கப்பட்டது. கிராமங் குளங்கள், கால்வாய்கள் பராமரிப்பு மற்றம் வீதிகள், விகாரைகள் அமைக்கும் பொறுப்பும் காணப்பட்டது. இராஜகாரிய முறை மூலம் உழைப்பு பெறப்பட்டது.

07 இராஜகாரிய முறையின் வகைகள் எவை?

1 கட்டாயசேவை இராஜகாரிய முறை

2 நிலத்தை அனுபவிப்பது தொடர்பான இராஜகாரிய முறை

08 அரசர்களுக்கு சேவையாற்றிய பிரபுக்களுக்கு வழங்கப்பட்ட நிலம் எவ்வாறு அழைக்கப்படும்?

சேவாபரவேணி

www.lkedu.lk

09 நிலத்தை அனுபவிப்பது தொடர்பான இராஜகாரிய முறை என்றால் என்ன?

அரசர்களுக்கு சேவையாற்றிய அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட நிலங்கள் சேவாபரவேணி எனப்பட்டன.அரச அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட நிலங்களில் விவசாயம் செய்வதற்காக மக்களுக்கு அவை பகிர்ந்தளிக்கப்பட்டன.இந்த நிலங்களில் பயிரிடுவதற்கான வரியாகத் தமது உழைப்பை வழங்குவது நிலத்தை அனுபவிப்பதற்கான இராஜகாரிய முறை எனப்படும்.

10 கட்டாயசேவை இராஜகாரிய முறை என்றால் என்ன?

நாட்டிலுள்ள வயது வந்த ஆண்கள் அனைவரும் ஆண்டில் குறிக்கப்பட்ட சிலநாட்களில் எவ்வித கொடுப்பனவுமின்றி அரசனுக்கு இலவசமாக சேவை வழங்க வேண்டியிருந்தது. இதுவே கட்டாய அரச சேவை முறை எனப்பட்டது. இதனைப் பயன்படுத்தி வீதிகள் அமைத்தல், அணைக்கட்டுக்கள் அமைத்தல், கால்வாய் அமைத்தல் என்பன மேற்கொள்ளப்பட்டன.

பாடவேளை (12)

கோப்புறுக் ஆணைக்குழுவின் பொருளாதார சீர்திருத்தங்கள்

திரு.நா.செல்வச்சந்திரன்

01 கோல்புறுக் ஆணைக்குழு வருகை தந்தமைக்கான காரணம்?

அரசின் வருமானத்தை விட நிர்வாகச் செலவுகள் அதிகரித்தமை

02 கோல்புறுக் யாப்பில் மேற்கொள்ளப்பட்ட பொருளாதார சீர்திருத்தங்கள் எவை?

1 காணி விற்பனைக் கொள்கை அறிமுகஞ் செய்யப்பட்டமை
2 ஊழியர்களை தடங்கலின்றி பெற்றுக்கொடுக்க வழி ஏற்படுத்தியமை
3 அரசின் வியாபார ஏகாதிபத்தியம் இரத்துச் செய்யப்பட்டமை
4 வரி அறிவீடடு மாற்றம்
5 சேமிப்பு வங்கியை ஆரம்பித்தல்

1 காணி விற்பனைக் கொள்கை அறிமுகஞ் செய்யப்பட்டமை

ஐரோப்பியருக்கு காணிகளை உரித்தாக்கிக் கொள்வதில் காணப்பட்ட தடைகளை நீக்கியமை. அரசு இலவசமாக காணிகளை வழங்கிய முறை இரத்துச் செய்யப்பட்டு அதற்குப்பதிலாக காணி விள்பனைக் கொள்கை அறிமுகஞ் செய்யப்பட்டமை. இதன் மூலம் உள்நாட்டினருக்கம் வெளிநாட்டினருக்கும் இலங்கையில் தமக்குத் தேவையான நிலத்தை விலை கொடுத்து வாங்குவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது.

www.lkedu.lk

2 ஊழியர்களை தடங்கலின்றி பெற்றுக்கொடுக்க வழி ஏற்படுத்தியமை

இதுவரை காலமும் அரசின் தேவைகளுக்கான உழைப்பு கட்டாய சேவை இராஜகாரிய முறை மூலம் எவ்வித கொடுப்பனவுகளும் இன்றி பெற்றுக்கொள்ளப்பட்டது. இது தனியாள் சுதந்திரத்திற்கு தடையாக இருந்ததைப்போலவே தனியார் துறை முயற்சியாண்மைக்கும் பொருத்தமற்றது என கோல்புறுக் சிபாரிசு செய்தார். இதனால் உழைப்பு என்பது பணம் கொடுத்துப் பெற்றுக்கொள்ளக்கூடிய தன்மையைப் பெற்றதுடன் சம்பளத்திற்கு வேலை செய்யும் தொழிலாளர் வகுப்பினர் உருவாகும் வாய்ப்பு ஏற்பட்டது.

3 அரசின் வியாபார ஏகாதிபத்தியம் இரத்துச் செய்யப்பட்டமை

கோல்புறுக் இலங்கை வரும்போது நிலவிய பொருளாதார முறைக்கேற்ப கறுவா மற்றும் உப்பு வர்த்தகம் அரசின் ஏகபோன உரிமையாகக் காணப்பட்டது. இவ்வாறான அரசின் ஏகபோக உரிமை தனியார் துறையின் வளர்ச்சிக்குத் தடையாக இருந்தது. எனவே கறுவா, உப்பு வர்த்தகத்தின் அரச ஏகபோக உரிமையை நீக்கி தனியார் துறையினருக்கும் அவ்வர்த்தகத்தில் ஈடுபடுவதற்கு இடமளிக்குமாறு கோல்புறுக் சிபாரிசு செய்தார்.

திரு.நா.கலைவாணிதாஸ்

பாடவேளை (13)

பெருந்தோட்டத்துறையின் வளர்ச்சி

கோப்பி

01 இலங்கையில் பெருந்தோட்டப்பயிர்ச்செய்கைக்கு அத்திவாரமிட்டவர்கள் யார்?
ஓல்லாந்தர்

02 இலங்கையில் முதன் முதலாக பயிரிடப்பட்ட பெருந்தோட்டப்பயிர் எது? கோப்பி

03 கோப்பிச் செய்கையின் விருத்தியில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள்

1 வெளிநாட்டு முதலீட்டாளர்கள் அதிகளவில் கோப்பித் தொட்டங்களில் முதலீடு செய்தமை
2 ஐரோப்பிய சந்தையில் கோப்பிக்கான கேள்வி அதிகரித்தமை
3 கோப்பிசசெய்கை மூலம் அதிக இலாபம் கிடைத்தமை
4 தென்னிந்திய ஊழியர்கள் மூலம் குறைந்த கூலிக்கு உழைப்பு பெற்றுக்கொள்ளப்பட்டமை

www.lkedu.lk

04 கோப்பிக்கான ஏற்றுமதி வரியைக் குறைத்தவர் யார்? எட்வேட்பாண்ஸ்

05 கோப்பி பயிரிடப்பட்ட பிரதேசங்கள் எவை?

தும்பறை, கம்பளை, பேராதனை, மாத்தளை, பதுளை

06 கோப்பிப் பயிர்ச்செய்கை வீழ்ச்சியடைந்தமைக்கான காரணங்கள் எவை?

1 பிரித்தானிய சந்தையில் இலங்கைக் கோப்பிக்கு இருந்த கடும் போட்டி

2 1848இல் ஏற்பட்ட உலகப் பொருளாதார வீழ்ச்சி

3 1869இல் கோப்பிப் பயிருக்கு ஏற்பட்ட ஹெமிலியா வெஸ்டாக்ஸ் என்னும்இலை வெளிறல் நோய்

07 கோப்பியப் பயிர்ச்செய்கையின் பின்னர் பயிரிடப்பட்ட பயிர் எது?

சிங்கோனா

08 சிங்கோனாவில் இருந்து தயாரிக்கப்பட்ட மருந்து எது?

குயினைன்

09 கோப்பிப் பயிர்செய்கையின் பின்னர் அரச ஆதரவுடன் மேற்கொள்ளப்பட்ட பயிர்ச்செய்கை எது?

கொக்கோ

திரு.நா.செல்வச்சந்திரன்

10 கொக்கோ வெற்றிகரமாக பயிரிடப்பட்ட இடம் எது?

மாத்தளை

பாடவேளை (14)

தேயிலை

01 பொருளாதார ரீதியில் தேயிலையைப் பயிரிட்டவர் யார்?

ஜேம்ஸ் ரெயிலர் (லூல் கந்துர என்னுமிடத்தில்)

02 தேயிலை பயிரிடப்படும் பிரதேசங்கள் எவை?

மாத்தளை, கண்டி, நுவரேலியா, பதுளை

03 தேயிலை ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள இடம் எது?

தலவாக்கொல்லை (நுவரேலியா)

www.lkedu.lk

04 தேயிலையின் விருத்தியில் பங்களிப்புச் செய்த காரணிகள் எவை?

1 இலங்கைத் தேயிலைக்கு உலக சந்தையில் சிறந்த கேள்வி நிலவியமை

2 உலர் வலயம் தவிர இலங்கையின் ஏனைய பிரதேசங்கள் தேயிலைப் பயிர்ச்செய்கைக்கு உகந்ததாகக் காணப்பட்டமை

3 பெருந்தெருக்கள், புகையிரத வீதிகள் காரணமாக போக்குவரத்து வசதிகள் மேலும் முன்னேற்றமடைந்தமை

4 குறைந்த கூலிக்கு உழைப்பு பெற்றுக் கொள்ளப்பட்டமை

தென்னை

05 ஆரம்பத்தில் வீட்டுத்தோட்டப் பயிராகபப் பயிரிடப்பட்ட பெருந்தோட்டப்பயிர் எது?

தென்னை

06 தென்னைப் பயிர்ச்செய்கையில் முக்கிய இடம்பெற்ற இடங்கள் எவை?

குருநாகல், சிலாபம், கம்பஹா

07 தென்னை ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள இடம் எது?

லுணுவில

திரு.நா.செல்வச்சந்திரன்

இறப்பர்

08 இலங்கையில் இறப்பர் பயிரை முதன் முதலில் நட்டவர் யார்?

ஹென்றி விக்கெம்பி

09 இறப்பர் பயிர்ச்செய்கை விருத்தியடைந்தமைக்கான காரணங்கள் எவை?

1 இலங்கைக்குப் பொருத்தமான இறப்பர் இனத்தை அறிந்து அதற்குப் பொருத்தமான தொழினுட்ப முறைகளைப் பயன்படுத்தியமை

2 தேயிலை விலை தற்காலியமாக வீழ்ச்சி கண்டமை

3 முதலாம் உலகப்போரின் போது இறப்பரின் விலை அதிகரித்தமை

10 இறப்பர் பயிரிடப்படும் பிரதேசங்கள் எவை?

கேகாலை, இரத்தினபுரி, கொழும்பு, களுத்துறை

11 இறப்பர் ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள இடம் எது?

அகலவத்தை

www.lkedu.lk

பாடவேளை (15)

பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையால் ஏற்பட்ட சாதக, பாதக மாற்றங்கள்

01 பிரித்தானியர் அறிமுகப்படுத்திய பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையால் ஏற்பட்ட சாதாக பாதக விளைவுகளைக் குறிப்பிடுக.

சாதக விளைவுகள்

1 பொருளாதார முறையானது பெருந்தோட்டத்துறையை அடிப்படையாகக் கொண்ட ஏற்றுமதி, இறக்குமதிப் பொருளாதாரமாக மாறியது.

2 பெருந்தோட்டப்பயிர்ச்செய்கை காரணமாக கண்டி, பதுளை உட்பட நாட்டின் ஏனைய பிரதேசங்களைத் தொடுக்கும் பெருந்தெருக்களும், புகையிரதப் பாதைகளும் அமைக்கப்பட்டமை

3 செய்திப் பரிமாற்ற நடவடிக்கைகள், தொடர்பாடல் துறைகள் விருத்தியடைந்தமை உதாரணமாக அஞ்சற் சேவை ஆரம்பிக்கப்பட்டமை

4 புதிய தொழில் வாய்ப்புக்கள் ஏற்பட்டதுடன் புதிய நகரங்கள் தோன்றின

5 அரசினது பிரதான வருமான மார்க்கமாகப் பெருந்தோட்டத்துறை விளங்கியது.

திரு.நா.தெய்வச்சந்திரன்

பாதக விளைவுகள்

1 பெருந்தோட்டத்துறையின் வளர்ச்சி காரணமாக இந்நாட்டின் தன்னிறைவுப் பொருளாதாரம் சீர்குலைந்து ஏற்றுமதி இறக்குமதி பொருளாதாரம் ஏற்பட்டது.

2 கண்டி மக்கள் விவசாய நிலங்களை இழந்தனர்.

3 மலையகத் தமிழர் பிரச்சினை தோன்றியது.

4 அரிசிக்குக்கூட வெளிநாட்டில் தங்கியிருக்க வேண்டி ஏற்பட்டமை

5 கைத்தொழிற்துறை கவனியாது விடப்பட்டமை

செயற்பாடு :- ''எமது நாடு ஏற்றுமதி இறக்குமதிப் பொருளாதாரக் கோலத்துக்கு உள்ளாகிய விதம்'' என்னும் தலைப்பில் கட்டுரை வரைக.

இலங்கைப்படத்தில் தேயிலை, இறப்பர், தென்னை பயிரிடப்படும் பிரதேசங்களை குறித்துக்காட்டுக.

www.lkedu.lk

பாடவேளை (16)

பிரித்தானியர் கால சமூக மாற்றம்

01 பிரித்தானியர் காலத்தில் ஏற்பட்ட சமுக மாற்றங்கள் எவை?

1 பண்டைய உயர்குடி வகுப்பு தேய்வுற்றமையும் புதிய மத்தியதர வகுப்பு உருவாகியமையும்

2 ஆங்கிலக்கல்வி காரணமாக ஐரோப்பியப் பண்பாட்டை மதிக்கும், மேல் நாட்டவருக்குச் சார்பான ஒரு தொகுதிச் சுதேசிகள் உருவாகியமை.

3 தொழிலாளர் வகுப்பு தோற்றம் பெற்றமை

1 பண்டைய உயர்குடி வகுப்பு தேய்வுற்றமையும் புதிய மத்தியதர வகுப்பு உருவாகியமையும்

- பண்டைய பிரபு வகுப்பினர் பொருளாதார நிலை, சமுக நிலை, அரசியல் நிலை என்பவற்றால் உயர்ந்து விளங்கினர்.
- நில உடமையாளர்களாக இருந்தமையால் அதிக வருமானத்தைப் பெற்றதுடன் ஆட்சியாளர்களுக்குப் பக்கச்சார்பானவர்களாகவும் விளங்கினர்.
- பரம்பரைச் நிலச்சுவாந்தர்களின் வழித்தோன்றல்களான இவர்கள் ரதல பிரதானிகள் எனப்பட்டனர்.
- கோல்புறுக் சீர்திருத்தத்தின் விளைவாகப் பணம் சம்பாதிக்கக்கூடிய பல வழிகள் திறந்து விடப்பட்டன.
- இதனால் செல்வந்தர் வகுப்பொன்று தோற்றம் பெற்றது. இவர்கள் தமது பிள்ளைகளை உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் கல்வி பெறுவதற்கு தமது பணத்தைச் செலவிட்டனர்.
- இதனால் புதிய மத்தியதர வர்க்கத்தினர் தோற்றம் பெற்றனர்.
- கல்வி, செல்வம் என்னும் இரு காரணிகள் மத்தியதர வர்க்கம் தோன்றக் காரணங்களாகும்

www.lkedu.lk

2 ஆங்கிலக்கல்வி காரணமாக ஐரோப்பியப் பண்பாட்டை மதிக்கும், மேல் நாட்டவருக்குச் சார்பான ஒரு தொகுதிச் சுதேசிகள் உருவாகியமை.

- ஆங்கிலக்கல்வி கற்ற அரசாங்கத் தொழில்களைப் பெற்றுக்கொண்ட மத்திய வகுப்பொன்று தோற்றம் பெற்றது
- இவர்கள் அரசியல் ரீதியாகத் திகழ்பவர்களாகவும் விளங்கினர்.
- இவர்கள் மேலைத்தேய கல்வி மூலம் சமுக அந்தஸ்தைப் பெற்றவர்களாவர்.
- எனவே அவர்கள் மேலைத்தேய கலாசாரத்தைப் பின்பற்றும் நகரங்களில் வசிக்கும் செல்வந்த வகுப்பினராகத் திகழ்ந்தனர்.
- 20ம் நூற்றாண்டில் இலங்கையில் இடம்பெற்ற போராட்டங்கள் இவர்களாலேயே மேற்கொள்ளப்பட்டது.

3 தொழிலாளர் வகுப்பு தோற்றம் பெற்றமை

- மரபு ரீதியான ஆட்சிக் காலத்தில் அரசின் பொது வேலைகள் கட்டாய அரச சேவை மூலம் மேற்கொள்ளப்பட்டமையால் கூலிக்கு வேலை செய்யும் வகுப்பு தோற்றம் பெறவில்லை.
- பெருந்தோட்டத்துறைக்கென குறைந்த கூலிக்கு தென்னிந்தியாவிலிருந்து தொழிலாளர்களை தருவித்துக்கொள்வது இலாபகரமாதாக இருந்ததால். பெருந்தோட்ட உரிமையாளர்கள் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களை வரவழைத்தமையால் மலையகப் பகுதிகளில் தொழிலாளர் வகுப்பொன்று உருவாகியது.
- புதிய பொருளாதார நடவடிக்கைகள் காரணமாக நாட்டில் உருவான கண்டி, காலி, கொழும்பு முதலிய மாநகரங்களில் பொருட்களை ஏற்றியிறக்குதல், துணிகளை சலசை செய்தல், கைவண்டிகள் மூலம் பொருட்களை கொண்டு செல்லல், பெருந்தெருக்கள், புகையிரத வீதிகள் அமைத்தல் முதலிய வேலைகளுக்கும் தொழிலாளர்கள் தேவைப்பட்டதனால் நகர்ப்புறங்களில் சுதேச தொழிலாளர் வகுப்பொன்று தோற்றம் பெற்றது.

02 கோல்புறுக் சீர்திருத்தத்தின் விளைவாகத் தோற்றம் பெற்ற புதிய தொழில் வாய்ப்புக்கள் எவை?

1 சாராய உற்பத்தி, விநியோகம் மற்றும் சாராய குத்தகை உரிமைகளைப் பெறுதல்

2 பெருந்தோட்டங்களுக்குத் தேவையான சேவை வழங்கும் ஒப்பந்தக்காராகச் செயற்படல்

3 காரீயம் அகழ்தல் 4 சில்லறை வியாபாரம்

www.lkedu.lk

03 பிரித்தானியர் காலத்தில் எழுச்சி பெற்ற மத்தியதர வகுப்பினர் யாவர்

1 சட்டத்தரணிகள் 2 வைத்தியர்கள்

3 பொறியிலாளர்கள் 4 நில அளவையாளர்கள்

5 எழுதுவினைஞர்கள்

04 தொழிற்சங்கங்கள் உருவாக்கப்பட்டமைக்கான காரணங்கள் எவை?

1 மிகக் குறைந்த சம்பளமே வழங்கப்பட்டமை

2 வேலை செய்யும் நேரம் வரையறுக்கப்படாமை

3 தொழிலாளர் காப்புறுதி, நட்டுஈடு வழங்கும் முறைகள் காணப்படாமை

4 தமது உரிமைகளை வென்றெடுப்பதற்கும் குறிப்பிட்டதுறை தொழிலாளரிடையே ஒற்றுமையை ஏற்படுத்தவும்

05 20ம் நூற்றாண்டில் மேற்கொள்ளப்பட்ட வேலை நிறுத்தங்கள் எவை?

1 கொழும்ப அச்சகத் தொழிலாளர் வேலை நிறுத்தம்

2 சலவைத் தொழிலாளர் வேலை நிறுத்தம்

3 கைவண்டித் தொழிலாளர் வேலை நிறுத்தம்

திரு.நி.செல்வகுமாரன்

06 நகர்ப்புறத் தொழிலாளர்களின் தொழிற்சங்கத்திற்கு தலைமை தாங்கியவர் யார்?

1922 – 1935 வரை சிறப்பாகத் செயற்பட்ட தொழிலாளர் தலைவர் யார்?

ஏ.ஈ.குணசிங்க

07 தோட்டத்தொழிலாளர் தொழிற்சங்கத்தை அமைத்தவர் யார்?

கோ.நடேசஐயர்

www.lkedu.lk

பாடவேளை (17)

பண்பாட்டு மாற்றங்களுக்கான காரணங்கள்

01 இலங்கையில் மேலைத்தேயக் கலாசாரம் பரவக் காரணங்கள் எவை?

1 கோல்புறுக் யாப்பின் ஆங்கில மொழி மூலமான மெவைத்தேயக் கல்வி முறை வேகமாகப் பரவியமை

2 மிசனரிப் பாடசாலைகளிலும் அரச அனுசரணை பெற்ற பாடசாலைகளிலும் செயற்படுத்தப்பட்ட கற்பித்தல் நடவடிக்கை மூலமாக மேலைத்தெசக் கலாசாரம் பரவியது.

3 உயர் கல்விக்காக வெளிநாடு சென்று வந்தவர்களாலும் மேலைத்தெயக் கலாசாரம் பரவியது.

4 ஐரோப்பியரின் அதிகரித்த வருகைக்காக ஏற்படுத்தப்பட்ட விடுமுறைக்கால விடுதிகள் மற்றும் இரவுக் களியாட்ட விடுதிகள் மூலமாக

திரு.நா.செல்வக்குமரன்

02 19ம் நூற்றாண்டில் ஐரோப்பியர் இலங்கைக்கு அதிகளவில் வந்தமைக்கான காரணம் யாது?

பெருந்தோட்டத்துறையின் பரம்பல், வர்த்தக வளர்ச்சி, போக்குவரத்து துறையின் வளர்ச்சி தொடர்பாடல் துறையின் வளர்ச்சி

03 இலங்கையின் கலாசாரத்தோடு இணைந்து கொண்ட மேலைத்தேயக் கலாசார அம்சங்கள் எவை?

ஆடையணிகள், பழக்கவழக்கம், வாழ்த்து வணக்கம் செலுத்தும் முறைகள், கட்டட கலையம்சங்கள், உணவு, பான வகைகள்.

www.lkedu.lk

பாடவேளை (18)

பிரித்தானியர் ஆட்சியினால் ஏற்பட்ட சாதகமான அம்சங்கள்

01 இலங்கை பிரித்தானியரின் சுரண்டலுக்கு உட்பட்ட ஆண்டுகளின் எண்ணிக்கை? 133

02 பிரித்தானிய ஆட்சியின் மூலமாகப் பெற்றுக்கொண்ட பயன்மிக்க அம்சங்கள் எவை?

1 ஆங்கிலமொழி, அங்கிலக்கல்வி பெற வாய்ப்புக்கள் கிடைத்தமை

2 போக்குவரத்து, செய்திப் பரிமாற்றம் என்பன விருத்தியடைந்தமை

3 பிரித்தானியாவில் ஏற்பட்ட கைத்தொழிற்புரட்சியின் செல்வாக்கு இலங்கையிலும் பரவியது. (உபகரணங்கள், பொறிகள் அவை தொடர்பான தொழினுட்பம், பாதைகள் போன்றவை)

4 சிறு கைத்தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டமை.

5 ஏற்றுமதிக்கான பெருந்தோட்டப்பயிர்கள் அறிமுகம் செய்யப்பட்டமை.

6 பாராளுமன்ற ஆட்சி மறை உருவானமை.

பாடவேளை (19)

பிரித்தானியர் ஆட்சியினால் ஏற்பட்ட பாதகமான அம்சங்கள்

அ.நா.தென்னவச்சந்திரன்

01 பிரித்தானியர் ஆட்சியால் ஏற்பட்ட பாதகமான அம்சங்கள் எவை?

1 மேலைத்தேயக் கலாசாரத்தின் பரவல் காரணமாக உள்நாட்டுக் கலாசாரம் பாரம்பரியம் சீர்குலைந்தமை.

2 மதுபானப் பாவனை நாடெங்கும் பரவியமை

3 காணி உரிமையற்ற மக்கள் கூட்டம் உருவானமை

4 மரபு ரீதியான தன்னிறைவுப் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்ததுடன் தேசிய ரீதியான அறிவும் ஆற்றலும் மழுங்கடிக்கப்பட்டமை

5 கிராமசபை போன்ற பயனுள்ள அமைப்புக்கள் அழிவுற்றமை

பாடவேளை (20)

விவாதம் :- ''பிரித்தானியரின் ஆட்சிக்காலத்தில் இலங்கைச் சமுகத்திற்கு நன்மைகளே கிடைத்தன அல்லது தீமைகளே கிடைத்தன''

www.lkedu.lk

அலகு – 06

இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்தல்

(பாடவேளைகள் 16)

பாடவேளை (21)

சோல்பரி அரசியல் சீர்திருத்தம்

01 இலங்கை சுதந்திரம் அடைந்த ஆண்டு எது?

1948.02.04

02 இலங்கைக்கு சுதந்திரம் வழங்கப்படும்போது நடைமுறையிலிருந்த அரசியல் யாப்பு எது?

சோலபரி யாப்பு

03 சோல்பரி ஆணைக்குழு நியமிக்கப்பட்ட ஆண்டு எது?

1944

தமிழா செல்வச்சந்திரன்

04 இலங்கையில் முதல் தடவையாக அரசியல் கட்சி முறையின் கீழ் தேர்தல் இடம்பெற்ற ஆண்டு எது? 1947

05 1947 பொதுத்தேர்தலில் போட்டியிட்ட கட்சிகள் ஐந்தைக் குறிப்பிடுக?

ஐக்கியதேசியக்கட்சி, இலங்கை சமசமாஜக்கட்சி, தமிழ் காங்கிரஸ், இலங்கை கம்யூனிசக் கட்சி, தொழிலாளர் கட்சி

06 அத்தேர்தலில் வெற்றி பெற்ற கட்சி எது?

ஐக்கிய தேசியக்கட்சி (42)

07 ஐக்கிய தேசியக் கட்சியை தோற்றுவித்தவர் யார்? டி.எஸ்.சேனநாயக்கா

08 இலங்கைக்கு வழங்கப்பட்ட பொதுநலவாயத்திற்கு உட்பட்ட சுதந்திர நாடொன்றின் அந்தஸ்து என்பது எப்பெயரால் அழைக்கப்படும்?

டொமினியன் அந்தஸ்து

LEARN EASY
KNOWLEDGE IS POWER

zoom

LEARN EASY
- KNOWLEDGE IS POWER -
www.learneasy.lk || www.lkedu.lk
76667-4945

பிரிவு 1&2

தரம் 01
தொடக்கம்

ஆரம்பம்: தரம் 11 வரை

76667-4945



2025

Grade 1 - 11
தமிழ் மீடியம்

Grade 6 - 8
English Medium

COMMERCIAL BANK
Easy to Learn (Pvt) Ltd
Wellawatte
8008392295

BOC
BANKERS TO THE NATION
S.Kishokumar
Nelliyaddy Branch
86479603

PEOPLE'S BANK
S.Kishokumar
Jaffna University
162-2-001-7-0028670

eZ Cash
0766674945

www.lkedu.lk

09 பிரித்தானியா இலங்கையின் வெளிவிவகாரங்களை தன்வசம் வைத்திருப்பதற்கு ஏற்பாடு செய்தமைக்கான காரணம் யாது?

இலங்கையின் புவியில் அமைப்பு பாதுகாப்பு, யுத்த நடவடிக்கைகளுக்கு முக்கியமான படியால்

10 இலங்கையின் முதலாவது பிரதமர் யார்?

டி.எஸ்.சேனாநாயக்கா

11 டி.எஸ்.சேனநாயக்காவுக்கும் பிரித்தானியருக்கும் இடையில் இடம்பெற்ற ஒப்பந்தங்கள் எவை?

1 பாதுகாப்பு ஒப்பந்தம் - தேவையேற்பட்டால் பிரித்தானியா கப்பல், விமானம் உட்பட ஏனைய படை நடவடிக்கைகளுக்கு இலங்கையை உபயோகப்படுத்திக் கொள்ளல்.

2 வெளிவிவகார ஒப்பந்தம் - சுதந்திர நாடு ஒன்றாக வெளிநாடுகளுடன் புதிதாக உறவுகளை மேற்கொள்வதற்கு பிரித்தானியரின் உதவியைப் பெற்றுக்கொள்ளல்.

திரு.நடராசா செல்வராஜ்திரன்

12 இலங்கைச் சுதந்திரச் சட்டம் கொண்டு வரப்பட்ட ஆண்டு எது?

1947.12.19

13 சோல்பரி யாப்பின் முக்கிய இயல்புகள் எவை?

1 ஆளுநர் நாயகம்

2 இருசபைகளைக் கொண்ட பாராளுமன்றம்

3 பிரதமர் தலைமையிலான அமைச்சரவை

4 நீதிச் செயற்பாடுகள்

www.lkedu.lk

1 ஆளுநர் நாயகம்

இதுவரை இருந்த ஆளுநர் பதவி நீக்கப்பட்டு ஆளுநர் நாயகம் என்னும் பதவி ஏற்படுத்தப்பட்டது. பிரித்தானிய மகராணியே இலங்கையின் தலைவியாக ஏற்றுக்கொள்ளப்பட்டதனால் அவரின் இந்நாட்டு பிரதிநிதியாக ஆளுநர் நாயகம் செயற்பட்டார். இது பெயரளவு நிறைவேற்றுத்துறைப் பதவியாகும். பிரதமரரின் ஆலோசனைகளைப் பின்பற்றுதல் வேண்டும்.

2 இருசபைகளைக் கொண்ட பாராளுமன்றம்

இருசபைகளாக பிரதிநிதிகள் சபை, செனட்சபை(மூதவை) என்பன உருவாக்கப்பட்டன. பிரதநிதிகள் சபையில் 101 பேர் இடம்பெற்றனர். இதில் 95 பேர் மக்களால் தேர்தல் மூலம் மக்களால் தெரிவுசெய்யப்படுவர். எஞ்சிய ஆறுபேரும் சிறுபான்மையினருக்காக பிரதமரின் ஆலோசனைப்படி ஆளுநர் நாயகத்தால் நியமிக்கப்பட்டனர். இவர்களின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகளாகும். செனட்சபைக்கு 30 பேர் நியமிக்கப்பட்டனர். இதில் 15 பேர் பிரதிநிதிகள் சபையால் நியமிக்கப்பட்டனர். ஏனைய 15 பேரும் பிரதமரின் ஆலோசனைப்படி ஆளுநர் நாயகத்தால் நியமிக்கப்பட்டனர். இவர்களின் பதவிக்காலம் ஆறு ஆண்டுகளாகும்.

திரு.நாகேஸ்வரக்குருக்கள்

3 பிரதமர் தலைமையிலான அமைச்சரவை

பிரதமர் அமைச்சரவையின் தலைவராவார். பிரதிநிதிகள் நபையில் பெரும்பான்மை அங்கத்தவர்களின் ஆதரவைப் பெறும் ஒருவர் ஆளுநர் நாயகத்தால் பிரதமராக நியமிக்கப்படுவார். அமைச்சர்கள் பிரதமரின் ஆலோசனைப்படி ஆளுநர் நாயகத்தால் நியமிக்கப்படுவர். பிரதமர் பாதுகாப்பு, வெளிவிவகார அமைச்சுக்களின் பொறுப்புக்களை வகிப்பார். நீதி அமைச்சரும் இன்னொரு அமைச்சரும் மேல்சபையிலிருந்து தெரிவு செய்யப்படுவர்.

www.lkedu.lk

பாடவேளை (22)

அரசியல் கட்சிகளின் தோற்றம்

01 அரசியல் கட்சி என்றால் என்ன?

அரசியல் கட்சி என்பது நாட்டின் ஆட்சிக்காக ஒழுங்கமைக்கப்பட்ட கொள்கைகளின் அடிப்படையில் ஆட்சி அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் ஒன்றிணைந்த மக்கள் குழுவாகும்

02 அரசியல் கட்சிகளின் முக்கியத்துவங்கள் எவை?

1 பாராளுமன்ற ஜனநாயகம் காணப்படும் எல்லா நாடுகளிலும் காணப்பட வேண்டிய பண்பாகும்.

2 அவ்வவ் கட்சிகளின் கொள்கை அடிப்படையில் மக்களை ஒன்று திரட்டுவதற்கு

3 அரசியல் வாதிகளுக்கும் பொதுமக்களுக்குமிடையிலான உறவைக் கட்டியெழுப்புவதற்கு

4 கட்சியின் கொள்கைகளை மக்கள் முன் கொண்டு செல்வதற்கு

திரு.நா.செல்வேந்திரன்

03 இலங்கையில் எந்த ஐரோப்பிய இனத்தவர் காலத்தில் கட்சி முறைகள் தோற்றம் பெற்றன?

ஆங்கிலேயர் காலத்தில்

04 இலங்கையில் கட்சி முறைகள் அடிப்படையில் முதலாவது தேர்தல் நடைபெற்ற ஆண்டு எது?

1947

05 1947இல் இடம்பெற்ற தேர்தலில் போட்டியிட்ட கட்சிகள் எவை?

இலங்கை சமசமாஜக்கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, இலங்கை கம்யுனிஸ்ட் கட்சி, தமிழ்க் காங்கிரஸ்

06 இலங்கையின் பழைய அரசியல் கட்சி எது? அது எத்தனையாம் ஆண்டு தோற்றம் பெற்றது? அக்கட்சியின் தோற்றத்திற்குக் காரணமான தலைவர்கள் யார்?

இலங்கை சமசமாஜக்கட்சி – 1935

என்.எம். பெரேரா, கொல்வின் ஆர்.டி.சில்வா, பிலிப் குணவர்த்தனா

www.lkedu.lk

07 இக்கட்சியிலிருந்து 1943இல் பிரிந்த கட்சி எது? அதனைத் தோற்றுவித்தவர் யார்?

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி – எஸ்.ஏ.விக்கிரமசிங்க

08 ஐக்கிய தேசியக் கட்சி தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு எது? அதனைத் தோற்றுவித்தவர் யார்?

1946 – டி.எஸ்.சேனநாயக்கா

09 ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்ட அமைப்புக்கள் எவை?

இலங்கைத் தேசிய சங்கம், சிங்கள மகாசபை,

10 ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு எது? அதனைத் தோற்றுவித்தவர் யார்?

1951 – எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா

11 இலங்கையில் செயற்பட்ட ஏனைய அரசியல் கட்சிகள் எவை?

1 தொழிலாளர் கட்சி - ஏ.ஈ.குணசிங்க

2 தமிழ் காங்கிரஸ் - ஜீ.ஜீ. பொன்னம்பலம்

3 தமிழரசுக்கட்சி அல்லது சமஸ்டிக் கட்சி – எஜ்.ஜே.வி. செல்வநாயகம்

திரு.நா.செல்வச்சந்திரன்

பாடவேளை (23)

1956 பொதுத் தேர்தல்

01 1956 பொதுத் தேர்தலில் வெற்றி பெற்ற கட்சி எது? பிரதமராக தெரிவு செய்யப்பட்டவர் யார்?

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா

02 ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வெற்றி பெற்றமைக்கான காரணங்கள் எவை?

1 புதிய சக்திகள் பல சேர்ந்து போட்டியிட்டமை

2 சுதேச கலாசாரத்தை மதிக்கும் கொள்கையைக் கடைப்பிடித்தமை

3 அதுவரை தீர்க்கப்படாதிருந்த சமூக, பொருளாதாரப் பிரச்சினைகள் பலவற்றிற்கும் தீர்வு வழங்க முயற்சித்தமை

03 1952இல் பிரதமராக நியமிக்கப்பட்டவர் யார்?

டட்லி சேனநாயக்கா

www.lkedu.lk

04 டட்லி சேனநாயக்கா 1953இல் பதவி விலகியமைக்கான காரணம் யாது?

அரிசி மற்றும் உணவுப் பொருட்களின் விலை அதிகரித்தமையால் இடதுசாரிகள் மேற்கொண்ட ஹர்த்தால் காரணமாக

05 டட்லி சேனாநாயக்கா பதவி விலகியமையைத் தொடர்ந்து பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டவர் யார்? சேர்.ஜோன்.கொத்தலாவல

06 1956 பொதுத்தேர்தலில் சுதந்திரக் கட்சியுடன் இணைந்து போட்டியிட்ட கட்சிகள் எவை?

பிலிப் குணவர்த்தன தலைமையிலான புரட்சிகர சமசமாஜக்கட்சி, விஜயானந்த தஹநாயக்கா அவர்களின் பாஷா பெரமுண

07 1956இல் இடம்பெற்ற தேர்தலின் முக்கிய தொனிப்பொருளாக அமைந்த விடயம் எது?

சிங்களத்தை அரச கரும மொழியாக மாற்றுதல்

08 ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணிக்கு ஆதரவ வழங்கிய ஐம்பெரும் சக்திகளும் எவை?

பிக்குகள், சுதேச வைத்தியர்கள், ஆசிரியர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள்

திருமதி செல்வச்சந்திரன்

09 1956 தேர்தலின் முடிவுகள் எவை?

மக்கள் ஐக்கிய முன்னணி - 51 ஆசனங்கள்

இலங்கை சமசமாஜக்கட்சி - 14

ஐக்கிய தேசியக் கட்சி - 8

தமிழரசுக்கட்சி - 10

10 பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்காவின் ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற முக்கிய சம்பவங்கள் எவை?

1 சிங்களத்தை அரச சரும மொழியாக்கியமை

2 பிரித்தானியாவுடன் 1947இல் செய்துகொள்ளப்பட்ட பாதுகாப்பு, வெளிவிவகார ஒப்பந்தத்தை இரத்துச் செய்தமை

3 வல்லரசுகளின் அணிகளிலிருந்து விலகி நடுநிலைமையான வெளிநாட்டுக் கொள்கையைக் கடைப்பிடித்தமை

www.lkedu.lk

4 தேசியமயப்படுத்தும் திட்டத்திற்கு அமைவாக துறைமுகம், போக்குவரத்து என்பவை அரசுடமையாக்கப்பட்டன.

5 உயர் கல்வித் துறையின் விருத்திக்காக வித்தியோதய, வித்தியலங்கார பிரிவெனக்கள் பல்கலைக்கழகங்களாக தரமுயர்த்தப்பட்டமை

11 பண்டாரநாயக்கா சுட்டக்கொல்லப்பட்ட ஆண்டு எது?

1959

12 உலகின் முதலாவது பெண் பிரதமர் யார்?

ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா

பாடவேளை (36 – 24)

முதலாம் குடியரசு அரசியல் யாப்பு

01 1947 – 1972 வரை இலங்கையில் நடைமுறையிலிருந்த யாப்பு எது? சோல்பரி

02 சோல்பரி யாப்பின்படி இந்நாட்டின் பெயரளவு ஆட்சித்தலைவர் யார்?

பிரித்தானிய மகராணி

திரு.நா.தேவல்வச்சந்திரன்

03 1970 பொதுத் தேர்தலில் இணைந்து போட்டியிட்ட கட்சிகள் எவை?

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி , சமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி

04 1970 பொதுத் தேர்தலின் பிரச்சாரமாக அமைந்தது எது?

புதிய அரசியல் யாப்பை உருவாக்குதல்

05 1970 பொதுத்தேர்தலில் வெற்றி பெற்று பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டவர் யார்?

ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா

06 இலங்கையில் 1972 மே மாதம் 22ம் திகதி நடைமுறைக்கு வந்த யாப்பு எது?

‘ முதலாம் குடியரசு யாப்பு

07 இவ் யாப்பின் அடிப்படை அம்சங்கள் எவை?

1 லங்கா எனப்பட்ட இந்நாடு ஸ்ரீலங்கா என அழைக்கப்படும்

2 பிரித்தானியப் பேரரசுடன் கொண்டிருந்த அரசியல் யாப்பு ரீதியான தொடர்புகளை முடிவுக்குக் கொண்டுவரல்

3 இலங்கையை ஒன்றுபட்ட குடியரசாக்குதல்

4 மனித உரிமைகளைப் பாதுகாத்தல்

www.lkedu.lk

08 இவ் யாப்பின் முக்கிய சீர்திருத்தங்கள் எவை?

1 பெயரளவு ஜனாதிபதிப் பதவி 2 தேசிய அரசுப்பேரவை

3 அடிப்படை மனித உரிமைகள்

4 பிரதமர் தலைமையிலான அமைச்சரவை

5 நீதிமன்றங்கள்

1 பெயரளவு ஜனாதிபதிப் பதவி

சோல்பரி யாப்பின் ஆளுநர் நாயகத்திற்குப் பதிலாக புதிய அரசியல் யாப்பின் படி பெயரளவு ஜனாதிபதிப் பதவி உருவாக்கப்பட்டது. இவரை நியமிக்கும் அதிகாரம் பிரதமருக்கு இருந்தது. இதுவரை காணப்பட்ட ஆளுநர் நாயகத்தின் அதிகாரங்கள் இவருக்கு வழங்கப்பட்டன. முதலாவது பெயரளவு ஜனாதிபதியாக வில்லியம் கோபல்லாவ தெரிவு செய்யப்பட்டார்.

2 தேசிய அரசுப்பேரவை

1972க்கு முன்னர் பாராளுமன்றம் என்றழைக்கப்பட்ட சட்டசபைக்குப் பதிலாக தேசிய அரசுப் பேரவை உருவாக்கப்பட்டது. இது பொதுமக்களால் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளைக் கொண்டதாகும். இலங்கை தொடர்பான சட்டமியற்றும் பூரண அதிகாரம் இதற்கு வழங்கப்பட்டது. அதன் பதவிக்காலம் ஆறு ஆண்டுகளாகும்.

திரு.ரா.செல்வச்சந்திரன்

3 அடிப்படை மனித உரிமைகள்

இவ்யாப்பின் 18வது விதியில் அடிப்படை மனித உரிமைகள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

1 சட்டத்தை அனுபவித்தல், செயற்படுத்தல், பாதுகாப்புப் பெறல் அனைவருக்கும் பொதுவானதாகும்.

2 சட்டத்தின் மூலமாகவன்றி நபர் ஒருவரின் உயிரிற்கும் சுதந்திரத்திற்கும் பாதுகாப்பிற்கும் இடைஞ்சல் புரியக்கூடாது

3 அனைத்து குடிமக்களுக்கம் சிந்திக்கும் சுதந்திரத்திற்கும் மனசாட்சிப்படி நடக்கும் சுதந்திரத்திற்கும் உரிமையுண்டு.

4 குடிமக்களுக்கு அமைதியாக ஒன்று கூடுவதற்கும் தமது கருத்துக்களை வெளியிடுவதற்கும் சுதந்திரமுண்டு.

www.lkedu.lk

09 முதலாம் குடியரசு யாப்பின் அமைச்சரவையின் தலைவர் யார்?

பிரதமர்

10 முதலாம் குடியரசு யாப்பில் அமைக்கப்பட்ட நிதிமன்றங்கள் எவை?

உச்ச நீதிமன்றம், மேல் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம், நீதவான் நீதிமன்றம்

11 முதலாம் குடியரசு யாப்பில் நீதிமன்றங்களின் சதந்திரத்தைப் பாதுகாப்பதற்கு உருவாக்கப்பட்ட அமைப்பு எது?

நீதிச்சேவை ஆணைச்சபை, நீதிமன்ற ஒழுக்காற்று சபை

பாடவேளை (25)

இரண்டாம் குடியரசு அரசியல் யாப்பு

01 1977 பொதுத் தேர்தலில் கட்சிகள் பெற்ற ஆசனங்கள் எத்தனை?

ஐக்கிய தேசியக் கட்சி	- 140
தமிழர் விடுதலைக் கூட்டணி	- 18
ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி	- 8
தொழிலாளர் சங்கம்	- 1
சுயேட்சை	- 1 (மொத்தம் 168)

திரு.பா.செல்வச்சந்திரன்

02 1978இல் நடைமுறைக்கு வந்த அரசியல் யாப்பு எது?

இரண்டாம் குடியரசு அரசியல் யாப்பு

03 இரண்டாம் குடியரசு யாப்பின் அடிப்படை அம்சங்கள் எவை?

1 இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு என அழைக்கப்படும்

2 அது ஒற்றையாட்சி நாடாகக் காணப்படும்

3 மக்களிடம் உள்ள சட்டத்தறை அதிகாரம், சர்வஜன வாக்குரிமை மூலம் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளாலும், பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பின் மூலம் பொதுமக்களினாலும் மக்களின் இறைமை வெளிப்படுத்தப்படும்.

4 பொதுமக்களின் நிறைவேற்றதிகாரம் மக்களால் தெரிவு செய்யப்படும் ஜனாதிபதியால் நிறைவேற்றப்படும்.

5 பொதுமக்களின் நீதிமன்ற அதிகாரங்கள் யாப்பின் மூலம் உருவாக்கப்பட்டுள்ள நீதிமன்றத் தொகுதியால் செயற்படுத்தப்படும்.

www.lkedu.lk

04 இரண்டாம் குடியரசு யாப்பின் முக்கிய சீர்திருத்தங்கள் எவை?

1 நிறைவேற்று ஜனாதிபதி 2 பாராளுமன்றம்

3 நீதிமன்றம் 4 பிரதமரும் அமைச்சரவையும்

5 அடிப்படை உரிமைகள்

05 நிறைவேற்று ஜனாதிபதியின் அதிகாரங்கள் எவை?

1 அரசின் தலைவர் என்ற வகையில்

1 சர்வதேச மட்டத்தில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தல்.

2 சர்வதேச உடன்படிக்கையை மேற்கொள்ளல்

3 அரச வைபவங்களுக்கு தலைமை தாங்குதல்

4 வெளிநாட்டுத் தூதுவர்களை நியமித்தலும் அங்கிகரித்தலும்

5 அரச முத்திரையைப் பாதுகாத்தல்

2 சட்டத்துறையுடன் தொடர்பான அதிகாரங்கள்

1 பாராளுமன்றத்தைக் கூட்டல், கலைத்தல், ஒத்திவைத்தல், இடைநிறுத்தல்.

திரு.நா.செல்வச்சந்திரன்

2 அரச கொள்கை விளக்கத்தை முன்வைத்தல்

3 பாராளுமன்நத்தின் சடங்கு ரீதியான இருக்கைகளுக்கு தலைமை தாங்குதல்

3 நிறைவேற்றுத்துறையின் தலைவர் என்ற வகையில்

1 அரச கொள்கையை நடைமுறைப்படுத்தல்

2 அரச கொள்கையை கட்டுப்படுத்தல்

3 அரச சேவை உயர் அதிகாரிகளை நியமித்தல்

4 முப்படைகளுக்கு தலைமை தாங்குதல்

5 போரையும் சமாதானத்தையும் பிரகடனப்படுத்தல்

www.lkedu.lk

4 நீதித்துறை தொடர்பான அதிகாரங்கள்

1 குற்றவாளிகளுக்கு மன்னிப்பு வழங்குதல்

2 உயர் நீதிமன்றத்தின் நீதிபதி உட்பட மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளை நியமித்தல்

06 இரண்டாம் குடியரசு யாப்பின் எத்தனையாவது உறுப்புரையில் ஜனாதிபதி அரசாங்கத்தின் தலைவரும், நிறைவேற்றுத்துறையின் தலைவரும், முப்படைகளினதும் பிரதம தளபதி எனக் குறிப்பிடப்பட்டுள்ளது?

30வது உறுப்புரை

07 இரண்டாம் குடியரசு யாப்பின் பிரகாரம் அமைச்சரவையின் தலைவர் யார்?

ஜனாதிபதி

08 பிரதமரை நியமிப்பவர் யார்? ஜனாதிபதி

09 அமைச்சரவையின் பொறுப்புக்கள் எவை?

திரு.நா.செல்வச்சந்திரன்

1 பாராளுமன்றத்தால் பிறப்பிக்கப்படும் சட்டங்களைச் செயற்படுத்தல்

2 ஒவ்வொரு அமைச்சுக்கும் வரவு – செலவுத்திட்ட மதிப்பீட்டைத் தயாரித்தல்

3 அமைச்சர்களிடம் வழங்கப்பட்டுள்ள துறைகளைப் பொறுப்பேற்று நடைமுறைப்படுத்துதல்

பாராளுமன்றம்

10 இரண்டாம் குடியரசு யாப்பில் சட்டமன்றம் எவ்வாற அழைக்கப்படுகிறது? அதன் உறுப்பினர்களின் எண்ணிக்கை யாது, அவர்கள் எவ்வாறு தெரிவு செய்யப்படுவர்.

பாராளுமன்றம் 225 உறுப்பினர் (விகிதாசாரத் தேர்தல் மூலம் 196பேரும், தேசியப்பட்டியல் மூலம் 29 பேரும் அடங்குவர்)

11 பாராளுமன்றத்தின் அதிகாரங்கள் எவை?

1 சட்டத்தைப் பிறப்பித்தல் 2 நிதியைக் கையாளுதல்

3 வரவு செலவுத் திட்டத்தை அனுமதித்தல்

4 அபிவிருத்தித் திட்டங்களை வகுத்தல்

www.lkedu.lk

பாடவேளை (26)

நீதிமன்றங்கள்

01 இரண்டாம் குடியரசு யாப்பின் பிரகாரம் அமைக்கப்பட்டுள்ள நீதிமன்றங்களையும் அவற்றின் அதிகாரங்களையும் குறிப்பிடுக?

நீதிமன்றங்கள்	அதிகாரங்கள்
உச்ச நீதிமன்றம்	• இலங்கையின் இறுதியானதும் அதிஉயர் மேன்முறையீட்டு நீதிமன்ற அதிகாரமுடைய நீதிமன்றமாகும். • இதன் தலைவர் பிரதம நீதியரசராவார். • இதன் அதிகாரங்கள் ➢ அரசியல் யாப்புக்கு வியாக்கியானம் கூறுதல் ➢ அடிப்படை உரிமைகள் தொடர்பாக விசாரணை செய்தல் ➢ தேர்தல் முறைப்பாடுகளை விசாரணை செய்தல் ➢ பாராளுமன்றத்தின் வரப்பிரசாதங்கள் மீறப்படல் தொடரடபான குற்றங்களை விசாரித்தல் ➢ ஜனாதிபதிக்கு எதிராகப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் குற்றப் பிரேரணைகள் தொடர்பாகப் பரிசீலித்தல் ➢ இறுதி மேன்முறையீட்டை விசாரித்தல்
மேன்முறையீட்டு நீதிமன்றம்	➢ பாராளுமன்றத் தேர்தல் தொடர்பான முறைப்பாடுகளை விசாரித்தல் ➢ பல்வேறு கட்டளைகளைப் பிறப்பித்தல்(போபியஸ்கோபஸ், சர்சியோராரி, மெண்டிமுஸ்) ➢ மேல் நீதிமன்றம் மற்றம் வேற நீதிமன்றத் தீர்ப்புகளை எதிர்த்து தொடுக்கப்படும் வழக்குகளை விசாரித்தல் ➢ நீதிமன்றத்தின் அறிக்கைகளை திறனாய்வு செய்வதற்கும் பரிசீலிப்பதற்குமான அதிகாரம்
மேல் நீதிமன்றம்	1 பாரிய குற்றச்செயல்கள் தொடர்பான நீதி அதிகாரம் கொலை, கற்பழிப்பு, அரச விரோத சூழ்ச்சிகள், பாரிய கொள்ளை 2 கடற்பரப்பு குற்றச்செயல்கள் தொடர்பான நீதி அதிகாரம் 3 இலங்கை வான்பரப்பில் மேற்கொள்ளப்படும் குற்றம் தொடர்பான நீதி அதிகாரம் 4 இலங்கையர் ஒருவர் வெளிநாட்டில் புரிந்த குற்றச்செயல்கள்

திருமதி. மஞ்சுவாசுகி

www.lkedu.lk

மாவட்ட நீதிமன்றம்	• விவாகம் தொடர்பான வழக்குகள் • தெஸ்தமென்து(விருப்பாவண வழக்கு) • காணி வழக்குகள் • பிள்ளைகளைத் தத்தெடுப்பதற்கான விண்ணப்பம் • பிரிவினை வழக்குகள்
நீதவான் நீதிமன்றம்	• பொதுமக்களின் பாதுகாப்பு தொடர்பான குற்றச் செயல்கள் • போர், விமானப்படை, கடற்படை, இராணுவம் தொடர்பான குற்றங்கள் • அரச ஊழியர் தொடர்பான குற்றங்கள் • தேர்தல் தொடர்பான குற்றங்கள்

02 நீதிமன்றங்களின் சுதந்திரத்தைப் பாதுகாக்கும் பொருட்டு உருவாக்கப்பட்ட அமைப்பு எது?

நீதிச்சேவை ஆணைக்குழு

03 நீதிச்சேவை ஆணைக்குழுவின் தலைவர் யார்?

பிரதமநீதியரசர்

திரு.நா.செல்வச்சந்திரன்

04 நீதிச்சேவை ஆணைக்குழுவின் பணிகள் எவை?

1 மேல் நீதிமன்ற நீதிபதிகளின் இடமாற்றங்களை மேற்கொள்ளுதல்

2 நீதித்துறை உத்தியோகத்தர்களின் பயிற்சி 3 அவர்களின் பதவி உயர்வு

4 ஒழுக்காற்று நடவடிக்கைகள்

05 இரண்டாம் கடியரசு யாப்பில் கூறப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் எவை?

1 சட்டத்தின் முன் அனைவரையும் சமமாக மதித்தல்

2 பேச்சு, கருத்துத் தெரிவித்தல் தொடர்பான சுதந்திரம்

3 கொடூர தண்டனையிலிருந்து விடுபடும் சதந்திரம்

4 விரும்பும் சமயத்தை, கொள்கைகளை, நம்பிக்கைகளை பின்பற்றும் சுதந்திரம்

06 அரசாங்க, கூட்டுத்தாபன சேவைகளில் பணியாற்றும் ஒருவரது உரிமைகள்

www.lkedu.lk

மீறப்பட்டால் விசாரிப்பவர் யார்?

ஒம்புட்ஸ்மன் (குறைகேள் அதிகாரி)

பாடவேளை (27)

07 1978இல் உருவாக்கப்பட்டுள்ள வாக்களிப்பு முறைகள் எவை?

1 ஜனாதிபதித் தேர்தல்

2 விகிதாசார பிரதிநிதித்துவத் தேர்தல்

3 பொதுசன அபிப்பிராயத் தேர்தல்

1 ஜனாதிபதித் தேர்தல்

இதன் போது நாடு முழுவதும் ஒரு தேர்தல் தொகுதியாகக் கருதப்படும். அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளில் 50வீதத்திலும் கூடுதலாகப் பெற்றவர் ஜனாதிபதியாவார். முதலாவது நிறைவேற்று ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா ஆவார். ஜனாதிபதியின் பதவிக்காலம் 6 ஆண்டுகள்.(தற்போது 5 ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டுள்ளது) 4 ஆண்டுகள் கழித்து தேர்தல் நடத்தப்படலாம். ஆர்.பிரேமதாஸா, சந்திரிகா குமாரதுங்கா, மகிந்த ராஜபக்ச, மைத்திரிபால சிறிசேனா ஆகியோர் நிறைவேற்று ஜனாதிபதிப் பதவியை வகித்துள்ளனர்.

திரு.நா.செல்வச்சந்திரன்

2 விகிதாசார பிரதிநிதித்துவத் தேர்தல்

பாராளுமன்றம், மாகாணசபை, உள்ளூராட்சி மன்றங்கள் என்பவற்றிற்கு அங்கத்தவர்கள் இத்தேர்தலின்படியே தெரிவுசெய்யப்படுவர். இதன்படி அங்கத்தவர்கள் குழுவாகப் போட்டியிடுவர். வாக்காளர்கள் வாக்களிக்கும் போது குழுவுக்கு ஒரு வாக்கினையும், அங்கத்தவர்கள் மூவருக்கு விருப்பு வாக்குகளையும் வழங்கலாம். குழுக்கள் பெற்ற மொத்த வாக்குகளுக்கு அமைய அங்கத்தவர்கள் தெரிவுசெய்யப்படுவர்.

www.lkedu.lk

3 பொதுசன அபிப்பிராயத் தேர்தல்

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விடயத்தில் நேரடியாக மக்கள் ஆணையைக் கோரிப் பெறுவதற்கான ஒரு முறையாக இதனைக் கொள்ளலாம். இதன்படி குறிப்பிட்ட விடயம் தொடர்பாக தமது விருப்பை ஆம் அல்லது இல்லை எனத் தீர்மானிக்கலாம். 1982இல் இத்தேர்தல் நடாத்தப்பட்டது. பாராளுமன்றத்தின் பதவிக்காலத்தை இன்னொரு பருவத்திற்கு அதிகரிப்பதற்காக இத்தேர்தல் நடாத்தப்பட்டது. 50வீதத்திலும் கூடுதலான வாக்காளர்கள் வாக்களிக்கப்பட்ட விடயம் ஏற்றுக்கொள்ளப்படும்.

பாடவேளை (28)

பிரித்தானியர் காலத்தில் காணப்பட்ட அபிவிருத்தி நிலைமை

திரு.நா.அன்வர்தீன்

01 சுதந்திரத்தின் பின்னர் ஆட்சிக்கு வந்த இரு பிரதான கட்சிகளும் எவை?

ஐக்கியதேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி

02 பிரித்தானிய ஆட்சியின் இறுதிக்காலத்தில் நெல் உற்பத்தியில் கவனம் செலுத்தியமைக்கான காரணங்கள் எவை?

1 முதலாம் உலக மகா யுத்தத்தின்போது உணவுப் பொருள்களின் இறக்குமதி பாதிப்புற்றமை

2 1929இல் ஏற்பட்ட உலகப் பொருளாதார சீரழிவினால் உணவுப் பொருட்களின் விலைகள் வேகமாக அதிகரித்துச் சென்றன.

03 எவ் யாப்பின் பிரகாரம் விவசாய அமைச்சு இலங்கையருக்கு வழங்கப்பட்டது?

டொனமூர்

04 இலங்கையின் முதலாவது விவசாய அமைச்சர் யார்?

டீ.எஸ்.சேனநாயக்கா

www.lkedu.lk

05 நெற்செய்கைக்கு அவசியமாக உலர் வலயத்தில் காணப்பட்ட பௌதிக அம்சங்கள் எவை?

1 பொருத்தமான வளமான மண் 2 சமதரையான பூமி

பாடவேளை (36 – 29)

உலர் வலய குடியேற்றங்கள்

01 உலர் வலயத்தில் விவசாயக் குடியேற்றத் திட்டங்களை உருவாக்குவதற்கான நோக்கங்கள் / காரணங்கள் எவை?

1 ஈரவலயத்தில் பெருகிச் செல்லும் சனத்தொகை நெருக்கடிக்குத் தீர்வு காணல்

2 உணவு உற்பத்தியைப் பெருக்கதல்

3 வேலை வாய்ப்புக்களை உருவாக்குதல்

4 உலர் வலயத்தில் உள்ள புராதன குளங்கள், கால்வாய்கள் என்பவற்றைப் புனரமைத்து அங்குள்ள நிலத்தை அபிவிருத்திக்குப் பயன்படுத்திக் கொள்ளல்

5 ஈரவலயத்தில் காணப்படும் நிலப்பற்றாக்குறைக்கு பரிகாரம் காணுதல்.

02 உலர் வலயத்தில் வாழ்ந்த பெரும்பாலனோர் ஈரவலயத்திற்கு இடம்பெயரக் காரணமான படையெடுப்பை மேற்கொண்டவன் யார்? கலிங்கமாகன்

03 புதிய விவசாயக் குடியேற்றங்களை உருவாக்கும் போது அரசாங்கம் எதிர்நோக்கிய சவால்கள் எவை?

1 ஈரவலயத்திலிருந்து தெரிவுசெய்த மக்களுக்கு உலர் வலயத்தில் நிலங்களை வழங்கி வீடமைத்துக் குடியேற்றுதல்.

2 நீண்ட காலமாகக் காடாகிக் கிடந்த நிலத்தை விவசாயத்திற்கு உகந்ததாக மாற்றியமைத்தல்

3 அப்பிரதேசங்களில் நீர்ப்பாசன வசதியை ஏற்படுத்துதல்

4 முதலாவது அறுவடையைப் பெற்றுக்கொள்ளும் வரை எதவி நதியை

www.lkedu.lk

வழங்குதல்

5 பொது மக்களுடைய சுகாதாரம், கல்வி உட்பட ஏகைய வசதிகளை மேம்பாடடையச் செய்தல்.

04 சுதந்திரத்திற்கு முன்னர் அமைக்கப்பட்ட விவசாயக் குடியேற்றங்கள் எவை?

மின்னேரியா, நாச்சதுவா, பெரகம, மினிப்பே, பராக்கிரம சமுத்திரம்,கணதறவா

05 சுதந்திரத்திற்கு பின்னர் அமைக்கப்பட்ட குடியேற்றங்கள் எவை?

பத்மெடில்ல, கிரித்தலை, பானியன்கடவல, இரணைமடு, கல்லேயா, கந்தளாய்

06 இலங்கையில் முதலாவது பலநோக்குத் திட்டம் எது? கல்லோயா

07 கல்லோயா நதியில் அமைக்கப்பட்ட நீர்ப்பாசன அமைப்பு எது?

சேனநாயக்க சமுத்திரம்

பாடவேளை (30)

மகாவலி அபிவிருத்தி திட்டம்

01 மகாவலிகங்கை கடலில் கலக்கும் இடம் எது?

கொட்டியாரக்குடா

திரு.நா.செல்வச்சந்திரன்

02 மகாவலி அபிவிருத்தித்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் எவை?

1 உலர் வலயக் காணிகளைக் கூடிய பயன்பாட்டுடன் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தேவையான நிரந்தர நீர்வசதியை வழங்குதல்

2 அதிகரித்துச்செல்லும் தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளும் வண்ணம் மின் உற்பத்தியை மேற்கொள்ளல்

3 நீர் வளத்தின் மூலம் குடியேற்றத் திட்டங்களை உருவாக்கி நிலமற்ற விவசாயிகளுக்குக் காணிகளைப் பெற்றுக்கொடுத்து பயிர்ச்செய்கையைப் பரவலடையச் செய்தல்

4 விவசாயத்துறைத் தொழில் வாய்ப்புகளை உருவாக்குதல்

5 வெள்ளப்பெருக்கைக் கட்டுப்படுத்துதல்

6 நன்னீர் மீன் வளர்ப்பை விருத்தியடையச் செய்தல்

www.lkedu.lk

7 ஜே.ஆர்.ஜெயவர்த்தனவால் ஆரம்பிக்கப்பட்டது.

03 மகாவலிகங்கையின் முதற்கட்டப் பணிகள் எவை?

1 பொல்கொல்லையில் நதியை மறித்து பெரிய அணையைக்கட்டி சுதுகங்கைக்கு நீரை வழங்குதல்

2 கலாவாவி, திஜாவாவி, நுவரவாவி, ாநச்சதுவாவாவி போன்ற பல குளங்களுக்கு நீரை வழங்குதல்

3 1970ம் ஆண்டு இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது

04 துரிதமகாவலி அபிவிருத்தித்திட்டம் உருவாக்கப்பட்ட ஆண்டு எது? 1977

05 மகாவலி அபிவிருத்தி அமைச்சராக நியமிக்கப்பட்டவர் யார்? காமினிதிநாசாயக்கா

06 இதற்காக 1979இல் உருவாக்கப்பட்ட அமைப்பு அது? மகாவலிஅதிகாரசபை

07 மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டுள்ள நீர்த்தேக்கங்கள் எவை?

கொத்மலை, விக்டோரியா, ரந்தெனிகல, ரன்தம்பே, துன்கிந்த, மாதுறுஓயா

திரு.க.செல்வச்சந்திரன்

பாடவேளை (31)

மகாவலி திட்ட நீர்த்தேக்கங்கள்

01 கொத்மலை நீர்த்தேக்கம் எவ்வாறு உருவாக்கப்பட்டது?

மகாவலிகங்கையின் கிளைநதிகளுள் ஒன்றான கொத்மலை ஓயாவில் கடதொர என்னும் இடத்தில் அணைகட்டி அமைக்கப்பட்டது.

02 கொத்மலை நீர்த்தேக்கத்துக்குக்கு உதவி வழங்கிய நாடு எது? சுவீடன்

03 விக்டோரியா நீர்த்தேக்கம் எங்கே அமைக்கப்பட்டுள்ளது?

மகாவலிகங்கையில் பொல்கொல்லை நீர்த்தேக்கத்திற்கு அருகில்

04 விக்டோரியா நீர்த்தேக்கத்தின் பிரதான நோக்கம் எது? மின் உற்பத்தி

05 விக்டோரியா நீர்த்தேக்கத்திற்கு உதவி வழங்கிய நாடு எது? பிரித்தானியா

06 ரந்தெனிவெல நீர்த்தேக்கம் எங்கே அமைக்கப்பட்டுள்ளது?

www.lkedu.lk

விக்டோரியா நீர்த்தேக்கத்தின் கீழ்ப் பகுதியில் மினிப்பே அணைக்கட்டுக்கு மேற்குற்புறமாக அமைக்கப்பட்டுள்ளது.

07 ரந்தெனிவெல நீர்த்தேக்கத்தின் நோக்கங்கள் எவை?

நீர்ப்பாசனம் , மின்னுற்பத்தி

08 இதனுடன் இணைந்த நீர்த்தேக்கம் எது? ரன்தம்பே

09 இவற்றுக்கு உதவி வழங்கிய நாடு எது? மேற்கு ஜேர்மனி

10 மகாவலி அபிவிருத்தித் திட்டத்தில் இடம்பெறும் செயற்பாடுகள் எவை?

1 மின்னுற்பத்தி

2 நீர்ப்பாசனம்

3 குடியேற்றங்களையும் நகரங்களையும் அமைத்தல்

4 பாதைகளை அமைத்தல்

11 நெல் உற்பத்தியைப் பெருக்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட ஏனைய நடவடிக்கைகள்

1 1948இல் நெல்லுக்கு உத்தரவாத விலை அறிமுகப்படுத்தப்படல்.

2 ஆராய்ச்சி நிலையங்களை உருவாக்குதல், புதிய நெல் இனங்களை அறிமுகப்படுத்ததல்

3 விவசாய சேவை மத்திய நிலையங்களை ஆரம்பித்தல்

4 அரசாங்க வங்கிகள் மூலம் விசாயிகளுக்க கடன் வசதியைப் பெற்றுக்கொடுத்தல்.

பாடவேளை (32)

துரித மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட நீர்ப்பாசனத் திட்டங்களை இலங்கைப் படமொன்றில் குறித்துக்காட்டுவார்.

பாடவேளை 33)

வர்த்தக விவசாயம்

01 சுதந்திரத்தின் பின்னரான மூன்று தசாப்த காலத்தில் ஏற்றுமதிப் பயிர்களாக விளங்கிய பயிர்கள் எவை?

தேயிலை, இறப்பர், தென்னை (பாரம்பரியப் பயிர்)

www.lkedu.lk

02 சுதந்திரத்தின் பின்னர் வர்த்தக விவசாயத்தை முன்னேற்றுவதற்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் எவை?

1 1972ம் ஆண்டின் நிலச்சீர்திருத்தச்சட்டம் - நபர் ஒருவர் வைத்திருக்கக்கூடிய நிலத்தின் அளவு வரையறுக்கப்பட்டது. இதற்கமைய 25 ஏக்கர் வயல் நிலமும், 50 ஏக்கர் காணி நிலமும் உச்ச எல்லையாக விதிக்கப்பட்டன.

2 1975ம் ஆண்டின் நிலச்சீர்திருத்தம் - வர்த்தகப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டிருந்த கம்பனிகளுக்கு உடமையாக இருந்த காணிகள் பொது உடமையாக்கப்பட்டன. இதன் மூலம் பெருந்தோட்டப் செய்கையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த காணிகளில் 62வீதம் அரசுடமையானதும் அவற்றுள் 10வீதம் சிறிய பரப்பு காணிகளை விவசாயிகளுக்குப் பகிர்ந்து அளித்ததன் மூலம் சிறு தோட்டச் சொந்தக்காரர் வர்க்கம் ஒன்று உருவானது.

3 1952 இல் சீன - இலங்கை இருதரப்பு வர்த்தக ஒப்பந்தம் மூலம் இலங்கையின் இறப்பருக்கு நிரந்நதரமான சந்தை ஒன்று கிடைத்தமை

4 1977ஆம் இறப்பர் மீள்நடுகைக்கும் புதிய நடுகைக்கும் காணிச் சொந்தக்காரர்களுக்கு உதவி புரியும் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. பின்னர் இவை தேயிலைச் செய்கைக்கும் விஸ்தரிக்கப்பட்டது.

03 தனியாரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட காணிகளை நிர்வகிக்க உருவாக்கப்பட்ட தாபனங்கள் எவை?

1 1975 – அரசாங்க பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்

2 1976 – மலைநாட்டு தோட்ட அபிவிருத்திச்சபை

3 1976 – மக்கள் தோட்ட அபிவிருத்திச்சபை

04 சிறு ஏற்றுமதிப் பயிர்கள் எவை?

www.lkedu.lk

கோப்பி, பொக்கோ. கறுவா, கராம்பு, சாதிக்காய், மிளகு

05 சிறுஏற்றுமதிப் பயிர்களின் அபிவிருத்திக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் எவை?

1 1968ம் ஆண்டு தேயிலைப் பயிர் செய்யும் நிலங்களிவ் சிறுஏற்றுமதிப் பயிர்செய்கையை மேற்கொள்ளுதல்

2 1972ம் ஆண்டு மாத்தளையில் சிறுஏற்றமதிப் பயிர்களுக்கான ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்பட்டது. பின்னர் குண்டசாலை, தெல்பிட்டி, நாரம்மலை போன்ற இடங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டன.

பாடவேளை (34)

சுதந்திரத்தின் பின்னரான கைத்தொழில் செயற்பாடுகள்

01 பிரித்தானியர் காலத்தில் கைத்தொழில் துறையில் முன்னேற்றம் ஏற்படாமைக்கான காரணம் யாது?

பிரித்தானியாவில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் சந்தையாக விளங்கியமை

திரு.நா.செல்வசேந்திரன்

02 2ம் உலக மகாயுத்த காலத்தில் இலங்கையில் தயாரிக்கப்பட்ட கைத்தொழில் பொருட்கள் எவை?

பீங்கான் பொருட்கள், கடதாசி, சவார்க்காரம், வாசனைப்பொருட்கள்

03 உலக வங்கிக்குழு இலங்கை வந்த ஆண்டு எது, அதன் சிபாரிசு எது?

1952 – அரச தலையீட்டுடன் நடுத்தர, சிறு வைத்தொழில்களை ஆரம்பிப்பதன் அவசியம்

04 வெள்ளை அறிக்கை வெளியிடப்பட்ட ஆண்டு எது? 1955

05 கைத்தொழில் பேட்டை ஆரம்பிக்கப்பட்ட இடம் எது? எக்கலை

06 இராத்தலானையில் கைத்தொழில் குடியேற்றம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு எது? 1960

www.lkedu.lk

07 1960ஆம் ஆண்டின் பின்னர் கைத்தொழில் துறையின் பண்புகள் எவை?

1 1961ம் ஆண்டு மக்கள் வங்கி ஆரம்பிக்கப்பட்டதுடன் சிறு கைத்தொழிலாளருக்குக் கடன் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன.

2 1966இல் உள்நாட்டுக் கைத்தொழில் உற்பத்திகளின் தரத்தை நிர்ணயிப்பதற்காகத் தரநிர்ணய சபை ஆரம்பிக்கப்பட்டமை.

3 அரசின் கைத்தொழில் கொள்கையால் 1960இன் பின்னர் இந்நாட்டிற்குத் தேவையான நுகர்வுப் பொருள் உற்பத்தியில் வளர்ச்சி ஏற்பட்டது.

4 1970 – 1977 காலகட்டத்தில் அரசு கடைப்பிடித்த பதிலீட்டுக் கைத்தொழில் கொள்கையில் குடிசை, அலகு கைத்தொழில் துறைகளில் வளர்ச்சி ஏற்பட்டன.

08 அரச தலையீட்டுடன் ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சாலைகள் எவை?

திரு.நா.செல்வச்சந்திரன்

1 உருக்குத் தொழிற்சாலை

2 நெசவுத்தொழிற்சாலைகள் - கொகுவளை, பேசாலை, துல்கிரியா

3 ஒட்டுப்பலகைக் கூட்டுத்தாபனம் - கிந்தோட்டை, கொஸ்கம

4 கனியமணல் - ஹிங்குரானை 5 கனியமணல் - புல்மோட்டை

09 இறக்குமதிப்பி பிரதியீட்டுக் கைத்தொழில் என்றால் என்ன?

வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்குப் பதிலாக அவற்றை இந்நாட்டிலேயே உற்பத்தி செய்து கொள்வதே இறக்குமதிப் பதிலீட்டுக்கைத்தொழில் எனப்படுகிறது.

10 1977களின் பின்னர் கடைப்பிடிக்கப்பட்ட கைத்தொழில்கள் எவை?

1 வெளிநாட்டு முதலீடுகளைப் பெற்றுக்கொள்ளுதல்

2 தனியார் முதலீட்டை ஊக்குவித்தல்

11 கொழும்பு பொருளாதார ஆணைக்குழு உருவாக்கப்பட்ட ஆண்டு எது? 1978

12 சுதந்திர வர்த்தக வலயங்கள் (ஏற்றுமதி பதனிடல் வலயங்கள்) உருவாக்கப்பட்ட இடங்கள் எவை?

www.lkedu.lk

கட்டுநாயக்கா, பியகம, கொக்கல

கல்வி

13 பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழகம் வரை இலவசக்கல்வியை அறிமுகப்படுத்தியவர்

சீ.டபிள்யூ.டபிள்யூ.கன்னங்கரா

14 1948ம் ஆண்டின் பின்னர் கல்விப் புலத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் எவை?

1 அரசாங்கப் பாடசாலைகளை அமைத்தல், கல்விக்கு அதிக பணம் ஒதுக்குதல்

2 பாடத்திட்டத்தை விருத்தியடையச் செய்து ஆசிரிய பயிற்சி நடவடிக்கைகள் நவீன மயப்படுத்தப்பட்டன.

3 விஞ்ஞான ஆய்வுகூட, நூல் நிலைய வசதிகள் விரிவாக்கப்பட்டன.

4 இலவச பகலுணவு, வைத்தியம், பல்வைத்தியம், சலுகை அடிப்படையிலான போக்குவரத்துக் கட்டணங்கள், இலவசப்பாடநூல், இலவச சீருடை என்பவற்றைப் பெற்றுக் கொடுத்தல்

திரு.நா.செல்வேந்திரன்

5 தொழினுட்பக் கல்வித்தாபனங்கள் உருவாக்கப்பட்டமை

15 உயர் கல்விக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் எவை?

1 1942இல் இலங்கைப் பல்கலைக்கழகத்தை கொழும்பில் ஆரம்பித்தமை

2 1952இல் அதனைப் பேராதனைக்கு இடமாற்றியமை

3 வித்தியோதயபிரிவெனாவும், வித்தியலங்கார பிரிவெனாவும் ஸ்ரீ ஜயவர்த்தனபுர, களனி பல்கலைக்கழகங்களாகத் தரமுயர்தப்பட்டமை

4 1972இல் மொரட்டுவ – கட்டுப்பெத்த கல்கலைக்கழகம் உரூவாக்கப்பட்டமை

5 1974இல் யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டமை

www.lkedu.lk

பாடவேளை (35)

சமூக நலனோம்பல்

01 பொதுமக்களின் மீது அரசியல்வாதிகளின் கவனம் திரும்பியமைக்கான காரணம் யாது?

1931இல் கொண்டுவரப்பட்ட சர்வசன வாக்குரிமை

02 சுதந்திரத்தின் பின் வந்த அரசாங்கங்களின் முக்கிய செயற்பாடு எது?

குடியேற்ற ஆட்சியால் ஏற்பட்டிருந்த பாதகமான அரசியல், பொருளியல், சமூகப் பிரச்சினைகளுக்கு தீர்வைக் காணுதல்.

03 இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் எவை?

1 கிராமப் பிரதேசங்களில் கல்வி நடவடிக்கைகளை வளர்ச்சியடையச் செய்தல்

2 தொழில்களைப் பெற்றுக்கொள்வதில் திறமைக்கு முன்னிடம் வழங்குதல், போட்டிப் பரீட்சைகள் மூலம் தெரிவுகள் இடம்பெற்றமை

3 சுதந்திரம், சமத்துவம், அடிப்படை உரிமைகள் என்பன அரசியல் யாப்பில் இடம்பெற்றமை

திரு.நா.செல்வசந்திரன்

4 விவசாய, மீன்பிடி நடவடிக்கைகளுக்கு கடன் வசதிகளம் மானியங்களும் வழங்கப்படுதல்

04 சுகாதாரசேவையை மேம்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் எவை?

1 கிராமப்புறங்களில் வைத்தியசாலைகளை அமைத்தல்

2 தாய் - சேய் நடவடிக்கைகள் மேம்பாடடையச் செய்தல்

3 நோயத் தடுப்பு மருந்துகளை வழங்குதல்

4 வைத்திய முகாம்பளை நடாத்துதல்

5 சுதேச வைத்தியமுறையை மேம்பாடடையச்செய்தல்

05 சுகாதாரத்துறையின் வளர்ச்சி காரணமாகக் கட்டுப்படுத்தப்பட்ட நோய்கள் எவை?

யானைக்கால், மலேரியா. சயரோகம், இனம்பிள்ளை வாதம்

www.lkedu.lk

பாடவேளை (36)

01 சுதந்திரத்தின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட ஏனைய நலன்புரி நடவடிக்கைகள் எவை?

1 போக்குவரத்து 2 நீர் விநியோகம் 3 மின்சாரம் 4 செய்தித்தொடர்பு

02 சுதந்திரத்தின் முன்னர் உணவு மானியப் வழங்கப்பட்டமைக்கான காரணம் யாது?

2ம் உலக மகாயுத்த காலத்தில் உணவுப் பொருட்களின் இறக்குமதியைக் கட்டுப்படுத்த வேண்டி ஏற்பட்டமை

03 சுதந்திரத்தின் பின்னர் உணவு மானியம் வழங்கப்பட்டமைக்கான காரணங்கள் எவை?

1 குறித்த காலத்திற்கு உணவு மானியத்திற்கு மக்கள் பழக்கப்பட்டமை

2 குறைந்த வருமானத்தை மக்கள் பெற்றுக்கொண்டமை

3 காணிப்பற்றாக்குறை காணப்பட்டமை

4 குறைந்த அறுவடை கிடைத்தமை

திரு.சு.செல்வச்சந்திரன்

04 அரிசி மானியம் எவ்வாறு வழங்கப்பட்டது?

மானியத்துடன் கூடிய கூப்பன் புத்தகங்கள் வழங்கப்பட்டமை

05 அரிசிக் கூப்பன்களுக்குப் பதிலாக 1977 ஆம் ஆண்டிற்குப் பின்னர் அறிமுகப்படுத்தப்பட்ட முறை எது?

உணவு முத்திரை

www.lkedu.lk

அலகு – 07
உலகில் இடம்பெற்ற பிரதான புரட்சிகள்
பாடவேளை (10)

பாடவேளை (01)

அமெரிக்காவில் ஐரோப்பியர் அமைத்த குடியேற்றங்கள்

01 அமெரிக்க சுதந்திரப்போர் என்றால் என்ன?

அமெரிக்கக் குடியேற்றவாசிகள் பிரித்தானியப் பேரரசிலிருந்து விடுதலை பெற மேற்கொண்ட போராட்டமாகும்.

02 புதிய உலகம் எளப்படும் அமெரிக்கக் கண்டத்தைக் கண்டுபிடித்தவர் யார்?

கிறிஸ்தோபர் கொலம்பஸ்

03 கிறிஸ்தோபர் கொலம்பஸ் கரீபியன் கடலில் பகாம தீவுகளில் இறங்கிய ஆண்டு எது? 1492

04 அமெரிக்க கண்டத்தைச் சேர்ந்த பெரும் நிலப்பிரதேசத்தைக் கண்டுபிடித்தவர் யார்? அமெரிக்க வெஸ்புசி

திரு.நா.செல்வராஜ்திரன்

05 அமெரிக்காவில் குடியேற்றங்களை அமைத்த ஐரோப்பிய நாடுகள் எவை?

போர்த்துக்கல், ஸ்பானியா, ஒல்லாந்து, பிரான்ஸ், இங்கிலாந்து

06 ஐரோப்பியர் குடியேற்றங்களை அமைத்தமைக்கான காரணங்கள் எவை?

1 ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்ட கத்தோலிக்க, புரட்டஸ்தாந்து மோதலினால் சமய சுதந்திரத்தை எதிர்பார்த்து மக்கள் பதிய இடங்களுக்குச் செல்ல விரும்பியமை.

2 வர்த்தகத்தின் பொருட்டு பதிய பிரதெசங்களில் நிலங்களைப் பெற்றுக்கொள்வதன் மூலம் வாழ்வை சிறப்பானதாக்கிக் கொள்ள மக்கள் விரும்பியமை

3 புகழையும் செல்வத்தையும் அதிகரிக்கும் நோக்குடன், ஐரோப்யி நாடுகளின் ஆட்சியாளர்கள் புதிய இடங்களைக் கண்டுபிடிப்பதற்கு வழங்கிய ஒத்துழைப்பு

LEARN EASY
– KNOWLEDGE IS POWER –

LEARN EASY

THE PIONEER IN ONLINE CLASSES

76667-4945

5 பாடங்கள்

தரம் 6,7,8,9

- தமிழ்
- கணிதம்
- விஞ்ஞானம்
- வரலாறு
- ENGLISH

விசேட கழிவு

3,000/-

பிரிவு 2

7 பாடங்கள்

தரம் 6,7,8,9

- தமிழ்
- கணிதம்
- விஞ்ஞானம்
- வரலாறு
- ENGLISH
- ICT
- சிங்களம்

விசேட கழிவு

4,200/-

பிரிவு 2

5 பாடங்கள்

தரம் 10, தரம் 11

- தமிழ்
- கணிதம்
- விஞ்ஞானம்
- வரலாறு
- ENGLISH

விசேட கழிவு

3,500/-

பிரிவு 2

zoom

வகுப்புகளில் இணைந்து கொள்வதற்கு விரும்புவர்கள் கட்டணத்தினை வங்கியில் அல்லது **eZ cash** இல் செலுத்தி பற்றுச்சீட்டை **WhatsApp** இல் எமக்கு அனுப்பி வைத்தவுடன் உங்களுக்கான பாடக்குழுக்களில் இணைக்கப்படுவீர்கள்.

COMMERCIAL BANK | BOC BANKERS TO THE NATION | PEOPLE'S BANK | eZ Cash

Easy to Learn (Pvt) Ltd Wellawatte 8008392295	S.Kishokumar Nelliyaddy Branch 86479603	S.Kishokumar Jaffna University 162-2-001-7-0028670	0766674945

www.lkedu.lk

07 பிரித்தானியரால் அமெரிக்காவில் நிறுவப்பட்ட குடியேற்றங்கள் எவை?

வேர்ஜினியா, நியுயோர்க். ஜோர்ஜியா, வட கரோலினா (13

08 1607இல் பிரித்தானியரால் முதலில் அமைக்கப்பட்ட குடியேற்றம் எது?

வேர்ஜினியா

09 வட அமெரிக்காவில் இறுதியாகத் தோன்றிய பிரித்தானியக் குடியேற்றம் எது?

ஜோர்ஜியா

பாடவேளை (02)

அமெரிக்கப் புரட்சிக்கான காரணங்கள்

01 அமெரிக்காவில் குடியேற்றங்களை அமைத்த பிரித்தானியர் மீது விதிக்கப்பட்டநிபந்தனைகள் எவை?

1 பிரித்தானிய ஆதிக்கத்தை ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

2 தாய் நாட்டுச் சட்டங்களை புதிய குடியேற்றங்களில் செயற்படுத்த வேண்டும்.

திரு.நா.செல்வரெத்தினம்

02 1763இல் அமெரிக்க குடியேற்றவாசிகள் எதிர்நோக்கிய பாதுகாப்புத் தொடர்பான பிரச்சினைகள் எவை?

1 பிரான்சியரின் அச்சுறுத்தல்

2 அமெரிக்க பூர்வீகக் குடியேற்றவாசிகளான செவ்விந்தியரின் எதிர்ப்பு

03 பிரித்தானியாவுக்கும், பிரான்சிற்கும் இடையே 1756 – 1763 வரை இடம்பெற்ற போர் எவ்வாறு அழைக்கப்படும்? ஏழாண்டுப்போர்

04 பிரித்தானியரால் அமெரிக்காவில் கடைப்பிடிக்கப்பட்ட பொருளதாரக் கொள்கைகள் எவை?

1 பிரித்தானியாவில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் குடியேற்றங்களில் உற்பத்தி செய்வது தடைசெய்யப்பட்டது

2 புகையிலை, சீனி, பருத்தி, தேன், மெழுகு, கோதுமை, வெண்கலம் போன்ற

www.lkedu.lk

பொருட்கள் பிரித்தானியாவுக்கு மாத்திரமே கொடுக்கப்படல் வேண்டும்.

3 இவை தவிர்ந்த ஏனைய பொருட்களை பிரித்தானியாவுக்கு அனுப்பியே ஏனைய நாடுகளுக்கு அனுப்பதல் வேண்டும்.

4 குடியேற்ற நாடுகள் உற்பத்தி அல்லது வர்த்தகம் தொடர்பாக தாய் நாட்டுடன் போட்டியிட முடியாது

05 அமெரிக்க குடியேற்றங்களிலிருந்து அறவிடப்பட்ட சுங்கவரி முறையாக அறவிடப்படுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்ட பிரித்தானியப் பிரதமர் யார்? ஜோன் கிரன்வில்

06 இரகசிய வர்த்தக்தை தடைசெய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட சட்டங்கள் எவை?

1 சீனிச்சட்டம் - (கரும்புச் சட்டம்)

2 நாணயச்சட்டம்

3 முத்திசைச்சட்டம்

திரு.நா.செல்வச்சந்திரன்

07 பிரித்தானிய அரசாங்கத்தால் முத்திரைச்சட்டம் கொணடுவரப்பட்ட ஆண்டு எது?

1765

08 அமெரிக்க சுதந்திரப் போருக்காண காரணங்கள் எவை?

1 பிரிதானியப் பாராளுமன்றத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட பதிய வரிகள் (முத்திரை வரி, தேயிலை வரி, கண்ணாடி வரி, , கடதாசி வரி)

2 அமெரிக்க குடியேற்றவாசிகள் நீண்ட காலமாகப் பிரித்தானிய தலையீட்டிற்கு மாறாக சுய நிர்வாகத்திற்குப் பழக்கப்பட்டிருந்தமை

3 பிரித்தானியர் பின்பற்றிய தாய்நாட்டிற்குச் சாதகமான பொருளாதாரக் கொள்கை

4 குடியேற்றசாவிகளின் நீதியான போராட்டங்களைக் கட்டுப்படுத்த

www.lkedu.lk

பிரித்தானியா நடவடிக்கை எடுத்தமை

பாடவேளை (03)

அமெரிக்கப் புரட்சியின் விளைவுகள்

01 பிரித்தானியரால் அறிமுகப்படுத்தப்பட்ட வரிகளுள் அதிக எதிர்ப்புவுக்குள்ளான வரி எது?

முத்திரைவரி

02 அமெரிக்க சுதந்திரப் போரின் சுலோகம் எது?

பிரதிநிதித்துவம் இன்றேல் வரியுமில்லை

03 1767இல் இறக்குமதி வரி விதிக்கப்பட்ட பொருட்கள் எவை?

கண்ணாடி, ஈயம், கடதாசி, தேயிலை

04 போஸ்டன் தேநீர் விருந்து இடம்பெற்ற ஆண்டு எது?

1773 (அமெரிக்க சுதந்திரப் போரின் ஆரம்ப நிகழ்வாக அமைந்த சம்பவம்)

05 அமெரிக்க சுதந்திரப் போர் தொடர்பாக முதலாவதாக இடம்பெற்ற மாநாடு எது? அது எத்தனையாம் ஆண்டு இடம்பெற்றது?

1774 – பிலடெல்பியா (12 குடியேற்றங்கள் கலந்து கொண்டன)

06 பிலடெல்பிய மாநாட்டின் முடிவுகள் எவை?

1 அமெரிக்க குடியேற்றங்கள் தொடர்பாக சட்டங்களை அமுல் செய்யவோ வரி அறவிடவோ பிரித்தானிய பாராளுமன்றத்திற்கு அதிகாரம் இல்லை.

2 பிரித்தானியப் பொருட்களை பகிஷ்கரித்தல்

3 பாதுகாப்பின் பொருட்டு குடியேற்றவாசிகள் ஆயுதம் தரித்தல்

07 1775ம் ஆண்டு இருதரப்பினருக்குமிடையே ஆயுதப் போர் நடைபெற்ற இடம் எது?

லெக்சின்டன்

08 அமெரிக்க குடியேற்றவாசிகளின் படைக்குத் தலைவராக நியமிக்கப்பட்டவர் யார்?

www.lkedu.lk

ஜோர்ஜ் வொஷிங்டன்

09 அமெரிக்க சுதந்திரப் பிரகடனம் வெளியிடப்பட்ட ஆண்டு எது?

1776 – ஜூலை 04

10 போரில் பிரித்தானியப்படை தோல்வயிடைந்தமைக்கான காரணங்கள் எவை?

1 பல்லாயிரம் மைல்கள் தூரத்தில் பழக்கமில்லாத பிரதேசத்தில் பிரித்தானியப் படைகள் போரிட வேண்டியிருந்தமை

2 பிரான்ஸ் அமெரிக்க குடியேற்றவாசிகளுக்கு உதவியளித்தமை

11 இரு தரப்பினருக்கும் இடையே சமாதான ஒப்பந்தம் இடம்பெற்ற ஆண்டு எது?

1783 – பாரிஸ் உடன்படிக்கை

12 அமெரிக்கா சுதந்திர நாடாக தோற்றம் பெற்ற அண்டு எது?

1783

13 உலகில் முதன் முதலில் அரசியல் யாப்பு உருவாக்கப்பட்ட ஆண்டு எது? எந்த நாட்டில் உருவாக்கப்பட்டது?

திரு.நா.செல்வசுந்திரன்

1787 – அமெரிக்கா

14 அமெரிக்காவின் முதலாவது ஜனாதிபதி யார்?

ஜோர்ஜ் வொஷிங்டன்

15 அமெரிக்க சுதந்திரப்போரின் விளைவுகள் எவை?

1 ஐக்கிய அமெரிக்க நாடுகள் என்ற சுதந்திர அரசு தோன்றியது

2 முழு மனித குலத்திற்கும் சுதந்திரத்தின் மேன்மையை எடுத்துக்காட்டிய சந்தர்ப்பமாக அது அமைந்தது

3 அடிப்படை மனித உரிமைகள் பற்றிய உணர்வு உலகம் முழுவதும் ஏற்பட்டது

4 அனைத்து இனத்தவரும் சமமானவர் என்ற பதம் பிற்காலத்தில் உலகில் இடம்பெற்ற புரட்சிகளின் தலைப்பாக அமைந்தது.

www.lkedu.lk

5 முதலாவது எழுத்து மூல கூட்டு அரசியல் யாப்புத் தோன்றியது.

பாடவேளை (04)

பிரான்சியப் புரட்சிக்கு முன்னரான நிலைமைகள்

01 பிரான்சியப் புரட்சி என்றால் என்ன?

தான்தோன்றித்தனமாக ஊழல் நிறைந்த ஆட்சி நடத்திய 16ம் லூயி மன்னுக்கு எதிராக அந்நாட்டு மக்கள் தமது மனித உரிமைகளை வென்றெடுப்பதற்காக முன்னெடுத்த போராட்டமே பிரான்சியப் புரட்சி எனப்படுகிறது.

02 மனித உரிமைகளை வென்றெடுத்த முக்கியமான ஒரு சந்தர்ப்பமாக அமையும் சம்பவம் எது?

பிரான்சியப் புரட்சி

திரு.நா.செல்வச்சந்திரன்

03 பிரான்சியப் புரட்சி இடம்பெற்ற போது பிரான்சின் ஆட்சியாளன் யார்?

16ம் லூயி

04 பிரான்சியப் புரட்சியின் சுலோகம் எது?

சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்

05 பிரான்சியப் புரட்சியின் போது காணப்பட்ட நிலைமைகள் எவை?

1 பிரான்ஸ் ஐரோப்பிய நாடகளில் செல்வந்த நாடாக விளங்கியது

2 வெளிநாட்டு வர்த்தகம், கைத்தொழில் என்பவற்றில் முன்னிலையில் இருந்தது

3 ஏனைய நாடுகளை விட விவசாயிகள் நல்ல நிலையலி இருந்தனர்.

4 அறிவிலும், சமுகப்பழக்க வழக்கங்களிலும் பிரான்ஸ் முன்னணியில் இருந்தது

5 ஆட்சியாளர்களின் பலவீனம் காரணமாக அரசயில், சமூக, பொருளாதாரத்துறையில் வீழ்ச்சியடைந்திருந்தது.

www.lkedu.lk

பாடவேளை (05)

பிரான்சியப் புரட்சிக்கான அரசியல் காரணங்கள்

01 பிரான்சியப் புரட்சிக்கான அரசியல் காரணங்கள் எவை?

1 மன்னர்கள் தமது அரசுரிமையை கடவுள் தந்த ஒரு வரமாகக் கருதியமை

2 மன்னன் கொண்டிருந்த வரையறையற்ற அதிகாரங்கள்

3 மன்னன் அனுபவித்த சுகபோக வாழ்வு

4 எதிரிகளை மடக்குவதற்கு அரச அதிகாரத்தைப் பயன்படுத்தல்

5 ஊழல் நிறைந்த முடியாட்சி

1 மன்னன் கொண்டிருந்த வரையறையற்ற அதிகாரங்கள்

சட்டம், நிர்வாகம், நீதி ஆகிய அனைத்துத் துறைகளிலும் அதிகாரங்கள் அரசனிடம் குவிந்து காணப்பட்டன. எண்ணிலடங்காத அதிகாரங்களைக் கொண்டிருந்த 14ம் லூயி நானே அரசு எனக் கூறினான். நான் விரும்பும் எதுவும் நடைபெறும் எனவும் அவன் கூறினான். எதுவித விசாரணையுமின்றி எவரையும் கைதுசெய்து வாழ்நாள் முழுவதும் சிறையில் வைக்க அரசனுக்கு அதிகாரம் இருந்தது. இவ்வாறு மன்னனுக்கு இருந்த அதிகாரங்களை மக்கள் வெறுத்தனர்.

திரு.நா.தெய்வேந்திரன்

2 எதிரிகளை மடக்குவதற்கு அரச அதிகாரத்தைப் பயன்படுத்தல்

அரசன் தனக்கிருந்த அதிகாரங்களை தனிப்பட்ட அரசியல், எதிரிகளைப் பழிவாங்கப் பயன்படுத்தியதுடன் அவர்கள் பஸ்டில் சிறைச்சாலையில் சிறை வைக்கப்பட்டனர். இதனால் பிரான்சின் ஊழல் நிறைந்த ஆட்சியின் அடையாளமாக விளங்கிய பஸ்டில் சிறைச்சாலையே புரட்சியின் போது முதலில் தாக்கப்பட்டது.

www.lkedu.lk

3 மன்னன் அனுபவித்த சுகபோக வாழ்வு

மன்னனின் எல்லையற்ற சுகபோக வாழ்வு மக்களின் எதிர்ப்புக்கு உள்ளானது. மன்னன் வாழ்ந்த வேர்செயில்ஸ் மாளிகை பல ஏக்கர் நிலப்பரப்பில் பரவலடைந்து விளங்கியது. அங்கு நீர்வீழ்ச்சி, நீர்ப்பூங்கா, மலர்ப்பூங்கா போன்றன காணப்பட்டன. அவ்வாறான சுகபோக மாளிகையில் வாழ்ந்தமையால் மன்னனுக்கும் மக்களுக்கும் இடையிலான உறவில் விரிசல் விழுந்தது. மாளிகைக்குள் நுழைவதற்கு சாதாண மக்களுக்கு அனுமதியில்லை. குருமாரும் பிரபுக்களுமே அனுமதிக்கப்பட்டனர். அவர்கள் நாட்டைப் பற்றியும் மக்களைப் பற்றியம் தவறான கருத்துக்களையே முன்வைத்தனர்.

திரு.நா.செல்வச்சந்திரன்

02 புரட்சியின் போது பிரான்சில் ஆட்சி செய்த வம்சம் எது?

பூர்பன் அரச வம்சம்

03 16ம் லூயி மன்னனின் மனைவி யார்?

மேரி அன்டொயினட்

04 அரசன் பிரதேச நிர்வாகத்தின் பொருட்டு நியமிக்கப்பட்ட அதிகாரிகள் யாவர்?

இன்டென்டன்

05 பிரான்சின் முடியாட்சி எனப்பட்டது எவற்றை உள்ளடக்கியிருந்தது?

அரசனை முதன்மையாகக் ஆலோசனைச்சபை, ஆலோசனைச்சபையின் ஆலோசனையின்படி செயற்பட்ட அமைச்சரவை

06 பிரான்சின் பாராளுமன்றம் எவ்வாறு அழைக்கப்பட்டது, அது எத்தனை ஆண்டுகள் கூட்டப்படாதிருந்தது?

www.lkedu.lk

ஸ்டெட்ஜெனரல் 175 ஆண்டுகள்

07 புரட்சியின் போது காணப்பட்ட சமூக அமைப்பு எது?

நிலமானியமுறை

08 பிரான்சின் சமூகப் பிரிவுகள் எவை?

குருமார், பிரபுக்கள், சாதாரண மக்கள்

09 சாதாரண மக்கள் எனப்பட்டவர்கள் யார்?

மத்திய வகுப்பினர், விவசாயிகள், தொழிலாளர்கள்

10 பிரான்சில் பிரபுக்களும், குருமார்களும் அனுபவித்த சலுகைகள் எவை?

1 நாட்டின் எந்த இடத்திலும் மீன் பிடிக்கவும் வேட்டையாடவும் உரிமை

2 பிரபுக்களுக்குச் சொந்தமான தானிய ஆலைகள், வைன், வடிசாலைகள் , வெதுப்பகங்கள் போன்றவற்றில் விவசாயிகள் தமது தேவையை நிறைவு செய்ய வேண்டியிருந்ததுடன் இதன் பொருட்டு அதிக பணம் செலுத்த வேண்டியிருந்தது.

திரு.நா.தெய்வச்சந்தன்

3 விவசாயிகளின் நிலங்களிலிருந்து வரி அறவிடும் உரிமை

4 அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டிய வரிகளிலிலிருந்து விலக்குப்பெறல்

பாடவேளை (06)

பிரான்சியப் புரட்சிக்கான சமூகக் காரணிகள்

01 பிரான்சியப் புரட்சிக்கான சமூகக் காரணிகள் எவை?

1 புரட்சியின் போது காணப்பட்ட மானியமுறை. புரந்த நிலப்பரப்பைக் உரிமையாக்கிக் கொண்டிருந்த பிரபுக்களின் தலைமையளில் முன்னெடுத்துச் செல்லப்பட்ட முடியாட்சி முறையாகும்.

2 குருமார்களும், பிரபுக்களும் அனுபவித்த சலுகைகள்

www.lkedu.lk

3 மொத்தச் சனத்தொகையில் சிறுபான்மையினராக இருந்தாலும் பிரபுக்களும், குருமார்களும் செல்வந்தர்களாகக் காணப்பட்டமை

4 மத்திய வகுப்பினர் வர்த்தகத்தில் ஈடுப்பட்டு செல்வந்தர்களாக விளங்கினும் அரசியல் ரீதியாக முக்கியத்துவம் பெறாமை

5 கல்வியில் முன்னின்ற மத்திய வகுப்பினருக்கு உரிய இடம் வழங்கப்படவில்லை. கல்வியில் பின்னின்ற பிரபுக்களுக்க முக்கியத்துவம் வழங்கப்பட்டமை. ஒருவரின் நிலையினை பிறப்பினைக் கொண்டல்லாது, திறமையையும் செல்வத்தையும் கொண்டே மதிப்பிட வேண்டும் என்ற கருத்து தோற்றம் பெற்றது. இதிலிருந்தே சமத்துவம் என்ற எண்ணக்கரு தோன்றியது. 6 92 வீதமானோராகக் காணப்பட்ட விவசாயிகளே பெரும் இன்னல்களுக்கு உள்ளாகினர். கடினமாக உழைக்கும் அவர்களுக்கு நிலங்களில் உரிமை இருந்த போதிலும் பிரபுக்களுக்குச் செலுத்திய வரிச்சுமையால் அவர்களது வாழ்க்கை கடினமானது.

திரு.நா.தேவச்சந்திரன்

பிரான்சியப் புரட்சிக்கான பொருளாதாரக் காரணிகள்

02 பிரான்சியப் புரட்சிக்கான பொருளதாரக் காரணிகள் எவை?

1 பிரான்சின் திறைசேரி வெறுமை நிலையை அடைந்தமை

2 பொதுமக்கள் மீது சுமத்தப்பட்டிருந்த அதிக வரிச்சுமை

1 பிரான்சின் திறைசேரி வெறுமை நிலையை அடைந்தமை

பிரான்சியப் புரட்சியின் போது பிரான்சின் சிறைச்சாலை முற்றிலும் வெறுமையாகி இருந்தது. இதற்காரண காரணங்களாக அரசனதும் அரச குடும்பத்தினரதும் ஆடம்பர வாழ்க்கையினால் ஏற்பட்ட அதிக செலவு, தேவையற்ற யுத்தச் செலவு என்பன காரணங்களாகும்.

www.lkedu.lk

பிரித்தானியவுடனான ஏழாண்டுப்போர், அமெரிக்க சுதந்திரப்போருக்கு உதவியமை ஆகிய காரணங்களால் பிரான்சின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தது.

2 பொதுமக்கள் மீது சுமத்தப்பட்டிருந்த அதிக வரிச்சுமை

பிரான்சில் நிலவிய அதிக வரி காரணமாகவும் புரட்சி ஏற்பட்டது. சாதாரண குடிமக்கள் தமது வருமானத்தில் 60 வீதத்தை வரியாகச் செலுத்தினர்.

டெலி – பொதுமக்களின் வீடுகள், நிலங்கள் என்பவற்றிலிருந்து பெறப்பட்ட வரிகளாகும்.

கெபெல் - இது உப்பிலிருந்து பெறப்பட்ட வரியாகும். வளர்ந்த அனைவரும் ஆண்டொன்றிகு ஏழு இறாத்தல் உப்பை விலை கொடுத்து வாங்க வேண்டும்.

கெப்பிடெஷின் - அனைவரிடமிருந்தும் அறவிட வேண்டிய வரியாக 1695இல் அறிமுகம் செய்யப்பட்டது எனினும் செயற்படுத்தும்போது அந்த வரிச்சுமையும் பொதுமக்கள் மீது சுமத்தப்பட்டது.

திரு.நா.தயல்வச்சந்திரன்

03 பிரான்சியப் புரட்சிக்கு பங்களித்த தத்துவஞானிகளையும் அவர்களது பங்களிப்புக்களையும் குறிப்பிடுக?

1 மொன்டெஸ்கியு – சட்டத்தின் சாரம் எனும் நூலை எழுதினார். இதில் தனிப்பட்ட ஒருவரிடம் அதிகாரங்கள் குவிந்திருப்பது பொருத்தமற்றதெனவும், இது சர்வாதிகார ஆட்சி கட்டியெழுப்பப்பட வழியேற்படும் எனவும் கூறினார். இதனைத் தடுக்க சட்டம், நிர்வாகம், நீதி ஆகிய மூன்று துறைகளுக்கும் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் எனக் கூறினார்.

2 டோல்டயர் - சுதந்திரமாகக் கருத்து வெளியிடும் உரிமை பற்றிக் கருத்து

www.lkedu.lk

வெளியிட்டார். முடியாட்சியினதும், திருச்சபையினதும் சர்வாதிகார ஆட்சியை கடுமையாக விமர்சித்தார்.

3 ரூசோ – சமூக ஒப்பந்தம் என்னும் நூலின் மூலம் மக்களின் சுதந்திரம் தொடர்பான எண்ணக்கருவை முன்வைத்தார். மன்னன் மக்களின் நலன் கருதிச் செயற்பட வெண்டுமெனவும் அவ்வாறு செய்யாத ஆட்சியாளனை மக்கள் துரத்த வேண்டுமெனவும் கூறினார். அவரது இக்கருத்து சமத்துவம், மக்கள் ஆதிக்கம் என்ற எண்ணக்கருக்களின் அடிப்படையானது.

பாடவேளை (07)

பிரான்சியப் புரட்சியின் விளைவுகள்

திரு.நா.மனோவச்சந்திரன்

01 பிரான்சியப் புரட்சி இடம்பெற்ற ஆண்டு எது? 1789

02 பிரான்சியப் புரட்சிக்கான உடனடிக்காரணம் எது?

அரசின் நிதி நிலமை சீரற்றுக் காணப்பட்டமையாகும்.

03 175 ஆண்டுகளின் பின்னர் ஸ்டெட்ஜெனரல் பாராளுமன்றத்தைக் கூட்டிய ஆட்சியாளன் யார்?

16ம் லூயி

04 டெனிஸ்மைதான உறுதிமொழி என்றால் என்ன?

ஸ்டெட்ஜெனரல் பாராளுமன்றத்தில் அங்கம் வகித்த பிரபுக்கள், குருமார்கள். பொதுமக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் அங்கம் வகித்தனர். இவர்களில் பொதுமக்களின் பிரதிநிதிகள் தனியாக கூடியபோது அவர்கள் கூடிய மண்டபத்தை மூடிவிட நடவடிக்கை எடுக்கப்பட்டபோது அவர்கள் அங்கிருந்து

www.lkedu.lk

வெளியேறி டென்னிஸ்மைதானத்தில் ஒன்றுகூடி பிரான்சிங்கு புதிய அரசியல் யாப்பைத் தயாரிக்காது வெளியேறுவதில்லை என உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.

05 பிரான்சியப் புரட்சியின் ஆரம்ப நிகழ்வு எது? அது எப்போது இடம்பெற்றது?

பஸ்டீல் சிசைச்சாலை உடைப்பு – 1789 ஜூலை 14

06 பிரான்சியப் புரட்சியின் விளைவுகள் எவை?

1 1791ம் ஆண்டு அடிப்படை உரிமைகள் தொடர்பாக சாசனம் வெளியிடப்பட்டமை

1 எல்லா மனிதரும் சுதந்திரமாகப் பிறப்பதால் அவர்கள் அனைவருக்கும் சமஉரிமை உரித்தாக வேண்டும்.

2 அனைத்துப் பரிசைகளும் சட்டம் இயற்றும் செயற்பாட்டில் பங்குகொள்ள உரிமையுண்டு.

3 அனைத்துக் குடிமக்களுக்கும் சுதந்திரமாகக் கருத்து வெளியிடவும் தாம் விரும்பும் மதத்தைப் பின்பற்றவும் உரிமையுண்டு.

2 பிரான்சின் முடியாட்சி வீழ்ச்சியுற்றமை

3 பிரான்சின் விவசசாயத் தொழிலாள மக்களுக்குச் சலுகை கிடைத்தமை

4 பிரான்சில் உறுதியற்ற அரசியல் முறை தோன்றியமை

07 பிரான்னில் காணப்பட்ட அரசியல் உறுதியின்மையப் பயன்படுத்தி 1799ம் ஆண்டு அதிகாரத்தைக் கைப்பற்றிய இராணுவ அதிகார யார்?

நெப்போலியன்

www.lkedu.lk

பாடவேளை (08)

ரஸ்யப் புரட்சியின் அறிமுகம் மற்றும் காரணங்கள்

01 இருபதாம் நூற்றாண்டில் ஆறில் ஒரு பங்கினைக் கொண்ட நாடாக விளங்கியது எது? ரஷ்யா

02 ரஷ்யாவின் பரந்த பேரரசை நிர்வகிக்க உதவியோர் யாவர்?

இரானுவம், காவல்படை, இரகசிய பொலிஸ்

03 ரஸ்யப்புரட்சி என்றால் என்ன?

இருபதாம் நூற்றாண்டாகும் போது ரஸ்யாவில் காணப்பட்ட ஊழல் நிறைந்த சர்வாதிகார மன்னராட்சிக்கு எதிராக பொதமக்களால் முன்னெடுக்கப்பட்ட புரட்சியே ரஸ்யப்புரட்சி எனப்படும்.

04 ரஜ்யப்புரட்சியின் தாரக மந்திரம் எது?

உணவு, நிலம், சமாதானம்

திரு.நா.செல்வச்சந்திரன்

05 ரஸ்யப்புரட்சி இடம்பெற்ற ஆண்டு எது?

1917 – மார்ச், ஒக்டோபர்

06 ரஸ்யப்புரட்சியின் இறதி இலக்காக அமைந்தது எது? வகுப்புகளற்ற சமூகம்

07 ரஸ்யப்புரட்சிக்கான காரணங்கள் எவை?

1 ரஸ்யாவில் காணப்பட்ட ஊழல் நிறைந்த சர்வாதிகார முடியாட்சி –

ரஸ்யாவை ஆட்சி செய்த சார் மன்னர்கள் அரச பதவியானது கடவுள் கொடுத்த வரம் எனக்கருதி செயற்பட்டனர். தமது நன்மையை மட்டுமே கருத்திற் கொண்டு மிகவும் ஊழல் நிறைந்த ஆட்சியை நடத்தினர். அரசாங்க வருமானத்தை அதிகரிக்கும் பொருட்டு மக்களை கொடுமைப்படுத்தி வரி அறவிட்டனர்.

www.lkedu.lk

2 ஊழல் நிறைந்த நிலமானிய சமூக முறை

ரஸ்யாவின் பொருளாதார சமூக அமைப்பானது மானிய முறையை அடிப்படையாகக் கொண்ட விவசாயப் பொருளாதாரமாகவே காணப்பட்டது. பாரம்பரிய நிலவுடமை பிரபுக்களுடையதாக இருந்தது. நாட்டின் சாதாரண மக்களான விவசாயிகள் நில அடிமைகளாக விவசாயத்தில் ஈடபட்டனர்.

பிரபுக்கள் செல்வந்தர்களாக இருந்ததுடன் நிலஅடிமைகள் அவர்களது சொத்தாகக் கருதப்பட்டனர். தமது விளைச்சலின் ஒரு பகுதியை வரியாக அரசாங்கத்திற்கும், திருச்சபைக்கும், பிரபுக்களுக்கம் கொடுக்க வேண்டியிருந்தமையால் பெரிதும் இன்னலுற்றனர்.

3 ஜப்பானுடனான யுத்தத்தில் தோல்வியடைந்தமை

1904 – 1905 காலப்பபுதியில் ஜப்பானுடன் நடைபெற்ற யுத்தத்தில் ரஸ்யா தோல்வியடைந்தது. 1905இல் எதிர்ப்புப் நடவடிக்கை இடம்பெற உடனடிக் காரணமாக அமைந்தது. விவசாயிகளின் கிளர்ச்சி, தொழிலாளர் வேலை நிறுத்தம், அரச விரோத செயற்பாடகள், கடற்படைக் கிளர்ச்சிகளும் ஏற்பட்டது. இப்போராட்டங்கள் தோல்வியில் முடிந்தாலும் அரச விவோத போராட்டங்களுக்கு முன்னோடியாக அமைந்தது

4 முதலாம் உலகப்போரின் போது விவசாயிகளைப் போர்வீரர்களாகச் சேர்த்தமையால் ஏற்பட்ட நெருக்கடிகள்

08 ரஸ்யப்புரட்சியை 1917இல் நடத்தி முடித்தவர் யார்? அவரது கட்சி எது?

லெனின் - போல்ஸெவிக்கட்சி

www.lkedu.lk

பாடவேளை (09)

ரஸ்யப் புரட்சியின் போதான நிலைமைகள்

கற்றற்பேறு :- ரஷ்யப் புரட்சியை விளக்குவார்.

01 1917ஆம் மார்ச் மாதம் புரட்சி ஏற்படக் காரணமாக அமைந்த நிகழ்வு எது?

புடைவைத் தொழிற்சாலையொன்றில் ஏற்பட்ட வேலை நிறுத்தம்

02 இதன் போது மன்னன் பதவி துறக்க ஆட்சிப் பொறுப்பையேற்றவர் யார்?

கெரென்ஸ்கி

03 அப்போதைய தேவகைளாக இருந்தவை எவை?

விவசாயிகளுக்கு - நிலம்

படைவீரர்களுக்கு - சமாதானம்

அனைவருக்கும் - உணவு

திரு.நா.செல்வச்சந்திரன்

04 லெனின் தலைமையிலான போல்ஸெவிக் கட்சியினர் உருவாக்கிய அமைப்பு எது?

சோவியட்மண்டலம்

05 சோவியத்தில் காணப்பட்ட இரு அரசியல் குழுவினரும் யாவர்?

மெல்ஷவிக் - சீர்திருத்தங்கள் மூலம் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்று கருதியவர்கள்

போல்ஸெவிக் - முதலாளித்துவத்தை தகர்த்தெறிந்து பொதுவுடமைக் கருத்துக்களைக் கொண்ட சமுதாயத்தை தோற்றுவிப்பது

06 போல்ஸெவிற்கிற்கு தலைமை தாங்கியவர்கள் யார்? லெனின், ட்றொஸ்கி

07 இந்த சந்தர்ப்பத்தில் நாம் அதிகாரத்தைக் கைப்பற்றாவிட்டால் வரலாறு எமக்கு

www.lkedu.lk

இரக்கம் காட்ட மாட்டாது எனக் கூறியவன் யார்? லெனின்

பாடவேளை (10)

ரஸ்யப் புரட்சியின் விளைவுகள்

01 ரஸ்யப் புரட்சியின் விளைவுகள் எவை?

1 கெரன்ஸ்கி தலைமையிலான அரசைக் கவிழ்த்து லெனின் தலைமையிலான போல்ஸெவிக்குகள் ஆட்சியைக் கைப்பற்றியமை.

2 நாட்டில் சமாதானம் உருவானது

3 தனியார் காணி உரிமை நீக்கப்பட்டு கூட்டுப்பண்ணை முறை ஆரம்பிக்கப்பட்டமை

4 சார் மன்னரிகளின் ஆட்சியை முற்றிலும் ஒழித்து அதற்குப் பதிலாக தொழிலாளர்களினதும் விவசாயிகளினதும் பிரதிநிதிகளைக் கொண்ட சோவியற்சபையின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட புதிய அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர்.

திரு.நா.செல்வச்சந்திரன்

5 சோவியத் சமவுடமைக் குடியரசு என அழைக்கப்பட்டது

6 பொதுவுடமைத் தத்துவம் உலகெங்கும் பரவியமை

7 பாட்டாளி வகுப்பினரின் புரட்சிகள் உலகெங்கும் பரவியமை

8 ரஸ்யாவை மையமாகக் கொண்ட சமவுடமைவாத அணி தோற்றம் பெற்றது.

02 சமவுடமைக் கொள்கை என்றால் என்ன?

சமுதாயத்தின் செல்வம் தொடர்பானன பொது உரிமை அனைத்துப் பிரசைகளுக்கும் உரியதாகும். தமது திறமையைச் மேம்படச் செய்யும் பொருட்டு சமமான சந்தர்ப்பம் வழங்குதல், உற்பத்தியின் பயனை அனைவருக்கும் சமமாகப் பகிர்ந்தளித்தல் என்பன உட்பட அரசியல், சமூக, பொருளாதார முறையை ஏற்றுக்கொண்ட ஒரு அரசியல்

www.lkedu.lk

தத்துவமாகும்.

03 சமவுடமைக் கொள்கையின் இயல்புகள் எவை?

1 தனிநபர் தேவையை விட சமூக முன்னேற்றத்திற்கும் சமூகத் தேவைகளுக்கும் முன்னுரிமை வழங்குதல்.

2 சமுதாயத்தில் அநீதிகளையம் ஏற்றத்தாழ்வினையும் அகற்றுதல்

3 சமுதாயத்தில் வகுப்புப் பாகுபாடுகளை அகற்றி அனைவரையும் சகோதரர்களாக எண்ணும் உயர் மானிட சமுதாயத்தைக் கட்டியெழுப்புதல்.

04 சமவுடமைக் கொள்கைக்கேற்ப தமது நாட்டின் அரசியல் யாப்பினை உருவாக்கிக் கொண்ட நாடுகள் எவை?

சீனா, கிழக்கு ஜேர்மனி, வடகொரியா, கியூபா

திரு.நா.செல்வச்சந்திரன்

www.lkedu.lk

அலகு – 08

உலக மகா யுத்தங்களும் இணக்கப்பாடுகளும்

பாடவேளை (12)

பாடவேளை (11)

உலக மகா யுத்தம் அறிமுகம்

01 இருபதாம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதியில் அகில உலகத்திற்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது எது? உலக மகா யுத்தங்கள்

02 இரு உலக மகா யத்தங்கள் இரண்டும் ஆரம்பமான கண்டம் எது? ஐரோப்பாக்

03 உலக மகா யுத்தங்கள் என்றால் என்ன?

உலகில் பலம் பொருந்திய நாடுகள் பலவும் இந்த யுத்தத்தில் ஈடுபட்டு முழு உலகிலும் தாக்கத்தை ஏற்படுத்தியமையால் இவை உலக மகா யுத்தங்கள் என அழைக்கப்படுகின்றன.

திரு.நா.செல்வச்சந்திரன்

முதலாம் உலக மகா யுத்தம்

04 முதலாம் உலக மகா யுத்தம் நடைபெற்ற காலப்பகுதி எது?

1914 யூலை 28 – 1918 நவம்பர் 11

முதலாம் உலக மகா யுத்தங்களுக்கான காரணங்கள்

05 முதலாம் உலக யுத்தம் இடம்பெற்றமைக்கான காரணங்கள் எவை?

அடிப்படைக் காரணங்கள்

1 ஜேர்மனியை ஐக்கியப்படுத்தும் நடவடிக்கையின் போது பிரான்சும் ஜேர்மனியும் பகைமை நாடுகளாக உருவெடுத்தமை

2 ஜேர்மன் பேரரசனாகிய இரண்டாம் வில்லியத்தின் செயற்பாடுகள்

3 குடியேற்றங்கள் குறித்த போட்டி

4 ஆயுதப் போட்டிகளும் இனவாதம் வளர்ச்சியடைதலும்

5 பிரான்சை தனிமைப்படுத்துவதற்குப் பிஸ்மார்க் பின்பற்றிய வெளிநாட்டுக்கொள்கை

www.lkedu.lk

உடனடிக்காரணம்

1 ஆஸ்திரிய முடிக்குரிய இளவரசனின் கொலை

1 ஜேர்மனியை ஐக்கியப்படுத்தும் நடவடிக்கையின் போது பிரான்சும்

ஜேர்மனியும் பகைமை நாடுகளாக உருவெடுத்தமை 350 சிறிய நாடுகளாக இருந்த பிரதேசங்களை ஒன்றிணைத்து ஜேர்மனி என்னும் நாடாக்கியவர் ஓட்டோமான் பிஸ்மார்க் ஆவார். இதற்காக 1870இல் ஜேர்மனியை உருவாக்கி அதனைப் பலம் வாய்ந்த நாடாக்குவதற்காக பிரான்சுடன் யுத்தத்தில் ஈடுபட்டான். அந்த யுத்தத்தில் பிரான்ஸ் பெரும் தோல்வியடைந்தது. பிரான்சின் வளம் நிறைந்த அல்சேஸ், லொரைன்ஸ் பிரதேசங்களை ஜேர்மனி கைப்பற்றியது. அன்று முதல் இரு நாடுகளும் பரஸ்பரம் பகை நாடகளாக மாளின.

2 ஜேர்மன் பேரரசனாகிய இரண்டாம் வில்லியத்தின் செயற்பாடுகள்

ஜேர்மனியின் ஐக்கியத்திற்குக் காரணமான பிஸ்மார்க் ஜேர்மனிக்கு வெளியே குடியேற்ற நாடுகளை உருவாக்குவதில் அக்கறை காட்டவில்லை. ஆனால் 1887இல் ஜேர்மனியில் பேரரசனாக வந்த இரண்டாம் வில்லியம் (கெய்சர் வில்லியம்) ஜேர்மனிக்கு குடியேற்றங்களை அமைத்து ஜேர்மனியை பேரரசாக்குவதே நோக்கமாக இருந்தது. அவனது வெளிநாட்டுக்கொள்கை ஏனைய நாடுகளுக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியது.

திரு.நா.செல்வமனோகரன்

www.lkedu.lk

3 **பிரான்சை தனிமைப்படுத்துவதற்குப் பிஸ்மார்க் பின்பற்றிய வெளிநாட்டுக்கொள்கை**

1870இல் இடம்பெற்ற பிரான்சுடனான போரில் கைப்பற்றப்பட்ட அல்செஸ், லொரைன்ஸ் பிரதேசங்களை பிரான்ஸ் மீண்டும் கைப்பற்றும் என்ற அச்சம் ஜேர்மனிக்கு இருந்தது. இதனால் ஐரோப்பிய வல்லரசுகளுடன் ஜேர்மனி நட்புறவுகளை ஏற்படுத்தவதும், பிரான்சுக்கு நட்புக்கொள்ள ஏதும் இல்லாமல் செய்வதும் ஜேர்மனியின் நோக்கமாக இருந்தது. தனிமைப்படத்தப்பட்ட பிரான்ஸ் ஐரோப்பாவில் நட்பு நாடுகளை தேடிச்சென்றமையால் ஜேர்மனி மற்றும் பரான்ஸ் தலைமையில் இரு முகாம்கள் தோன்றின. ஜேர்மனி, இத்தாலி, ஆஸ்திரியா உள்ளிட்ட நாடுகள் ஒரு முகாமாகவும், பிரான்ஸ், பிரித்தானியா, ரஸ்யா உள்ளிட்ட நாடுகள் இன்னொரு முகாமாகவும் பிரிந்து நின்றன.

ஆஸ்திரிய முடிக்குரிய இளவரசனின் கொலை

ஆஸ்திரியாவின் முடிக்குரிய இளவசரன் பேர்டினாந்தும் அவனது மனைவியும் சேர்பியாவின் தலைநகர் சரஜிவோவில் வைத்து சுட்டக்கொல்லப்பட்டனர். இது தனக்கான சூழ்ச்சி எனத் தீர்மானித்த ஆஸ்திரியா நிபந்தனைகள் சிலவற்றை விதித்து நட்டஈடு கேட்டது. சேர்பியா அதனை நிரகாரித்தமையால் 1914 ஜூலை 20ம் திகதி செர்பியாவுக்கு எதிராக ஆஸ்திரியா யுத்த பிரகடனம் செய்தது. இந்நிகழ்வே சரஜிவோ சம்பவம் எனப்படுகிறது.

03 குடியேற்ற நாடுகளை அமைத்துக்கொண்ட ஐரோப்பிய நாடகள் எவை?

பிரித்தானியா, பிரான்ஸ், பெல்ஜியம், போர்த்துக்கல், ஸ்பெயின்

04 அதிக குடியேற்ற நாடுகளை வைத்திருந்த நாடு எது?(சூரியன் அஸ்தமிக்காத சாம்ராஜ்யத்தைக் கொண்டிருந்த நாடு எது?

பிரித்தானியா

www.lkedu.lk

05 ஜேர்மனி குடியேற்ற நாடுகளை உருவாக்கிக்கொள்ள முயற்சித்தமைக்கான காரணங்கள் எவை?

ஜேர்மனியில் ஏற்பட்ட கைத்தொழில் துறையின் வளர்ச்சியால் மூலப்பொருட்களைப் பெறவும் முடிவுப்பொருட்களைச் சந்தைப்படுத்தவும் குடியேற்ற நாடுகள் தேவைப்பட்டமை

06 ஆயுத பலத்தால் ஐந்து வரடங்களி பெற்றவைகளைப் பாதுகாக்க மேலும் 50 வருடங்கள் ஆயுதம் தரித்த நிலையில் இருக்க வேண்டி வரும் எனக்கூறிய ஜேர்மனின் சேனாதிபதி யார்?

வொன் வோல் கே

07 ஐரோப்பாவில் ஏற்பட்ட தேசியவாதத்தின் இலட்சணமாக அமைவது எது?

தமது நாட்டின் மீது பற்றுக்கொள்வதம் ஏனைய நாடுகளை ஒழிப்பதுமாகும்.

பாடவேளை (12)

திரு.நா.செல்வச்சந்திரன்

முதலாம் உலக மகா யுத்தம் பரவிய முறை

01 முதலாம் உலகப்போரில் பங்கேற்ற அணிகளையும் நாடுகளையும் குறிப்பிடுக?

1 நட்பு நாடுகள் (நேச நாடுகள்)- பிரித்தானியா, பிரான்ஸ், ரஸ்யா, ஐக்கிய அமெரிக்கா

2 மத்திய ஐரோப்பிய வல்லரசு (அச்சு நாடுகள்) - ஜேர்மனி, ஆஸ்திரியா, இத்தாலி, துருக்கி, பல்கேரியா, ஹங்கேரி

www.lkedu.lk

02 முதலாம் உலகப்போர் பரவலடைந்த முறைகள் எவை?

- சரஜிவோ சம்பவம் காரணமாக ஆஸ்திரியா செர்பியா மீது யுத்த பிரகடனம் செய்தது
- ஆஸ்திரியாவின் இச்செயலை அதன் நட்பு நாடாகிய ஜேர்மனி ஆதரித்தது
- சேர்பியாவிற்கு உதவ ரஸ்யா முன்வந்தது.
- ஆஸ்திரியாவிற்கு சார்பாக யுத்தத்தில் இறங்கிய ஜேர்மனி ஆவணி முதலாம் திகதி ரஸ்யாவிற்கு எதிராக யுத்த பிரகடனம் செய்தது
- ரஸ்யாவின் நட்பு நாடாக பிரான்ஸ் இருந்தமையால் பிரான்சுக்கு எதிராக ஜேர்மனி யுத்த பிரகடனம் செய்தது
- ஜேர்மனி பெல்ஜியத்தின் வழியாக பிரான்சை ஆக்கிரமித்தமையால் பெல்ஜியத்தின் பாதுகாப்பு உதவியாக இருந்தமை, நட்பு நாடாக பிரான்ஸ் விளங்கியமை ஆகிய காரணங்களால் பிரித்தானியா யுத்தத்தில் இறங்கியது.
- பிரித்தானியா தனது யுத்தத்தில் இறங்கியமையால் அதன் குடியேற்ற நாடுகளை நோக்கியும் யுத்தம் விரிவடைந்தது.
- ஐக்கிய அமெரிக்காவின் பயணிகள் கப்பலான லுசுத்தானியா தாக்கப்பட்டமையால் ஐக்கிய அமெரிக்கா போரில் இறங்கியது

03 மத்திய ஐரோப்பிய வல்லரசுகள் அணியிலிருந்து விலகி இரகசிய ஒப்பந்தம் மூலம் நட்பு நாடுகளோடு இணைந்த நாடு எது? இத்தாலி

திருமதி செல்வராசா சிந்துஜன்

04 புரட்சி காரணமாக போரின் இடைநடுவில் விலகிய நாடு எது? ரஸ்யா

05 முதலாம் உலகப்போரில் ஜேர்மனி தலைமையிலான மத்திய ஐரோப்பிய வல்லரசுகள் அணி தோல்வியடைந்தமைக்கான காரணங்கள் எவை?

1 ஐக்கிய அமெரிக்கா நட்பு நாடுகள் அணிக்கு சார்பாக போரில் இணைந்தமை

2 ஐக்கிய அமெரிக்காவிடம் காணப்பட்ட பெருந்தொகையான உணவுக்கையிருப்பு, இரு மில்லியனைக்கொண்ட காலாட்படை, மற்றும் கடற்படை, புத்தம் புதிய நவீன போர் ஆயுதங்கள் என்பவற்றால் ஏற்பட்ட நெருக்கடி

www.lkedu.lk

3 இரகசிய ஒப்பந்தம் மூலம் இத்தாலி நட்பு நாடுகள் பக்கம் சேர்ந்தமையால் போர் இரகசியங்கள் எதிரியின் கைகளுக்குச் சென்றமை

4 ஜேர்மனியின் போரிடும் சக்தி பலவீனமடைந்தமை, உணவு நெருக்கடி ஏற்பட்டமை, இராணுவத்தின் மத்தியில் ஏற்பட்ட அமைதியின்மை ஏற்படுத்தியது.

5 ஜேர்மனியில் மக்கள் கிளர்ச்சி ஏற்பட்டு கலவரங்கள் நாடு முழுவதும் பரவியமை.

பாடவேளை (13)

முதலாம் உலக யுத்தத்தின் விளைவுகள்

01 முதலாம் உலக மகா யுத்தத்தின் விளைவுகள் எவை?

1 யுத்தத்தில் அச்சு நாடுகள் அணி தோல்வியடைந்தமை

2 யுத்தத்தில் நட்பு நாடுகள் அணி வெற்றி பெற்றமை

3 ஆயுதப்பாவனை காரணமாக பெருந்தொகையான மனித உயிர்கள் கொல்லப்பட்டதோடு பத்து இலட்சம் மக்கள் ஊனமுற்றனர்.

திரு.நா.தேல்வச்சந்திரன்

4 பெருமளவான சொத்துக்கள் அழிவடைந்தன.

5 போரின் முடிவில் தோல்வியடைந்த நாடுகளுடன் வெற்றியடைந்த நாடுகள் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு தண்டனை வழங்கப்பட்டது.

(உதாரணம் ஜேர்மனியோடு வேர்செயில்ஸ் உடன்படிக்கை)

6 உலகின் விலமை மிக்க நாடுகளாக பிரித்தானியாவும், ஐக்கிய அமெரிக்காவும் எழுச்சி பெற்றமை

7 சர்வதேச சங்கம் அமைக்கப்பட்டமை

02 வேர்செயில் மாளிகையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் பங்கேற்றவர்கள் யாவர்?

ஐக்கிய அமெரிக்கா - வுட்றோவில்சன்

பிரித்தானியா - லொயிட்ஜோர்ஜ்

பிரான்ஸ் - கிளமென்ஷோ

இத்தாலி - விட்டோரியோ ஒலெண்டோ

www.lkedu.lk

03 வேர்செயில்ஸ் உடன்படிக்கை மூலம் ஜேர்மனிக்கு வழங்கப்பட்ட தண்டனைகள் எவை?

1 வெற்றி பெற்ற நாடுகளுக்கு பெருந்தொகையான பணத்தை நட்ட ஈடாக செலுத்த வேண்டும்

2 இராணுவத்தை வைத்துக்கொள்ளல், பொர்த் தளபாடங்களை தயாரிக்க விடயத்தில் வரையறைகள் விதிக்கப்பட்டன.

3 பிரான்சிடமிருந்து கைப்பற்றப்பட்ட பிரதேசங்களான அல்சேஸ், லொரைன்ஸ் பிரதேசங்கள் மீண்டும் பிரான்சிடம் ஒப்படைக்கப்படல்

4 ஜேர்மனிக்கு வெளியே அமைந்திருந்த அதன் குடியேற்ற நாடுகள் வெற்றி பெற்ற நாடுகளிடையே பகிர்ந்தளிக்கப்பட்டன.

04 முதலாம் உலக மகா யுத்தத்தினால் வீழ்ச்சியடைந்த சர்வாதிகார மன்னராட்சி அரசுகள் எவை?

ஜேர்மன் பேரரசு, ஆஸ்திரிய ஹங்கேரிப் பெரரசு, துருக்கிப் பேரரசு

திரு.ந.செல்வச்சந்திரன்

05 இனங்களை அடிப்படையாகக் கொண்டு தோன்றிய சுதந்திர அரசுகள் எவை?

பின்லாந்து, போலந்து, செக்கொஸ்லோவாக்கியா, ஹங்கேரி

பாடவேளை (14)

சர்வதேச சங்கத்தின் நோக்கம், பணிகள்

01 மீண்டும் யுத்தம் ஏற்படுவதைத் தடுக்கவும் சமாதானத்தைப் பாதுகாக்கவும் உருவாக்கப்பட்ட அமைப்பு எது?

சர்வதேச சங்கம்

02 சர்வதேச சங்கம் உருவாக முன்னின்று உழைத்த அமெரிக்க ஜனாதிபதி யார்?

வூட்றொவில்சன்

03 சர்வதேச சங்கம் அமைக்கப்பட்ட ஆண்டு எது?

1920.01.10

www.lkedu.lk

04 சர்வதேச சங்கத்தில் அரம்பத்தில் எத்தனை நாடுகள் அங்கம் வகித்தன?

42

05 சர்வதேச சங்கம் உருவாக்கப்பட்டமைக்கான காரணங்கள் எவை?

1 நாடுகளிடையே ஏற்படும் கருத்து வேறுபாடுகளை சமாதானமாகத் தீர்த்தல்

2 எதிர்காலத்தில் யுத்தம் ஒன்று ஏற்படுவதைத் தடுத்தல்

3 சர்வதேச புரிந்துணர்வையம் ஒத்துழைப்பையும் கடடியெழப்புதல்

4 சிறிய நாடுகளின் சுதந்திரம், சுயாதீனம் என்பவற்றைப் பாதகாத்தல்

5 மனித குல ஒற்றுமை மூலம் உலக சமாதானத்தைப் பாதுகாத்தல்

06 சர்வதேச சங்கம் சமாதானத்தைப் பாதுகாக்க எடுத்த முயற்சிகள் எவை?

1 சுவீடனுக்கும் பின்லாந்துக்கும் இடையிலும், ஜேர்மனிக்கும் போலந்திற்கும் இடையிலும், கிரேக்கத்திற்கும் பல்கேரியாவுற்கும் இடையிலும் , ஈரானுக்கும் துருக்கிக்கும் இடையிலும் ஏற்பட்ட யுத்த முரண்பாடுகளை தவிர்த்தமை

2 அகதிகள் புனர்வாழ்விற்காக நடவடிக்கையெடுத்தமை

3 சர்வதேச சங்கத்தின் நம்பிக்கைப் பொறுப்புக்காக நியமிக்கப்பட்டிருந்த குடியேற்றங்களின் ஆட்சி நடவடிக்கைகளை வெற்றிகரமாக மேற்பார்வை செய்தமை

4 சட்ட விரோமான அடிமை வியாபாரம், போதைப் பொருள் வியாபாரத்தைக் கட்டுப்படுத்தல்

07 சர்வதேச சங்கம் தோல்வியடைந்தமைக்கான காரணங்கள் எவை?

1 உலகின் செல்வந்த நாடாகவும், பொர்ப்பலமிக்க நாடாகவும், சர்வதேச சங்கத்தின் தோற்றத்திற்கும் காரணமான ஐக்கிய அமெரிக்கா அங்கம் வகிக்காமை.

2 உலகின் மற்றைய வல்லரசான ரஸ்யாவை சர்வதேச சங்கத்திலிருந்து ஒதுக்கி வைத்தமை

திரு.நா. செல்வச்சந்திரன்

www.lkedu.lk

3 தனது தீர்மானங்களை நிர்ப்பந்தம் மூலம் செயற்படுத்துவதற்குத் தேவையான நிரந்தரப்படையோ அல்லது ஏதாவதொரு சமாதமானப் படையை பயன்படுத்துவதற்கான பொது இணக்கப்பாடோ காணப்படாமை

4 உலக சமாதானம் சீர்குலைக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் அந்நாடுகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியமாலிருந்தமை. உதாரணமாக இத்தாலி அபிசீனியாவை ஆக்கிரமித்த போதும், ஜப்பான் மஞ்சூரியாவை ஆக்கிரமித்த போதும் நடவடிக்கையெடுக்க முடியவில்லை.

பின்தொடர்வேலை :- முதலாம் உலக மகா யுத்தத்தோடு தொடரபடைய நாடுகளை உலகப் புறவுருவப்படத்தில் குறித்தக்காட்டுக.

பாடவேளை (15)

இரண்டாம் உலக மகா யுத்தத்திற்கான காரணங்கள்

1 ஹிட்லரின் எழுச்சி

திரு.நா.செல்வச்சந்திரன்

01 இரண்டாம் உலக மகா யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதி எது?

1939 செப்டெம்பர் - 1945 ஆவணி வரை

02 இரண்டாம் உலக மகா யுத்தத்திற்கான காரணிகள் எவை?

1 ஜேர்மனியில் ஹிட்லரின் எழுச்சியும் அவரின் நடவடிக்கைகளும்

2 இத்தாலியில் முசோலினியின் நடவடிக்கை

3 ஜப்பானின் நடவடிக்கைகள்

4 சர்வதேச சங்கத்தின் பலவீனம்

www.lkedu.lk

03 ஜேர்மனியில் ஹிட்லரின் எழுச்சியும் அவரின் நடவடிக்கைகளும் எவ்வாறு உலக மகா யுத்தத்திற்கு காரணமாகியது என்பதை விளக்குக?

- முதலாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் ஜேர்மனியில் அமைக்கப்பட்ட புதிய அரசு வைமர் கூட்டாட்சி எனப்பட்டது.
- வைமர் அரசின் பலவீனத்தைப் பயன்படுத்தி ஹிட்லர் ஆட்சிக்கு வந்தமை
- பெருந்தொகையான பணத்தை நட்ட ஈடாக கொடுக்க வேண்டியிருந்தமை காரணமாக ஜேர்மனியின் வருமானம் முழுவதையம் செலவழிக்க வேண்டி ஏற்பட்டது. வைமர் அரசு பணத்தை அச்சடிக்க முற்பட்டதால் பணத்தின் பெறுமானம் வீழ்ச்சியடைந்து நாட்டில் வறுமையும், பொருட்களின் விரை அதிகரிப்பு, வேலையின்மை ஆகியன ஏற்பட்டன
- 1929இல் ஏற்பட்ட உலகப் பொருளாதார நெருக்கடியினால் ஜேர்மனி பெரிதும் பாதிக்கப்பட்டது. வைமர் அரசுக்கு இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இயலாது என ஹிட்லரின் ஆதரவாளர்கள் கூறினர்
- ஆஸ்திரியரான ஹிட்லர் வைமர் ஆட்சிக்கு எதிராகச் சூழ்ச்சி செய்தமை காரணமாக சிறையிலடைக்கப்பட்டார். அப்போது அவர் எனது போராட்டம் என்னும் நூலை எழுதினார். இதில் நாசிசவாதம் குறித்துக் கூறியுள்ளார்
- சிறையிலிருந்து வெளிவந்த ஹிட்லர் இனவாதத்தைப் பரப்பி 1933இல் பாராளுமன்றத்தின் அதிகாரத்தைக் கைப்பற்றி (ரிஷ்டாக்) சான்சலரானார்.
- இவரின் கட்சி தேசிய சோசலிசக் கட்சி எனப்பட்டது. இதிலிருந்தே நாசி என்ற சொல் உருவானது.
- ஹிட்லர் சான்சலாகப் பதிவியேற்ற போது ஜேர்மனியின் ஜனாதிபதியாக வொன்ஹிடன்பார்க் என்பவர் இருந்தார்
- ஹிடன் பார்க் இறக்க அவரது அதிகாரங்கள் அனைத்தையும் ஹிட்லர் தனதாக்கிக் கொண்டார்.
- தேர்தல் நெருங்கும் போது பாராளுமன்றத்திற்க தீவைத்துவிட்டு அதன் பழியை கம்யுனிஸ்டுகள் மீத சுமத்தினார்
- சகல அரசியல் கட்சிகளும், சமவுடமைவாதிகளும் தடைசெய்யப்பட்டனர்
- யூதர்களை கூண்டோடு கொலை செய்ய ஆரம்பித்தார்.
- எஸ்.எஸ். இராணுவம், கெஸ்டபோ என்னும் இரகசிய பொலிசாரும் கொலைகளில் ஈடுபட்டனர்
- ஊடகங்கள் அனைத்தையும் தனக்குச் சாதாகமானப் பயன்படுத்தினர். இதற்கு ஊடகத்துறை அமைச்சராக இருந்த கொயபெல்ஸ் எதவினார்.

www.lkedu.lk

- பத்திரிகைச் சுதந்திரம், கூட்டம் சுடும் சுதந்திரம், கருத்து வெளியிடும் சுதந்திரம் ஆகிய அனைத்தும் தடைசெய்யப்பட்டன.
- ஹிட்லரின் கம்யூனிச எதிர்ப்பைக் கண்ட மேற்குலக நாடுகள் ஹிட்லருக்கு எதிராக நடவடிக்கை எடுக்காமையினால் மேலும் பிடிவாத குணமுள்ளவராக மாறினார்.
- 1934இல் ஜேர்மனி சர்வதேச சங்கத்திலிருந்து விலகி யுத்தத்தை நோக்கிச் செல்லத் தொடங்கியது.
- ஹிட்லரின் ஆக்கிரமிப்பு முயற்சிகள்
    - 1938இல் ஆஸ்ததிரியாவை ஆக்கிரமித்து ஜேர்மனியடன் இணைத்துக்கொண்டார்.
    - செக்கோஸ்சிலோவாக்கிய மீது கவனம் செலுத்தி அவர்களை செக்கோஸ்சிலோவாக்கியர், ஜேர்மனியினர் என இனரீதியாகப் பிரித்து சுடேட்லாந்து என்னும் பெயரில் தனிநாடு உன்றை அமைத்தார்
    - பின்னர் சுடேட்லாந்தையும், செக்கோஸ்சிலோவாக்கியாவையும் ஆக்கிரமித்தார்
    - போலந்தை ஆக்கிரமிக்கும் போது பிரித்தானியா, பிரான்ஸ் நாடுகள் ஹிட்லருக்கு எதிராக யுத்தத்தை ஆரம்பித்தன.

04 நாசிசவாதம் என்றால் என்ன?

சர்வாதிகாரத்தை அடிப்படையாகக் கொண்ட அரசியல் முறையாகும்.

ஜனநாயகவாதம், சமவுடமைவாதம், முதலாளித்துவாதம் என்பவற்றிற்கு எதிரானது. இதன் அடிப்படை நோக்கம் ஜேர்மன் இனமானது மாசற்ற ஆரியர்களைக்கொண்ட உலகின் உன்னதமான இனம் என்பதாகும்.

05 ஹிட்லரால் அமைக்கப்பட்ட வதை முகாம்கள் எவை?

அவுட்விட்ஸ், பர்கர் பெல்ஷன், பெல்ஷெக், சொம்போர்

திரு.நா.செல்வசந்தன்

www.lkedu.lk

பாடவேளை (16)

இரண்டாம் உலக மகா யுத்தத்திற்கான காரணங்கள்

2 முசோலினி ஆட்சிக்கு வருதல்

01 இத்தாலியில் முவோலினியின் செயற்பாடுகள் எவ்வாறு இரண்டாம் உலக மகா யுத்தத்திற்கு காரணமாகியது என்பதை விளக்குக?

- முதலாம் உலக மகா யுத்த முடிவில் இத்தாலி வெற்றி பெற்ற அணியில் இருந்த போதிலும் சமாதான உடன்படிக்கைகள் மூலம் பெரிதும் நன்மைகள் கிட்டவில்லை.
- யுத்தத்தின் பின்னர் வேலையின்மை, உணவுத்தட்டுப்பாடு, வேலைநிறுத்தம் என்பன ஏற்பட்டன.
- இதனைப்பபயன்படுத்தி 1922இல் பாசிசவாத அரசியல் கட்சி ஊடாக அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றினார்.
- கருஞ்சட்டை வீரர்கள் என்னும் இராணுவத்தை உருவாக்கி பாசிசத்தை எதிர்த்தவர்களை அழித்தான்.
- இத்தாலியில் சர்வாதிகார ஏட்சியை ஏற்படுத்த முசோலினி மேற்கொண்ட நடவடிக்கைகள் எவை

  1 பாசிச அடிப்படைக் கொள்கைகளை படிப்படியாக நிலைநிறுத்தியமை

  2 அரச பதவிகளை தனக்கு சார்பானவர்களுக்கு வழங்கி தன்னை எதிர்த்தவர்கள் மீது அடக்கு முறையைக் கையாண்டமை

  3 பத்திரிகை சுதந்திரத்தைப் பறித்தமை

  4 வாக்காளர்களை கறுப்புச்சட்டை படையினர் மூலம் பலவந்தப்படுத்தியமை

- யுத்த ரீதியில் இத்தாலியை வலுப்படுத்த முசோலினி எடுத்த நடவடிக்கைகள் எவை?

  1 பாசிச வாதம், இனவாதம், போர் என்பன உயர்வாகக் கருதப்பட்டது

  2 இளைஞர்களுக்கு யுத்த சேவை கட்டாயமாக்கப்பட்டது

  3 எத்தியோப்பியாவைக் தாக்கி இத்தாலியுடன் இணைத்துக் கொள்ளப்பட்டது

  4 ஜெனரல் பிரான்சிஸ்கோவின் அழைப்பின் பேரில் இத்தாலியப் படையொன்றை ஸ்பானியாவுக்கு அனுப்பியமை

திரு.நா.செல்வச்சந்திரன்

www.lkedu.lk

02 பாசிசவாதம் என்றால் என்ன?

கோட்பாடுகளோ, தத்துவங்களோ, பேச்சோ அல்லாமற் கட்டுப்பாடுகளுடன் கூடிய செயற்பாடு மட்டுமே தேவை என்ற சிந்தனையைக் கொண்ட வாதமாகும். பணி, நம்பு, போரிடு, தலைவன் நல்லதையே செய்வான் என்பத அடிப்படையாகக் கொண்ட சர்வாதிகார ஆட்சியாகும்.

ஜப்பானின் எழுச்சி

03 ஜப்பானின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் எவ்வாறு இரண்டாம் உலக மகா யுத்தத்திற்கு காரணமாகியது என்பதை விளக்குக?

1 19ம் நூற்றாண்டின் இறதி அரைப்பகுதியில் ஆசிய நாடுகளில் ஜப்பான் முன்னேற்றகரமான நாடாக விளங்கத் தொடங்கியது

2 உற்பத்திக்குத் தேவையான சமூலப்பொருட்களைப் பெறவும் , முடிவுப்பொருட்களை விற்பனை செய்யவும் சந்தைகள் தேவைப்பட்டன.

3 ஆசியாவில் பெரும்பாலன குடியேற்றங்கள் ஐரோப்பியர்களால் அமைக்கபட்டிருந்தமை காரணமாக அவர்களோடு மோத வேண்டிய சூழல் ஏற்பட்டது.

4 1934ல் வடசீனாவின் மஞ்சூரியாவை ஆக்கிரமித்து அதனை தன்னுடன் இணைத்துக் கொண்டது.

5 சர்வதேச சங்கத்திலிருந்து விலகி சீனாவின் முக்கிய துறைமுகங்களையும், நகரங்கள் சிலவற்றையும் கைப்பற்றியது.

6 ஆசியாவில் யுத்தம் பரவுவதற்கு ஜப்பான் காரணமாக அமைந்தது

திரு.நாகேஸ்வரன் செல்வச்சந்திரன்

www.lkedu.lk

பாடவேளை (17)

இரண்டாம் உலக மகா யுத்தம் பரவலடைந்த முறை

01 இரண்டாம் உலக மகா யுத்தத்தில் பங்கேற்ற அணிகள் எவை?

1 நேச நாடுகள் அணி :- ஐக்கிய அமெரிக்கா, பிரான்ஸ், பிரித்தானியா, ரஸ்யா

2 அச்சு நாடகள் அணி :- ஜேர்மன், இத்தாலி, ஜப்பான்

02 இரண்டாம் உலக மகா யுத்தத்திற்கான உடனடிக் காரணம் எது?

1939 செப்டெம்பர் முதலாம் திகதி ஜேர்மனி பொலந்தை ஆக்கிரமித்தமை

03 இரண்டாம் உலக மகா யுத்தம் பரவலடைந்த முறைகள் எவை?

1 போலந்தைப் பாதகாக்க ஒப்பந்தம் செய்திருந்த பிரித்தானியாவும், பிரான்சும் ஜேர்மனிக்கு எதிராக யுத்தத்தில் இறங்கின.

2 நான்கு வாரங்களுக்குள் பொலந்து ஆக்கிரமிக்கப்பட்டது

3 நோர்வே, டென்மார்க், ஒல்லாந்து, பெல்ஜியம் ஆகிய நாடுகள் ஜேர்மனியால் கைப்பற்றப்பட்டன.

4 1940இல் பிரான்சைத் தாக்கி பாரிஸ் கைப்பற்றப்பட்டது

5 முசோலினியும் இத்தாலியின் எல்லைகளைக் கடந்து பிரான்சுக்குள் பிரவேசித்தான்.

6 1941இல் ஜப்பான் அமெரிக்காவின் பேர்ள் தறைமுகத்தின் மீது குண்டுவீசியதால் அமெரிக்கா நேசநாடுகள் சார்பாக யுத்தத்தில் இணைந்தது.

04 பிரித்தானிய மக்களை நாசிகளுக்கு எதிரான போரில் ஈடுபடுத்துவதில் வெற்றி பெற்ற பிரதமர் யார்?

வின்சன்ட்சேர்ச்சில்

திரு.நா.செல்வராஜா

www.lkedu.lk

05 இரண்டாம் உலகப்போரில் அமெரிக்கா ஈடுபட்டமைக்கான காரணம் யாது?

ஜப்பான் அமெரிக்காவின் பேர்ள் துறைமுகத்தை தாக்கியமை

06 ஜப்பானுக்கு எதிராக யுத்த பிரகடனம் செய்த அமெரிக்க ஜனாதிபதி யார்?

பிராங்ளின் ரூஸ்வெல்ட்

07 ஐரோப்பாவிற்குள் மட்டப்படுத்தப்பட்டிருந்த யுத்தம் உலக யுத்தமாக மாற்றமடைந்த ஆண்டு

1941

08 சரணடையுங்கள் இல்லாதுவிட்டால் அடியோடு அழித்துவிடுவேன் என 2ம் உலகமகா யுத்தத்தில் இங்கிலாந்துக்கு அறைகூவல் விடுத்தவன்

ஹிட்லர்

09 பிரித்தானியாவுக்கும் ஜேர்மனிக்கும் இடையே கடும் வான்போர் நடைபெற்ற ஆண்டு எது? 1940 செப்டெம்பர் 14

10 ஹிட்லர் ரஷ்யா மீது படையெடுத்தமைக்கான காரணம் யாது?

உக்ரேனின் தானிய விளைநிலங்களையும், காகசஸ் எல்லையில் காணப்படும் எண்ணெய் வயல்களையும் கைப்பற்றுதல். கொமியூனிசக் கொள்கைகளை இல்லாதொழித்தல்

11 ரஸ்யா மீது படையெடுத்து படுதோல்வியடைந்த பிரான்சின் சக்கரவர்த்தி யார்?

நெப்போலியன்

12 ரஷ்யாவில் ஜேர்மனி தோல்வியடைந்தமைக்கான காரணங்கள் எவை?

1 ரஷ்யப்படையினரின் தந்திரங்கள்

2 கடும் குளிரால் தகவல் பரிமாற்றம் செயலிழந்தமை

3 பனி வீழ்ச்சி காரணமாக யுத்த தாங்கிகள் செயலிழந்தமை

4 குளிரால் போர் வீரர்கள் இறந்தமை

5 உணவுத்தட்டுப்பாடு, நோய்கள் பரவியமை

தமிழா.செல்வச்சந்திரன்

www.lkedu.lk

13 ஜேர்மனி நிபந்தினையின்றி சரணடைந்த ஆண்டு எது?

1945

14 ஜேர்மனி எவ்வாறு சரணடைந்தது?

1 சோவியத்தின் செம்படைகள் ஜேர்மனியப் படைகளை தொடர்ந்து தாக்கி தமது பிரதேசங்களை மீட்டுக்கொண்டு ஜேர்மனியை நோக்கி கிழக்குத் திசையில் முன்னேறின.

2 பிரான்ஸ் மற்றும் அமெரிக்கப்படைகள் நோர்மாண்டியில் தரையிறங்கி பிரான்சை மீட்டுக்கொண்டு மேற்குத் திசையாக ஜேர்மனியை நோக்கி விரைந்தன.

3 1945 மார்ச்சில் தலைநகர் பெர்லினுக்குள் இரண்டு படைகளும் நுழைந்தன. 4 ஹிட்லர் உள்ளிட்ட அவனது கட்டளைத் தளபதிகள் தற்கொலை செய்து கொண்டனர்.

திரு.நா.தில்லைச்சந்திரன்

15 ஜப்பானால் கைப்பற்றப்பட்ட பிரித்தானியா குடியேற்ற நாடகள் எவை?

சிங்கப்பூர், மலேசியா, பர்மா, ஹொங்ஹொங்

16 ஜப்பான் 1942இல் கைப்பற்றாத ஆசிய நாடுகள் எவை?

இலங்கை, இந்தியா

17 இரண்டாம் உலக யுத்த காலத்தில் இலங்கையின் கொழும்பு, திருகோணமலை துறைமுகங்கள் மீது தாக்குதல் நடத்திய நாடு எது?

ஜப்பான்

18 ஜப்பானில் அணுகுண்டு வீசப்பட்ட நகரங்கள் எவை?

ஹிரோசிமோ – 1945 ஆவணி 06

நாகசாசி - 1945 ஆவணி 09

19 ஜப்பானில் அணுகுண்டு வீச அனுமதியளித்த அமெரிக்க ஜனாதிபதி யார்?

ஹரிட்ரூமன்

www.lkedu.lk

20 நிபந்தனையற்ற விதத்தில் சரணடைய இணங்கிய ஜப்பானியப் பேரரசன் யார்

ஹிதோஹித்தோ

21 ஜப்பானின் சரணாகதி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டவர்கள் யார்?

மிசவுரி கப்பலில் வைத்து

ஜப்பான் சார்பாக - மாமொரு சிகெமிசு, யெசிட்ஸீரா உமெட்ஸு

நேச நாடுகள் சார்பாக - மெக் ஆத்தர்

பாடவேளை (22 – 18)

இரண்டாம் உலக மகா யுத்தத்தின் விளைவுகள், பேரழிவுகள்

01 இரண்டாம் உலக மகா யுத்தத்தின் விளைவுகள் எவை?

1 ஜேர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகிய அச்சு நாடுகள் தோல்வியடைந்தன.

2 இந்த யுத்தத்தில் 50 மில்லியனுக்கம் அதிதமான மனித உயிர்கள் கொல்லப்பட்டதோடு சொத்துக்கள் மற்றும் செல்வங்களின் அழிவு கணக்கிடமுடியாதவையாக இருந்தன.

திரு.த.செல்வானந்தரான்

3 ஹிட்லரின் யூதர்களுக்கு எதிரான கொள்கை காரணமாக ஜேர்மனி, போலந்து, ஹங்கேரி போன்ற நாடுகளில் வாழ்ந்த மில்லியன் கணக்கான யூதர்கள் கொல்லப்பட்டனர்.

4 அணுகுண்டு போராயதமாக முதன் முதலில் பயன்படுத்தப்பட்டது. ஒரு இலட்சத்துக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டும், அதனை விடப் பெருந்தொகையானோர் காயப்பட்டும், அணுக்கதிர் வீச்சினால் பெருந்தொகையானோர் நோய்வாய்பட்டதோடு எதிர்கால சந்ததியம் பாதிக்கப்பட்டது.

5 இதுவரை வல்லரசாக இருந்த பிரித்தானியாவும் பிரான்சும் இந்த இடத்தை இழந்துவிட அமெரிக்காவும், ரஸ்யாவும் இந்த இடத்தைப் பிடித்துக்கொண்டன.

www.lkedu.lk

6 இலங்கை, இந்தியா போன் குடியேற்ற நாடுகள் சுதந்திரமடைந்தன.

7 போரில் பாதிக்கப்பட்ட ஐரோப்பிய நாடுகளைக் கட்டியெழுப்ப அமெரிக்க அரச செயலாளர் ஜோன்மார்சல் என்பவரால் நடவடிக்கையெடுக்கப்பட்டது. இது மார்சல் திட்டம் எனப்பட்டது

8 அமெரிக்கா ஜனநாயகத்தின் பாதுகாவலனாகவும், ரஸ்யா சமவடைமையின் பாதுகாவலனாகவும் மாறியதோடு இரு நாடுகள் தலைமையில் இரு அணிகள் தோன்றின. முதலாளித்துவ அணியினரால் நேட்டோ அமைப்பும், சமவுடமைவாத அணியினரால் வார்சோ அமைப்பும் தோற்றுவிக்கப்பட்டது.

02 பனிப்போர் என்றால் என்ன?

இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் தோன்றிய இந்த இரண்டு முகாம்களும் போர் ஆயுதங்களைப் பயன்படுத்தாது தமது முகாமை வெற்றி பெறச் செய்வதற்காக பல்வேறு உபாயங்களைப் பயன்படுத்தி முன்னெடுத்த போராட்டமே பனிப்போர் எனப்படும்.

திரு.நா.தயல்வச்சந்திரன்

03 பனிப்போரின் போது இரு நாடுகளும் பயன்படத்திய உத்திகள் எவை?

1 இரகசிய உளவுச்சேவை (அமெரிக்கா – CIA, ரஸ்யா – KGB)

2 அமைப்புக்களை அமைத்தல் (அமெரிக்கா – நேட்டோ, ரஸ்யா – வார்சோ)

3 உதவும் செயல்திட்டங்களை விரிவுபடுத்துதல் (குடியேற்ற நாடு என்ற நிலையிலிருந்து நீங்கி சுயாதீன நாடுகளாக மாறிய நாடுகளின் அபிவிருத்திக்கும் இந்நாடுகள் உதவி செய்வதன் மூலமாக தமது முகாம்களுக்குள் உள்வாங்கிக் கொள்ள முயன்றனர்)

04 இரு முகாம்களுக்குள்ளும் சேராத நாடுகள் உருவாக்கிய அமைப்பு எது?

அதற்கு வழிகாட்டியாக இருந்தவர் யார்? ஆரம்பித்த ஆண்டு எது?

அணிசேரா இயக்கம், 1961 இந்தியப் பிரதமர் ஜவகர்லால் நேரு

05 அணிசேரா நாடுகளின் உருவாக்கத்திற்குக் காரணமாக இருந்தவர்கள் யார்?

இந்தியா - ஜவகர்லால் நேரு

யூகோஸ்சிலோவாக்கியா - மார்சல் டிட்டோ

எகிப்து - அப்துல் கமால் நாசர்

www.lkedu.lk

பாடவேளை (19)

ஐக்கிய நாடுகள் சபை

01 நட்பு நாடுகள் யுத்தத்தில் ஈடுபட்டமைக்கான காரணங்களை வெளிப்படுத்திய ஆவணம் எது? அது எத்தனையாம் ஆண்டு கையெழுத்திடப்பட்டது, அதில் கையெழுத்திட்டவர்கள் யாவர்?

அத்திலாந்திக் பிரகடனம் (அட்லாண்டிக் சாசனம்)

1941

அமெரிக்கா – பிராங்ளின் ரூஸ்வெல்ட்

பிரித்தானியா- வின்சன்சேர்ச்சில்

அந்த நாடுகளை அழைப்பதற்குப் பயன்படுத்திய சொல் - ஐக்கிய நாடுகள்

02 1943இல் மொஸ்கோவில் எந்த நாடுகளின் வெளிநாட்டமைசர்கள் பங்குகொண்டு சர்வதேச நாடுகளின் அமைப்பொன்றை அமைப்பது தொடர்பாகக் கலந்துரையாடினர்?

அமெரிக்கா, பிரித்தானியா, ரஸ்யா, சீனா

திரு.நா.செல்வச்சந்திரன்

03 ஐக்கிய நாடுகள் சபை உருவாவதற்குக் காரணமானவர்கள் யார்?

அமெரிக்கா - பிராங்ளின் ரூஸ்வெல்ட்

பிரித்தானியா- வின்சன் சேர்ச்சில்

ரஸ்யா - ஜோசப் ஸ்டாலின்

04 ஐக்கிய நாடுகள் சபை அமைக்கப்பட்ட ஆண்டு எது, முதலாவது கூட்டம் நடைபெற்ற இடம் எது, அதில் எத்தனை நாடகள் பங்குகொண்டன?

1945, சான்பிரான்சிஸ்கோ, 50

05 இம்மகாநாட்டில் பங்குபற்றாது உடன்படிக்கையில் கையெழுத்திட்ட நாடு எது?

போலந்து

06 ஐக்கிய நாடுகளின் தினம் எப்போது கொண்டாடப்படுகிறது?

ஒக்டோபர் 24

www.lkedu.lk

07 ஐக்கிய நாடுகள் சபை அமைக்கப்பட்டமைக்கான காரணங்கள் எவை?

1 சர்வதேச சமாதானத்தையும் பாதுகாப்பையும் பேணிவருதல்

2 நாடுகளுக்கிடையே நட்புறவை வளர்த்தல்

3 மனித மற்றும் அடிப்படை சுதந்திரத்தை உறுதிசெய்து சர்வதேச ஒத்துழைப்பை விரிவுபடுத்துதல்

08 ஐக்கிய நாடுகள் சபையின் கட்டமைப்பு ?

1 பொதுச்சபை 2 பாதுகாப்புச்சபை 3 செயலகம்

4 சர்வதேச நீதிமன்றம் 5 சமூக பொரளாதார சபை

6 நம்பிக்கை பொறுப்பாண்மைச் சபை

பொதுச்சபை

09 ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்சபையினைப் பற்றிக் குறிப்பிடுக?

1 ஐக்கிய நாடுகள் சபையின் அனைத்து நாடுகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்பாகும். (அங்கத்துவ நாடுகள் 193)

திருமா.செல்வச்சந்திரன்

2 ஒவ்வொரு அங்கத்துவ நாட்டிற்கும் ஒரு வாக்குரிமைக்கு உரித்துடையது

3 வருடத்திற்கு ஒருமுறை கூடும் (செப்டெம்பர் மாதம்)

4 அதிகமான அங்கத்தவர்களது வேண்டுகோளின்படி விசேட கூட்டங்கள் நடாத்துவதற்கு அனுமதியுண்டு

10 பொதுச்சபையின் அதிகாரங்களும் பணிகளும் எவை?

1 ஐக்கிய நாடுகள் சபையின் கொள்கைகளுக்கு அமைவாக முன்வைக்கப்படும் எந்தவொரு விடயம் குறித்தும் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டு தீர்மானமெடுத்தல்.

2 ஆயுத விளக்கம், ஆயுதக் கட்டுப்பாடு தொடர்பான கொள்கைகள், வர்சதேச சமாதானம் மற்றும் பாதுகாப்பு குறித்து உரிய கொள்கைகளை அவதானத்திற் கொள்ளல்

www.lkedu.lk

3 பாதுகாப்புச்சபை மற்றும் ஏனைய நிறுவனங்களிடமிருந்து கிடைக்கும் அறிக்கைகளை மீளாய்வு செய்தல்

4 ஐக்கிய நாடுகள் சபையின் வரவு செலவுத்திட்ட அறிக்கைகளைப் பரிசிலித்தல்

5 பாதுகாப்புச்சபையின் ஆலோசனையின்படி பொதுச்செயலாளரை தெரிவு செய்தல்

பாதுகாப்புச்சபை

11 பாதுகாப்புச்சபையின் உறுப்பு நாடுகள் எத்தனை? 15

12 பாதுகாப்புச்சபையின் நிரந்தர உறுப்பு நாடுகள் எத்தனை, அவை எவை?

5 சீனா, பிரான்ஸ், ரஸ்யா, பிரித்தானியா, ஐக்கிய அமெரிக்கா

13 நிரந்தரமற்ற 10 நாடுகளின் பதவிக்காலம் எவ்வளவு? 2 வருடம்

14 பாதுகாப்புச்சபையில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட எத்தனை வாக்குகள் வேண்டும்? 9

திரு.நா.வேலவேச்சந்திரன்

15 இரத்ததிகாரம் கொண்ட நாடுகள் எவை? நிரந்தர உறுப்பு நாடுகள் ஐந்தும்

16 பாதுகாப்புச்சபையின் அதிகாரங்களும் பணிகளும் எவை?

1 சர்வதேச சமாதானத்தையும் ஒற்றுமையையும் பேணல்

2 சர்வதேசப் பிரச்சினைகளுக்கு ஏதுவாக அமையும் சகல காரணிகளையும் ஆராய்தல்

3 ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக நடவடிக்கையெடுத்தல்

(பொருளாதாரத்தடை, போர்ப்பலத்தை பயன்படுத்தல்

4 ஆயுதப்பாவனைகளை கட்டுப்படுத்தும் பொருட்டு திட்டங்களை மேற்கொள்ளல்

நாட்டின் எப்பாகத்திலிருந்தும்
கற்பித்தல் அனுபவம் உள்ள திறமையான ஆசிரியர்களிடம்
கல்வி கற்க விரும்புகிறீர்களா

இதோ உங்களுக்கான அரிய சந்தர்ப்பம்

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk || www.lkedu.lk

76667-4945

Learn Easy கல்வி நிலையத்தில் நிகழ்நிலையாக

zoom Online class

76667-4945

அனைத்து வகுப்புகளுக்குமான அனுமதிக்கட்டணம் இலவசம்

Mobile	076667-4945
WhatsApp	+94 76667-4945
Viber	+94 76667-4945
Email	learneasy.lk@gmail.com
Web	www.learneasy.lk

FB Page - https://www.facebook.com/learneasylk

வகுப்புக்கள் தொடர்பான மேலதிக தகவல்களை
மேலுள்ள இலக்கத்திற்கு
WhatsApp செய்வதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்

www.lkedu.lk

பாடவேளை (20)

பொருளாதார மற்றும் சமூக சபை

01 பொருளாதார மற்றும் சமூக சபையின் உறுப்பு நாடகள் எத்தனை, அவை எவ்வாறு தெரிவு செய்யப்படும்?

54 .பதவிக்காலம் 3 வருடம். 3 வருடத்திற்கு ஒருமுறை 18 அங்கத்தவர்கள் பதவி விலக புதிய 18 அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

02 இதன் அதிகாரங்களும் பணிகளும் எவை?

1 மனித உரிமைகளைப் பாதுகாத்தல்

2 சர்வதேச மாநாடுகளை நடாத்துதல்

3 ஐக்கிய நாடுகளின் விசேட தாபனங்களுடன் உடன்படிக்கைகளை ஒழுங்குபடுத்தல்

4 சபை நடவடிக்கைகள் தெர்ர்பாக அரச சார்பற்ற அமைப்புக்களிடம் ஆலோசனை கேட்டல்

திரு.நா.செல்வச்சந்திரன்

03 சமூக பொருளாதார சபை உதவியினைப் பெற்றுக்கொள்ளும் இணைநிறுவனங்கள் எவை?

1 உணவு மற்றும் விவசாய அமைப்பு (FAO)

2 சர்வதேசத் தொழிலாளர் அமைப்பு (ILO)

3 ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி வேலைத்திட்டம் (UNDP)

4 ஐக்கிய நாடுகள் தாபனத்தின் சர்வதேச சிறுவர் நிதியம் (UNICEF)

5 ஐக்கிய நாடுகளது கல்வி, விஞ்ஞான மற்றும் கலாசார தாபனம் (UNESCO)

6 சர்வதேச நாணய நிதியம் (IMF)

7 உலக உணவு வேலைத்திட்டம் (WFP)

8 உலக சுகாதார அமைப்பு (WHO)

9 ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான ஆணையாளர் நாயகம் (UNHCR)

www.lkedu.lk

நம்பிக்கைப் பொறுப்புச் சபை

04 நம்பிக்கைப் பொறுப்புச்சபையின் உறுப்பினர்கள் யாவர்?

1 நம்பிக்கை ஆள்புலன்களை நிர்வகிக்கின்ற உறுப்பினர்கள்

2 நம்பிக்கை ஆள்புலன்களை நிர்வகிக்காத நிரந்தர உறுப்புடைய பாதுகாப்புச்சபை உறுப்புரிமை

3 பொறுப்பாண்மைச் சபையினால் 3 வருட காலப்பகுதிக்கென தெரிவு செய்யப்படும் உறுப்பினர்கள்

05 இதன் அதிகாரங்களும் பணிகளும் எவை?

1 நிர்வகிக்கின்ற அதிகாரசபையினால் சமர்ப்பிக்கப்படும் தீர்மானங்களை கருத்திற்கொள்ளல்

2 மனுக்களையேற்று நிர்வகிக்கின்ற அதிகார சபையுடனான கலந்தாலோசனையுடன் பரீட்சித்தல்

வி.நா.செல்வச்சந்திரன்

3 அந்த ஆள்புலன்களுக்குச் செல்லுதல்

06 சகல நம்பிக்கைப் பொறுப்புப் பிரதேசங்களும் தமது சுதந்திரத்தை நிலைநாட்டிக் கொண்ட ஆண்டு எது?

1994 (இறுதியாக பாலித்தீவு)

சர்வதேச நீதிமன்றம்

07 ஐக்கிய நாடுகள் சபையின் பிரதான நீதித்துறை நிறுவனம் எது?

சர்வதேச நீதிமன்றம்

08 சர்வதேச நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை எத்தனை? ஆவர்களின் பதவிக்காலம் எவ்வளவு?

9 பேர். 15 வருடங்கள்

www.lkedu.lk

09 சர்வதேச நீதிமன்றம் அமைந்துள்ள இடம் எது?

நெதர்லாந்தின் ஹேக் நகரில்

10 அதன் அதிகாரங்களும் பணிகளும் எவை?

1 ஐக்கிய நாடுகள் சபை அதன் ஏனைய நிறுவனங்களுக்கு நீதி ஆலோசனை வழங்கல்

2 அங்கத்துவ நாடுகள் மூலம் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்தல்

3 அங்கத்துவ நாடுகள் முன்வைக்கும் முறைப்பாடுகளுக்குரிய விசாரணைகளில் பங்குபற்றுவதாயின் சர்வதேச நீதிமன்றம் வழங்கம் தீர்ப்பையேற்றல்

செயலகம்

திரு.நா.மேல்வச்சந்திரன்

11 ஐக்கிய நாடுகள் சபையின் பிரதான நிர்வாகக் காரியாலயம் எது?

செயலகம்

12 செயலகத்திற்குப் பொறுப்பானவர் யார்? அவரின் பதவிக்காலம் எவ்வளவு?

பொதுச் செயலாளர். 05 வருடம். ஒருவர் இரண்டு தடவை பதவியில் இருக்கலாம்

13 இதன் அதிகாரங்களும் பணிகளும் எவை?

1 அமைப்பின் ஆண்டறிக்கையைத் தயாரித்து முன்வைத்தல்

2 ஐக்கிய நாடுகள் சபையின் அமைதிப்படையை நிர்வகித்தல்

3 பிரச்சினைத்தீரிவின் போது சமாதானத் தூதுவனாகத் தலையிடுதல்

4 ஐக்கிய நாடுகளின் விடயங்களுக்கேற்ற வகையிலான சர்வதேச மாநாடுகளைக் கூட்டுதல்

www.lkedu.lk

பாடவேளை (21)

ஐக்கிய நாடுகள் சமாதானத்தைப் பாதுகாப்பதற்காக மேற்கொண்ட முயற்சிகள்

01 உலக நாடுகளிடையே சமாதானத்தைப் பாதுகாப்பதில் ஐக்கிய நாடுகள் சபை எடுத்த முயற்சிகள் எவை?

1 சுயஸ் நெருக்கடி

2 வளைகுடா நெருக்கடி

3 கியூபா நெருக்கடி

1 சுயெஸ் நெருக்கடி

1956ல் எகிப்திய ஜனாதிபதி அப்துல் கமால் நாசர் பொதுவுடமைவாத கோட்பாட்டின்படி சுயெஸ் கால்வாயை தேசிய உடமையாக்கிய போது எழுந்த நெருக்கடி நிலையை ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புப் படையினர் அப்பகுதியிலிருந்த பிரித்தானிய, பிரான்ஸ் இஸ்ரேல் படையினரை அகற்றி சமாதானத்தை ஏற்படுத்தியமை.

திரு.நா.செல்வச்சந்திரன்

2 வளைகுடா நெருக்கடி

ஈராக்கின் எல்லையில் காணப்பட்ட ருபெயிலா கனிய எண்ணை வயலிலிருந்து குவைத் எண்ணையை உறிஞ்சுவதாக குற்றம் சாட்டி குவைத்தை ஈராக் ஆக்கிரமித்த போது ஐக்கிய நாடுகள் சபை படைகளை அனுப்பித் தடுத்தது.

3 கியூபா நெருக்கடி

1962ல் சோவியத் ரஷ்யாவினால் ஐக்கிய அமெரிக்காவுக்கு எதிராக கியூபாவில் ஏவுகணைகள் நிலைப்படுத்தப்பட்டன. அதற்குப் பதிலடியாக ஐக்கிய அமெரிக்கா ரஷ்யாவுக்கு எதிராக ஏவுகணைகளை துருக்கியில் நிலைப்படுத்தியது. ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் அமெரிக்க ஜனாதிபதி ஜோன்கென்னடியுடனும் ரஷ்யத் தலைவரான குருசேவுடனும் கலந்துரையாடிப் பிரச்சினைகளைத் தீர்த்தார்.

www.lkedu.lk

02 தற்கால உலகில் சமாதானத்தைப் பாதுகாப்பதற்காக ஐக்கிய நாடுகள் சபை எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் எவை?

1 பொருளாதாரத்தடை விதித்தல்

ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானத்திற்கு எதிராகச் செயற்படும் நாடுகளுக்கு பொருதாரத்தடை விதிப்பதன் மூலம் அந்தத் தீர்மானத்தை செயற்படுத்த சம்பந்தப்பட்ட நாடுகளை இணக்கத்திற்கு உட்படுத்த முடியும்.

2 அணு ஆயுதங்களைக் குறைக்கவும் அவற்றைக் கட்டுப்படுத்தவும் நடவடிக்கையெடுத்தல்

குறிப்பிட்ட நாடுகளில் புதிதாக அணு ஆயுதங்களை தயாரிப்பதாகக் தகவல் கிடைத்ததும் ஐக்கிய நாடுகள் சபையின் ஆணைக்குழுவை அனுப்பி நிலைமையைப் பரசீலிக்கின்றது. வடகொரியா, ஈரான் ஆகிய நாடகள் அணு ஆயுதங்கள் தயாரித்தபோது இவ்வாறான ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டன.

திரு.நா.வேல்வச்சுதன்

3 சமாதானப்படையை ஈடுபடுத்தல்

இரு பிரிவினரிடையே கடும் போர் ஏற்படக்கூடிய சந்தர்ப்பத்தில் நிலைமையைக் கட்டப்படுத்தும் பொருட்டு ஐக்கிய நாடுகள் சபையின் சமாதானப்படை ஈபடுபடுத்தப்படுகின்றது.

03 ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகம் அமைந்துள்ள இடம் எது?

நியூயோர்க்

பாடவேளை (22)

பின்வரும் இடங்களை உலகப்படத்தில் குறித்துக்காட்டுக.

நெதர்லாந்து, ஹேக் நகரம், நியூயோர்க், பேர்ள் துறைமுகம், ஹிரோசிமா, நாகசாகி, ஜேர்மன், பிரான்ஸ், ஆஸ்திரியா, பிரித்தானியா, இத்தாலி. ஆஸ்திரியா, போலந்து, ஐக்கிய அமெரிக்கா, ஜப்பான், செக்கோஸ்சிலோவாக்கியா, பேர்லின், பாரிஸ், டான்சிக் துறைமுகம்